SUPREME AUDIT INSTITUTION OF INDIA
लोकहितार्थ सत्यनिष्ठा
Dedicated to Truth in Public Interest

# இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை
# ‘SC/ST/SCC மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள்’

**தமிழ்நாடு அரசு**

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**2025ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 3**

**(செயலாக்கத் தணிக்கை - சிவில்)**

# இந்திய தணிக்கைத் தலைவரின் அறிக்கை
# ‘SC/ST/SCC மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள்’
# மீதான செயலாக்கத் தணிக்கை

**தமிழ்நாடு அரசு**

**ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை**

**2025ஆம் ஆண்டிற்கான அறிக்கை எண் 3**

## பொருளடக்கம்


| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| முகவுரை | | vii |
| நிர்வாகச் சுருக்கம் | | ix |
| **அத்தியாயம் I – முன்னுரை** | | |
| பின்னணியம் | 1.1 | 1 |
| SC/ST மாணவர்களுக்கான மத்திய அரசின் உதவித்தொகை திட்டங்கள் | 1.2 | 4 |
| AD & TW துறையின் நிறுவன அமைப்பு | 1.3 | 4 |
| தணிக்கை அணுகுமுறை மற்றும் முறைமை | 1.4 | 5 |
| ஏற்பு | 1.5 | 7 |
| தணிக்கை கண்டுபிடிப்புகள் | 1.6 | 7 |
| **பிரிவு - அ<br>ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை** | | |
| **அத்தியாயம் II - ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை** | | |
| முன்னுரை | 2.1 | 10 |
| திட்டத்தின் முக்கிய அம்சங்கள் | 2.2 | 10 |
| செயல்முறை | 2.3 | 11 |
| பயனாளிகளின் உள்ளடக்கம் | 2.4 | 14 |
| உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு | 2.5 | 19 |
| உதவித்தொகை செலுத்தம் | 2.6 | 22 |
| Pre MS-SCன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 2.7 | 24 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| அத்தியாயம் III - ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை | | |
| முன்னுரை | 3.1 | 28 |
| திட்டத்தின் முக்கிய அம்சங்கள் | 3.2 | 28 |
| செயல்முறை | 3.3 | 29 |
| பயனாளிகளின் உள்ளடக்கம் | 3.4 | 31 |
| திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை | 3.5 | 36 |
| உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு | 3.6 | 38 |
| உதவித்தொகை வழங்கல் | 3.7 | 42 |
| தகுதியற்ற/அதிகப்படியான உதவித்தொகை செலுத்தம் | 3.8 | 45 |
| ஒன்றுக்கு மேற்பட்ட உதவித்தொகை பெற்ற மாணவர்கள் | 3.9 | 50 |
| PMS-SCன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 3.10 | 53 |
| பிரிவு – ஆ<br>பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை | | |
| அத்தியாயம் IV - பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை | | |
| முன்னுரை | 4.1 | 55 |
| திட்டத்தின் முக்கிய அம்சங்கள் | 4.2 | 56 |
| செயல்முறை | 4.3 | 57 |
| பயனாளிகளின் உள்ளடக்கம் | 4.4 | 57 |
| திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை | 4.5 | 60 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு | 4.6 | 61 |
| உதவித்தொகை வழங்கல் | 4.7 | 64 |
| கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு | 4.8 | 65 |
| அத்தியாயம் V - பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை | | |
| முன்னுரை | 5.1 | 67 |
| திட்டத்தின் முக்கிய அம்சங்கள் | 5.2 | 68 |
| செயல்முறை | 5.3 | 69 |
| பயனாளிகளின் உள்ளடக்கம் | 5.4 | 70 |
| திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை | 5.5 | 72 |
| உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு | 5.6 | 74 |
| உதவித்தொகையின் வழங்குகை | 5.7 | 76 |
| தகுதியற்ற/அதிகப்படியான உதவித்தொகை செலுத்தம் | 5.8 | 78 |
| ஒன்றுக்கு மேற்பட்ட உதவித்தொகை பெற்ற மாணவர்கள் | 5.9 | 78 |
| பிரிவு இ<br>மாநில நிதியுதவி பெறும் கல்வி உதவித்தொகை திட்டங்கள் | | |
| அத்தியாயம் VI - மாநில நிதியுதவித் திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களின் அமலாக்கம் | | |
| முன்னுரை | 6.1 | 82 |
| மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம் | 6.2 | 82 |

| | பத்தி | பக்கம் |
|---|---|---|
| மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம் | 6.3 | 87 |
| சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளில் VI மற்றும் XI வகுப்புகளில் மாணவர்களின் சேர்க்கை | 6.4 | 88 |
| முழுநேர Ph.D வல்லுநர்களுக்கான ஊக்கத்தொகை | 6.5 | 91 |
| மாணவிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை திட்டம் | 6.6 | 91 |

## இணைப்புகள்


| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 1.1 | பள்ளிக் கல்வியின் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி நிலைகளில் 2017-22 ஆண்டுகளில் மொத்த சேர்க்கை விகிதம் | 95 |
| 1.2 | மக்கள்தொகை 2011ன் அடிப்படையில் 2017-22 ஆண்டுகளில் உயர்கல்வி நிலையில் (18 - 23 வயதினர்) மொத்த சேர்க்கை விகிதம் | 97 |
| 1.3 | தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களின் பட்டியல் | |
| | (i) SC மாணவர்களுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 98 |
| | (ii) SC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 100 |
| | (iii) பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 102 |
| | (iv) பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 103 |
| | (v) SCC மாணவர்களுக்கான மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம் | 105 |
| 2.1 | SC/ST மாணவர்களுக்கான ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்களில் பங்கேற்காத பள்ளிகள் | 106 |
| 2.2 | மாணவர்கள் இடைநிறுத்தம் தொடர்பான ஆண்டு வாரியான பட்டியல் | 107 |
| 2.3 | பாலினம், பள்ளிக் கல்வி நிலை மற்றும் சமூகப் பிரிவு அடிப்படையிலான பள்ளிப் படிப்பு இடைநிறுத்தம் விவரங்கள் | 108 |
| 2.4 | (அ) SC மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியற்ற கல்வி உதவித்தொகை<br>(ஆ) ST மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியற்ற கல்வி உதவித்தொகை<br>(இ) SCC மாணவர்களுக்கு வழங்கப்பட்ட அனுமதியற்ற உதவித்தொகை | 109 |

| இணைப்பு எண் | விவரங்கள் | பக்கம் எண் |
|---|---|---|
| 2.5 | (அ) 2017-23 ஆண்டுகளில் தாமதமாக வழங்கப்பட்ட Pre MS-SC மற்றும் PMS-SC உதவித்தொகைகள் | 110 |
| | (ஆ) தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உதவித்தொகை வழங்கியதில் ஏற்பட்ட தாமதம் - SC பயனாளிகள் | 111 |
| 2.6 | தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் இருந்த சிக்கல்கள் காரணமாக வழங்கப்படாமல் இருந்த உதவித்தொகை | 112 |
| 3.1 | தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படுவதற்கு முன்னர் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உதவித்தொகை விவரங்கள் | 113 |
| 3.2 | SC/ST/SCC பயனாளிகளால் பெறப்பட்ட போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை மற்றும் Ph.Dகான ஊக்கத்தொகை | 114 |
| 4.1 | (அ) உதவித்தொகை வழங்கியதில் 2017-23 காலகட்டத்தில் காணப்பட்ட தாமதம்: Pre MS-ST மற்றும் PMS-ST உதவித்தொகைகள் | 115 |
| | (ஆ) தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உதவித்தொகை வழங்கியதில் காணப்பட்ட தாமதம் - ST பயனாளிகள் | 116 |
| 6.1 | மாநில நிதியுதவி உதவித்தொகை திட்டங்களில் பயனாளிகளின் எண்ணிக்கை மற்றும் நிதி விவரங்கள் | 117 |
| | சுருக்கங்களின் சொற்களஞ்சியம் | 118 |

# முகவுரை

மார்ச் 2023-உடன் முடிந்த ஆண்டிற்கான இத்தணிக்கை அறிக்கை, இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 151(2)வது பிரிவின் கீழ் விதிக்கப்பட்டுள்ளவாறு தமிழ்நாடு ஆளுநரிடம் சமர்ப்பிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ளது.

இந்திய தணிக்கைத் தலைவரின் இவ்வறிக்கை தமிழ்நாட்டில் 'SC/ST/SCC மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகை திட்டங்கள்' மீதான செயலாக்கத் தணிக்கையின் முடிவுகளை உள்ளடக்கியுள்ளது.

இவ்வறிக்கையில், 2017-23 ஆண்டுகளின் கணக்குகளை சோதனை தணிக்கை செய்யும்போது கண்டறியப்பட்ட நேர்வுகளும், முந்தைய ஆண்டுகளில் கண்டறியப்பட்டு முந்தைய ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கைகளில் சேர்க்கப்படாத நேர்வுகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

இந்திய தணிக்கைத் தலைவரால் வெளியிடப்பட்ட தணிக்கைத் தரங்களுக்கு இணங்கும் வகையில் தணிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மொழிமாற்றம் செய்யப்பட்டுள்ள இவ்வறிக்கையில் ஐயம் ஏதும் ஏற்படின், ஆங்கில அறிக்கையே அதிகாரப்பூர்வமானது என்பதை கருத்தில் கொள்ள வேண்டும்.

# நிர்வாகச் சுருக்கம்

# நிர்வாகச் சுருக்கம்

## இந்த தணிக்கையை ஏன் மேற்கொண்டோம்?

இந்திய அரசியலமைப்புச் சட்டம் நலிவுற்ற பிரிவினரின், குறிப்பாக, ஆதி திராவிடர் (Scheduled Caste-SC) மற்றும் பழங்குடியினரின் (Scheduled Tribe-ST) கல்வி மற்றும் பொருளாதார நலன்களை தனிப்பட்ட கவனத்துடன் மேம்படுத்துமாறு மாநிலத்தை அறிவுறுத்துகிறது. அதன்படி, SC/ST மாணவர்களின் கல்வியறிவு விகிதம் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக, மாநிலத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையானது, தங்கும் வசதி கொண்ட பல்வேறு பள்ளிகள் மற்றும் விடுதிகளை நடத்தி வருகிறது. மேலும், மத்திய அரசின் நிதியுதவி திட்டங்கள் (Centrally Sponsored Schemes-CSS) மற்றும் மாநில நிதியுதவி திட்டங்களின் கீழ் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது.

அண்மையில் மத்திய அரசால் திருத்தியமைக்கப்பட்ட CSS திட்டங்கள், ஏழ்மை நிலையிலுள்ள SC/ST குடும்பங்களுக்கு மாற்றத்தை ஏற்படுத்துதல், உரிய நேரத்தில் கல்வி உதவித்தொகை வழங்குதல், விரிவான பொறுப்புடைமை, தொடர் கண்காணிப்பு மற்றும் முழுமையான வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டிருந்தது. எனவே, 2017-23 காலகட்டத்திற்கான CSS மற்றும் மாநில நிதியுதவி கல்வி உதவித்தொகை திட்டங்களின் அமலாக்கத்தை உள்ளடக்கிய இச்செயலாக்கத் தணிக்கை CAGயால் மேற்கொள்ளப்பட்டது. இத்தணிக்கையின் நோக்கங்கள் (1) பயனாளிகளை அடையாளம் காண்பது தொடர்பான திட்டமிடல் வலுவானதாகவும் விரிவானதாகவும் இருந்ததா (2) நிதியளிப்பு, அதற்கான கால வரம்பு மற்றும் நிதிப் பயன்பாடு உள்ளிட்ட நிதி மேலாண்மை திறம்படவும் மற்றும் திட்ட நோக்கங்களுக்கு ஒத்ததாக இருந்தனவா (3) திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டனவா மற்றும் (4) திட்டங்களை செயல்படுத்துவதில் முறையான கண்காணிப்பு அமைப்பு இருந்ததா என்பவற்றை உறுதி செய்வதேயாகும்.

## முக்கிய தணிக்கை முடிவுகள்

இத்திட்டங்கள் குறித்த போதுமான விளம்பரம் இல்லாததால், தகுதியுள்ள SC/ST மாணவர்கள் இத்திட்டத்தில் சேர்க்கப்படவில்லை. தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், 2019-22 காலகட்டத்தில், SC/ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்களை சராசரியாக 46 மற்றும் 39 விழுக்காடு பள்ளிகள் பெறவில்லை.

ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் திட்டங்களில், 2019-23 காலகட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுள்ள SC மாணவர்களின் விழுக்காடு முறையே 21 முதல் 52 விழுக்காடு வரையாகவும் மற்றும் 20 முதல் 29 விழுக்காடு வரையாகவும் இருந்தது. அதே காலகட்டத்தில்,

ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் திட்டங்களில் சேர்க்கப்படாத தகுதியுள்ள ST மாணவர்களின் விழுக்காடு முறையே 35 முதல் 55 விழுக்காடு வரையாகவும் மற்றும் 30 முதல் 42 விழுக்காடாகவும் இருந்தது.

ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட்-மெட்ரிக் கல்வி உதவித்தொகைகள் பெற 2017-22 ஆண்டுகளில் அனுமதிக்கப்பட்டிருந்த 2,901 SC/ST மாணவர்கள், அடுத்த ஆண்டில் கல்வியைத் தொடரவில்லை/நீக்கப்பட்டனர்.

தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்/பள்ளிகளில், ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட்-மெட்ரிக் உதவித்தொகைக்காக அனுமதிக்கப்பட்டிருந்த 9,076 விண்ணப்பங்களின் மீதான நேரடி ஆய்வு, 2,569 விண்ணப்பங்களில் (28 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது.

நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ், தனியார் கல்வி நிறுவனங்களால் மேற்கொள்ளப்பட்ட மாணவர் சேர்க்கைக்கான செயல்முறையில் வெளிப்படைத்தன்மை இல்லாமை, தன்னிச்சையான செயல்பாடு ஆகியவை காணப்பட்டன. மேலும், மாணவர்களின் சேர்க்கையின் போது நிர்ணயிக்கப்பட்ட நடைமுறை பின்பற்றப்பட்டதா என்பதை துறை உறுதி செய்யத் தவறியதன் விளைவாக தகுதியற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட நேரிட்டது. இது திட்ட வழிகாட்டுதல்களை மீறுவதாக இருந்தது.

தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் காலம் தாழ்த்தப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்டிருந்த 36,510 SC/ST நேர்வுகளுக்கு, 2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட தொகையானது ₹7.28 கோடியாக இருந்தது. காலதாமதமானது ஒரு மாதம் முதல் ஓராண்டிற்கும் மேலாக இருந்தது.

மாணவர்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்பட்டன, பரிவர்த்தனை நிறுத்தம் செய்யப்பட்டன அல்லது இத்தகைய கணக்கு இல்லை போன்ற காரணங்களால், 2017-23 காலகட்டத்தில், 3,530 SC/ST/SCC பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில் கல்வி உதவித்தொகையாக ₹1.61 கோடி செலுத்தப்படாமல் திருப்பி அனுப்பப்பட்டது.

TNeGAன் 2022-23ஆம் ஆண்டிற்கான தரவுகளின் மீதான பகுப்பாய்வு, போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டத்தில், 160 SC பயனாளிகள் மாநிலப் பங்கான 40 விழுக்காட்டினை இரண்டு முறை பெற்றிருந்ததையும், 253 ST பயனாளிகளுக்கான கல்விக் கட்டணம் இரண்டு முறை செலுத்தப்பட்டிருந்ததையும் வெளிப்படுத்தியது.

மத்திய அரசின் நிதியுதவி பெறும் கல்வி உதவித்தொகை திட்டங்களின் பயனாளிகளுள், சிறுபான்மையினருக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை, முதல் தலைமுறை பட்டதாரி கல்வி கட்டணச் சலுகை, Ph.Dக்கான ஊக்கத்தொகை போன்ற பிற உதவித்தொகைகளையும் பெற்ற பல நேர்வுகள் காணப்பட்டன.

மத்திய நிதியைப் பெறத் தகுதியற்ற 2,576 SCC மாணவர்களுக்கு 2021-23 ஆண்டுகளில் மத்திய பங்கான 60 விழுக்காடு உதவித்தொகை வழங்கப்பட்டதால் ₹3.64 கோடி தவறாக செலுத்த நேரிட்டது.

ஒரு வலுவான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு இணையவழி குறை நிவர்த்தி செயல்முறை ஆகியவை இல்லாததாலும், மதிப்பீடு/சமூக தணிக்கை நடத்தப்படாததாலும், திட்டங்கள் போதுமான அளவில் கண்காணிக்கப்படவில்லை. மேலும், மாவட்ட அளவில் நிர்ணயிக்கப்பட்ட ஆய்வுகள் மற்றும் தனியார் நிறுவனங்களின் வருடாந்திர ஆய்வுகளும் மேற்கொள்ளப்படவில்லை.

## நாங்கள் என்ன பரிந்துரைக்கிறோம்?

கீழே கொடுக்கப்பட்டுள்ளபடி ஒன்பது பரிந்துரைகளை வழங்கியுள்ளோம்:

மத்திய அரசின் நிதியுதவித் திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை பெறத் தகுதிபெறும் மிக ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களில் இருந்து தகுதியுள்ள SC/ST மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு, பயனாளிகளை முனைப்புடன் அடையாளம் காணவும், அதற்கான விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

SC/ST மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை அனுமதிக்கும் முன் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கைக்கான செயல்முறையினை நிறுவனங்கள் சுயவிருப்பற்று வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்துவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

உதவித்தொகை திட்டங்களை மேலும் சீரமைத்து திறம்பட செயல்படுத்த ஒரு வலுவான தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் குறை நிவர்த்தி அமைப்பினை அரசு விரைவில் நிறுவ வேண்டும்.

உயர்நிலைப் பள்ளி அளவில் இடைநிறுத்தம் செய்த மாணவர்களை அடையாளம் கண்டு, இடைநிறுத்தம் செய்ததற்கான காரணங்களை கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இம்மாணவர்கள் உயர்கல்வியை தொடரும் பொருட்டு அவர்களை மீண்டும் கல்வியில் இணையும்படி ஊக்குவிக்கவும் அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

தகுதியுள்ள SC/ST மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதை உறுதிசெய்ய அதற்கான விண்ணப்பங்களை அரசு ஆராய வேண்டும். மேலும், இம்மாணவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள், தணிக்கை நோக்கங்களுக்காக குறிப்பிட்ட காலம் வரை வைத்திருக்க வேண்டும்.

அந்தந்த கல்வியாண்டிலேயே பயனாளிகளுக்கு உதவித்தொகை உரிய நேரத்தில் இயக்குநரகங்களால் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும், இவை வழங்கப்படுவதற்கான முழு செயல்முறையும்

விரைவில் ஆதார் அடிப்படை முறையில் மாற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.

உரிய உதவித்தொகை வழங்குவதற்கான செயல்முறையை ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்க்கும் பொருட்டு, இவ்வமைப்பிலுள்ள இடைவெளிகளை அரசு சரிசெய்ய வேண்டும். கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையும் மாணவர்களிடம் இருந்து விரைவில் வசூலிக்கப்பட வேண்டும்.

தனியார் பள்ளி கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிக கட்டணம் வசூலிப்பது நடைமுறையில் இருக்கும் வழிகாட்டுதல்களை மீறுவதோடு, தவிர்த்திருக்கக்கூடிய செலவினங்களுக்கு வழிவகுக்கும். இவ்வாறு தவறிழைக்கும் சிறப்பு பெயர் பெற்ற பள்ளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

SC/ST/SCC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகையின் பயனாளிகளாக இருந்தாலும், தகுதியான Ph.D. வல்லுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க திட்ட வழிகாட்டுதல்களை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.

## தணிக்கை பரிந்துரைகளுக்கு நிர்வாகத்தின் பதில்

தணிக்கை குறிப்புகளுக்கு பதிலளிக்கையில் தேவையான இடங்களில் தகுந்த திருத்த நடவடிக்கை எடுப்பதாக அரசு உறுதியளித்தது. இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சிக்கல்களைத் தீர்க்க அரசால் எடுக்கப்பட்ட/எடுக்கும்படி முன்மொழியப்பட்ட திருத்த நடவடிக்கையை தணிக்கை ஏற்றுக்கொள்கிறது.

# அத்தியாயம் I

# முன்னுரை

# அத்தியாயம் I

# முன்னுரை

## 1.1 பின்னணியம்

இந்திய அரசியலமைப்புச் சட்டம், பகுதி-IVன்[1] பிரிவு 46ல் நலிந்த பிரிவினரின், குறிப்பாக, ஆதி திராவிடர் (Scheduled Caste - SC) மற்றும் பழங்குடியினரின் (Scheduled Tribe - ST) கல்வி மற்றும் பொருளாதார மேம்பாட்டின் மீது தனிப்பட்ட கவனம் செலுத்துமாறு மாநிலத்தை அறிவுறுத்துகிறது. பிரிவு 38 (2)ன்படி, அரசு, தனிமனிதர்களுக்கு இடையே மட்டுமன்றி வெவ்வேறு பகுதிகளில் வாழ்கின்ற அல்லது வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களில் ஈடுபட்டிருக்கின்ற மக்கள் பிரிவினருக்கிடையே, வருமானம், சமுதாயப்படிநிலை, வளவசதிகள், வாய்ப்பு நலன்கள் ஆகியவற்றிலுள்ள ஏற்றத்தாழ்வுகளை இயன்ற அளவு குறைப்பதற்கு முனைந்து முயலுதல் வேண்டும்.

இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி (2011), தமிழகத்தின் மொத்த மக்கள்தொகையில் SC (ஆதி திராவிடர்[2] உட்பட) மற்றும் STகள் முறையே, இருபது விழுக்காடு மற்றும் ஒரு விழுக்காடாக இருந்தனர். SC/ST மக்களின் பொருளாதார நிலையை உயர்த்தவும், அவர்களின் வாழ்க்கைத் தரத்தை சமூகத்தின் மற்ற பிரிவினருக்கு இணையாக மேம்படுத்தவும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை (Adi Dravidar and Tribal Welfare - AD&TW துறை), 1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது[3]. SC/ST மாணவர்களின் கல்வியறிவு விகிதம் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக, தங்கும் வசதி கொண்ட பல்வேறு பள்ளிகள் மற்றும் விடுதிகளை AD&TW துறை நடத்தி வருகிறது. மேலும் மத்திய அரசு நிதியுதவி திட்டங்கள் (Centrally Sponsored Schemes - CSS) மற்றும் மாநில நிதியுதவி திட்டங்களின் கீழ் பல்வேறு உதவித்தொகை திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களுக்கு கூடுதலாக, கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் (Adi Dravidar Converted to Christianity - SCC) மாணவர்களால் மத்திய அரசின் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டத்தின் பயன்களைப் பெற இயலாததால், AD&TW துறையானது, இம்மாணவர்களுக்கு ஒரு தனிப்பட்ட போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம் மூலம் உதவித்தொகையினை வழங்குகிறது.

---

இவ்வறிக்கையில் உபயோகிக்கப்பட்ட சுருக்கச் சொற்றொடர்களின் திரட்டு 118ஆம் பக்கத்தில் உள்ளது.

1 அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகள்.

2 ஆதி திராவிடர், அதாவது, திராவிட நிலத்தின் பூர்வீக அல்லது பழங்குடி மக்கள் என்பது தலித்துகளை குறிக்க தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும். 2011ஆம் ஆண்டின் இந்திய மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் SC மக்கள்தொகை தோராயமாக பாதியாக இருந்தது.

3 சமூக நலத் துறையை இரண்டாகப் பிரித்ததன் மூலம்.

### 1.1.1 SC/STகளின் மக்கள் தொகை மற்றும் கல்வியறிவு விகிதங்களின் ஒப்பீடு

இந்தியாவிலும், தமிழ்நாட்டிலும் உள்ள SC/STகளின் மக்கள்தொகை மற்றும் கல்வியறிவு விகிதங்களின் ஒப்பீடு, **விளக்கப்படங்கள் 1.1** மற்றும் **1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.



விளக்கப்படம் 1.1: இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் மக்கள்தொகையின் ஒப்பீடு



விளக்கப்படம் 1.2: இந்தியா மற்றும் தமிழ்நாட்டின் கல்வியறிவு விகிதங்களின் ஒப்பீடு

(ஆதாரம்: இந்திய மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2011)

ST பிரிவினரின் கல்வியறிவு விகிதத்தைத் தவிர்த்து, தமிழ்நாட்டின் மொத்த மக்கள்தொகை மற்றும் SC மக்கள்தொகையின் கல்வியறிவு விகிதம் தேசிய விகிதங்களை விட அதிகமாக இருப்பது **விளக்கப்படம் 1.2ல்** இருந்து தெரிய வருகிறது.

### 1.1.2 பள்ளிக் கல்வியில் உயர்நிலை மற்றும் மேல்நிலைக் கல்வி நிலையில் உள்ள SC/ST மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம்

மொத்தச் சேர்க்கை விகிதம் (Gross Enrolment Ratio - GER), ஒரு குறிப்பிட்ட கல்வி நிலையின் சேர்க்கை எண்ணிக்கையை அந்த நிலைக்கு பொருந்தக்கூடிய வயதினரின் மக்கள்தொகையுடன் ஒப்பிடுகிறது. தமிழ்நாட்டில், 2017-22 ஆண்டுகளில், கல்விக்கான ஒருங்கிணைந்த மாவட்ட தகவல் அமைப்பு +ன் படி (UDISE +)[4], உயர்நிலை (IX மற்றும் X வகுப்புகள்) மற்றும் மேல்நிலை (XI மற்றும் XII வகுப்புகள்) பள்ளி கல்வி நிலையில் இருந்த SC/ST மாணவர்களின் GER, **இணைப்பு 1.1ல்**

[4] UDISE+ என்பது, மத்திய அரசின் கல்வி அமைச்சகத்தின் பள்ளி கல்வி மற்றும் எழுத்தறிவுத் துறையால் தொடங்கப்பட்ட மேலாண்மைத் தகவல் மையம் ஆகும். இது 14.89 இலட்சத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள், 95 இலட்சம் ஆசிரியர்கள் மற்றும் 26.5 கோடி குழந்தைகளை உள்ளடக்கியது.

கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் இக்காலக்கட்டத்திற்கான சராசரி GER **விளக்கப்படம் 1.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 1.3: 2017-22 ஆண்டுகளில் உயர் நிலை மற்றும் மேல் நிலைப் பள்ளிக் கல்வியின் சராசரி GER**




(ஆதாரம்: வருடாந்திர UDISE + 2017-22 காலகட்டத்தில் பெறப்பட்ட அறிக்கைகள்)

தமிழ்நாட்டில், 2017-22 காலகட்டத்தில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிக் கல்வியில் இருந்த அனைத்து சமூகத்தினர், SC மற்றும் ST மாணவர்களின் GER, தேசிய சராசரியை விட தொடர்ந்து அதிகமாக இருந்து வந்தது மேலே கொடுக்கப்பட்டுள்ள விளக்கப்படத்திலிருந்து தெரிய வருகிறது.

### 1.1.3 உயர்கல்வி நிலையில் SC/ST மாணவர்களின் மொத்த சேர்க்கை விகிதம்

உயர்கல்வி[5] என்பது 12 வருட பள்ளிப்படிப்பு அல்லது அதற்கு சமமான கல்வியை முடித்த பின்னர் பெறக்கூடிய, குறைந்தபட்சம் ஒன்பது மாதங்களைக் கொண்ட கல்வி (முழுநேரம்) அல்லது 10 வருட பள்ளிப்படிப்பை முடித்த பிறகு பெறக்கூடிய, குறைந்தபட்சம் மூன்று வருட கால அளவிலான கல்வி என வரையறுக்கப்பட்டுள்ளது.

தகுதியுள்ள மாணவர்களுக்கு நிதி உதவியை வழங்குவது/இணை நிதியுதவி அளிப்பது மட்டுமின்றி, உயர்கல்வியில் SC/ST மாணவர்களின் GER-ஐ கணிசமாக உயர்த்துவதும்[6] SC/ST மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களின் நோக்கமாகும்.

இந்தியாவில், உயர்கல்வியின் பல்வேறு குறிகாட்டிகள் பற்றிய விரிவான தரவுகளை வழங்கும் 'அனைத்திந்திய உயர்கல்வி ஆய்வு' (AISHE) குறித்த அறிக்கையை ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசு[7] வெளியிடுகிறது.

[5] பொது, தொழிற்பயிற்சி, தொழில் சார்ந்த அல்லது தொழில்நுட்பக் கல்வி ஆகியன.

[6] PMS-SC வழிகாட்டுதல்கள், 2021ன் படி, உயர்நிலைக் கல்வியில் SCகளின் GERஐ அடுத்த ஐந்து ஆண்டுகளில் 23 விழுக்காட்டிலிருந்து தேசிய சராசரியான 27 விழுக்காடாக உயர்த்துவது அரசின் நோக்கமாகும். அதேபோன்று, அடுத்த ஐந்து ஆண்டுகளில் மேல்நிலை கல்வியிலும் SCகளின் GER உயர்த்தப்பட வேண்டும். இந்த இலக்கை அடைய செயல்படுத்தும் முகமைகள் தனிப்பட்ட கவனம் செலுத்துவது அவசியமாக இருந்தது.

[7] மனிதவள மேம்பாட்டு அமைச்சகம், உயர்கல்வித் துறை.

AISHEன் படி, 2017-22 ஆண்டுகளில், உயர்கல்வியில் SC/ST மாணவர்களின் GER, **இணைப்பு 1.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது மற்றும் அந்தக் காலக்கட்டத்திற்கான சராசரி GER, **விளக்கப்படம் 1.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 1.4: 2017-22 ஆண்டுகளில் மேல் படிப்பில் சராசரி GER**




(ஆதாரம்: AISHE 2021-22)

உயர்கல்வியில் தமிழ்நாட்டின் GER தொடர்ந்து அதிகமாகவே இருந்து வருவதையும், 2017-22 ஆண்டுகளில் தேசிய சராசரியை விட மிக அதிகமாக இருந்ததையும் **இணைப்பு 1.2** மற்றும் **விளக்கப்படம் 1.4** வெளிப்படுத்துகிறது.

## 1.2 SC/ST மாணவர்களுக்கான மத்திய அரசின் உதவித்தொகை திட்டங்கள்

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மூலம், ‘ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை’ (Pre MS-SC) மற்றும் ‘ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்’ (PMS-SC) ஆகிய CSSகளை, SC மாணவர்களின் கல்விக்காக அவர்களின் பெற்றோர்களுக்கு நிதியுதவி வழங்கும் நோக்குடன் செயல்படுத்தப்படுகிறது.

இதேபோல், மத்திய பழங்குடியினர் நல அமைச்சகம், மாநிலங்கள்/யூனியன் பிரதேசங்கள் மூலம், ‘ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை (Pre MS-ST) மற்றும் இந்தியாவில் உயர்கல்வியினைத் தொடரும் ST மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை (PMS-ST) ஆகியவற்றிற்கான CSSஐ செயல்படுத்துகிறது.

## 1.3 AD&TW துறையின் நிறுவன அமைப்பு

AD&TW துறைக்கு அரசின் செயலாளர் தலைமை வகிக்கிறார். மாநில அளவில், ஆதி திராவிடர் நல இயக்குநரகம் (Directorate of Adi Dravidar

Welfare - ADWன் இயக்ககம்) மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரகம்[8] (Directorate of Tribal Welfare - TWன் இயக்ககம்) முறையே ஆதி திராவிடர் நல இயக்குநர் (Director of Adi Dravidar Welfare - DADW) மற்றும் பழங்குடியினர் நல இயக்குநர் (Director of Tribal Welfare - DTW) ஆகியோரால் தலைமை வகிக்கப்படுகின்றன.

மாவட்ட அளவில், மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் (District Adi Dravidar and Tribal Welfare Officers - DADTWO) மற்றும் திட்ட அலுவலர்கள் (பழங்குடியினர் நலம்) SC/STகளின் நலனுக்காக பணியாற்றுகின்றனர். மாவட்ட ஆட்சியர்கள் AD&TW துறை அதிகாரிகளுடன்[9] ஒருங்கிணைந்து அனைத்து SC/ST நலத் திட்டங்களையும் கண்காணிக்கின்றனர்.

## 1.4 தணிக்கை அணுகுமுறை மற்றும் முறைமை

### தணிக்கை நோக்கங்கள்

பின் வருவனவற்றை உறுதி செய்வதே இந்த PAன் நோக்கங்கள் ஆகும்

- பயனாளிகளை அடையாளம் காண்பது தொடர்பான திட்டமிடல் செயல்முறை வலுவானதாகவும் விரிவானதாகவும் இருந்ததா;
- நிதியளிப்பு, அதற்கான கால வரம்பு மற்றும் நிதிப் பயன்பாடு உள்ளிட்ட நிதி மேலாண்மை திறம்படவும் மற்றும் திட்ட நோக்கங்களுக்கு ஒத்ததாக இருந்தனவா;
- திட்டங்கள் திறம்பட செயல்படுத்தப்பட்டனவா மற்றும்
- திட்டங்களை செயல்படுத்துவதில் முறையான கண்காணிப்பு அமைப்பு இருந்ததா.

### தணிக்கை அளவுகோல்கள்

பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களை மதிப்பிடுவதற்கான தணிக்கை அளவுகோல்கள் கீழே கொடுக்கப்பட்டவற்றிலிருந்து பெறப்பட்டன:

- இந்தியாவில் கல்வி பயிலு SC[10]/ST[11] மாணவர்களுக்கு வழங்கப்படும் ப்ரி மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைகளுக்கான CSSகளின் வழிகாட்டுதல்கள்;

---

8 01-04-2018 முதல் முழு நிதி மற்றும் நிர்வாக கட்டுப்பாட்டுடன் ஆதி திராவிடர் நல இயக்குநரகத்திலிருந்து பிரிக்கப்பட்டது.

9 DADTWOகள், PO (TW) மற்றும் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக்கழகத்தின் மாவட்ட மேலாளர்கள்.

10 மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்டது. (அ) Pre MS-SC திட்டத்திற்காக: செப்டம்பர் 2017, செப்டம்பர் 2019 மற்றும் மார்ச் 2022ல் (2021-26 காலக்கட்டத்திற்காக) (ஆ) PMS-SC திட்டத்திற்காக: ஏப்ரல் 2018 மற்றும் மார்ச் 2021 (2020-26 காலகட்டத்திற்காக).

11 மத்திய பழங்குடியினர் நல அமைச்சகத்தால் வழங்கப்பட்டது. (அ) Pre MS-ST திட்டத்திற்காக: ஜூலை 2010 மற்றும் 2021-26 காலக்கட்டத்திற்காக (ஆ) PMS-ST திட்டத்திற்காக: ஜூலை 2010 மற்றும் ஏப்ரல் 2022ல்.

- பல்வேறு மாநில கல்வி நிதியுதவித் திட்டங்களுக்கான தமிழ்நாடு அரசின் (GoTN) திட்ட வழிகாட்டுதல்கள்; மற்றும்
- கொள்கை குறிப்புகள், AD&TW துறையின் வரவு செலவு செயலாக்கத் திட்டங்கள், அரசாங்க உத்தரவுகள் மற்றும் தமிழ்நாடு அரசால் வெளியிடப்படும் துறைசார்ந்த அறிவுறுத்தல்கள்.

### தணிக்கையின் பரப்பு மற்றும் மாதிரி தேர்ந்தெடுப்பு

இந்த PA, ஏப்ரல் 2017 முதல் மார்ச் 2023 வரையிலான காலக்கட்டத்தில் SC/ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைகளுக்கான CSS திட்டங்களின் அமலாக்கத்தை பற்றியது. களத் தணிக்கையானது, ஜூலை 2022 முதல் டிசம்பர் 2023 வரை மேற்கொள்ளப்பட்டது. செயலகம், ADWன் இயக்ககம், TWன் இயக்ககம், தெரிவுசெய்யப்பட்ட எட்டு மாவட்டங்களிலுள்ள[12] DADTWOகளின் அலுவலகங்கள் மற்றும் மேற்கூறப்பட்டுள்ள மாவட்டங்களிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 242 கல்வி நிறுவனங்களில்[13] இருந்த பதிவுகள் மற்றும் பிற ஆவணங்களின் மீது தணிக்கை ஆய்வு மேற்கொள்ளப்பட்டது (**இணைப்பு 1.3**).

மேற்கூறப்பட்ட நான்கு CSSகளுக்கு கூடுதலாக, இந்த PAல் உட்படுத்தப்பட்ட, மாநில நிதியுதவி பெறும் ஐந்து கல்வி உதவித்தொகை/ஊக்கத்தொகை திட்டங்கள் **அத்தியாயம் VIல்** கொடுக்கப்பட்டுள்ளன.

### தணிக்கை முறைமை

பல்வேறு துறைகளிடம் இருந்த பலதரப்பட்ட தரவுத்தளங்களின் பகுப்பாய்வு மற்றும் ஒப்பீடு மூலம் இந்த PAல் குறிப்பிடப்பட்டுள்ள உதவித்தொகை திட்டங்களின் அமலாக்க செயல்முறையை சரிபார்ப்பது இத்தணிக்கையின் முறைமையில் அடங்கும். இதன்படி, 2017-23 காலக்கட்டம் தொடர்பான தரவுத்தளங்கள், பல்வேறு துறைகள்/அலுவலகங்கள்/ முகமைகளிடமிருந்து[14] மென்நகல்களாகப் பெறப்பட்டன. தரவுகள்/ தரவுக்குவிப்புகள் மீதான தரவுப் பகுப்பாய்வில் காணப்பட்ட சில முக்கிய தணிக்கைக் கண்டுபிடிப்புகளை, அவற்றிற்கான விளக்க நேர்வுகளை சேர்க்கும் பொருட்டு, தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களுள்

[12] சென்னை, கோயம்புத்தூர், ஈரோடு, கன்னியாகுமரி, பெரம்பலூர், தூத்துக்குடி, திருச்சிராப்பள்ளி (திருச்சி) மற்றும் திருநெல்வேலி.

[13] (அ) Pre MS-SC: 70; (ஆ) PMS-SC: 67; (இ) Pre MS-ST: 25; (ஈ) PMS-ST: 42 மற்றும் (உ) PMS-SCC: 38.

[14] (அ) ஆதி திராவிடர் நல இயக்குநரகம்; (ஆ) பழங்குடி நல இயக்குநரகம்; (இ) தொழில்நுட்ப கல்வி இயக்குநரகம், சென்னை; (ஈ) தமிழ்நாடு மின்னணு ஆளுமை முகமை; (உ) அண்ணா பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர், சென்னை; (ஊ) பள்ளி கல்வி இயக்குநரகம், சென்னை; (எ) சமக்ரா சிக்ஷா அபியான், சென்னை மற்றும் (ஏ) O/o PAG (A&E), தமிழ்நாடு.

இரண்டு மாவட்டங்கள்[15] மற்றும் அவற்றிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் இருந்த ஆவணங்களுடன் சரிபார்க்கப்பட்டு உறுதி செய்யப்பட்டன.

தணிக்கை நோக்கங்கள், அதன் பரப்பு மற்றும் முறைமை குறித்து விளக்க 03 நவம்பர் 2022 அன்று AD&TW துறையின் கூடுதல் தலைமைச் செயலாளருடன் தொடக்கக் கூட்டம் நடைபெற்றது. AD&TW துறையின் அரசு செயலாளர் (செயலாளர்) மற்றும் துறை அதிகாரிகளுடன் தணிக்கை கண்டுபிடிப்புகள் குறித்து விவாதிக்க 15 மே 2024 அன்று நிறைவுக் கூட்டம் நடைபெற்றது. அரசின் பதில்கள்/கருத்துக்கள் பரிசீலிக்கப்பட்டு, இவ்வறிக்கையில் பொருத்தமான இடங்களில் இணைக்கப்பட்டுள்ளன.

## 1.5 ஏற்பு

இந்த PAவை மேற்கொள்வதற்கு, AD&TW துறை, AD மற்றும் பழங்குடியினர் நல இயக்குநரகங்கள், DADTWOகள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட அனைத்து கல்வி நிறுவனங்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்கு தணிக்கை ஏற்பு அளிக்கிறது.

## 1.6 தணிக்கை கண்டுபிடிப்புகள்

தணிக்கை முடிவுகள் பின்வரும் ஐந்து அத்தியாயங்களின் கீழ் தொகுக்கப்பட்டுள்ளன:

**பிரிவு அ: SC மாணவர்களுக்கான ப்ரி–மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை**

- ❖ அத்தியாயம் II : SC மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை
- ❖ அத்தியாயம் III : SC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

**பிரிவு ஆ: ST மாணவர்களுக்கான ப்ரி–மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை**

- ❖ அத்தியாயம் IV : ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை
- ❖ அத்தியாயம் V : ST மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

**பிரிவு இ: மாநில நிதியுதவி பெறும் கல்வி உதவித்தொகை திட்டங்கள்**

- ❖ அத்தியாயம் VI : மாநில நிதியுதவித் திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களின் அமலாக்கம்

---

[15] கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி. தரவு பகுப்பாய்வில் இருந்து வெளிவந்த முக்கிய தணிக்கை கண்டுபிடிப்புகள் இந்த மாவட்டங்களிலிருந்து தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் மிகவும் பரவலாக இருந்ததால் இந்த இரண்டு மாவட்டங்களும் தேர்ந்தெடுக்கப்பட்டன.

# பிரிவு – அ

# ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

# அத்தியாயம் II

# ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை

# ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி–மெட்ரிக் உதவித்தொகை

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், சராசரியாக 46 விழுக்காடு பள்ளிகள் 2019-22 காலகட்டத்தில் தங்கள் பள்ளிகளில் படிக்கும் SC/ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை திட்டத்தைப் பெறவில்லை. 2019-23 காலகட்டத்தில் Pre MS-SC வழங்கலில், சேர்க்கப்படாத தகுதி வாய்ந்த மாணவர்களின் விழுக்காடு 21 முதல் 52 வரை இருந்தது. இத்திட்டத்தின் கீழ் பதிவு செய்யப்படுவதற்கு மிகவும் ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களைக் கண்டறிய சிறப்பு முகாம்கள் எதுவும் நடத்தப்படவில்லை. இடைநிறுத்தம் செய்த மாணவர்கள் மீண்டும் கல்வி நிறுவனங்களில் சேர்வதை ஊக்குவிக்கும் பொருட்டு, துறை அல்லது கல்வி நிறுவனங்கள் போதிய நடவடிக்கைககளை எடுக்கவில்லை. இது, கல்வி உதவித்தொகையின் நோக்கத்தை பாதித்தது. உதவித்தொகைக்கான இணையதளம் தாமதமாக தொடங்கப்பட்டதால், அனுமதி பெறுதல் மற்றும் வழங்கல் ஆகியவற்றில் தாமதம் ஏற்பட்டது. தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் உதவித்தொகைக்கான விண்ணப்ப படிவங்களை ஆய்வு செய்ததில், 30 விழுக்காடு படிவங்களில் வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை என்பது தெரியவந்தது. பெற்றோரின் ஆண்டு வருமானம் ₹2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்த 6,861 பயனாளிகளுக்கு ₹1.45 கோடி உதவித்தொகை அனுமதிக்கப்பட்டு வழங்கப்பட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் 81,586 பயனாளிகளின் வங்கிக் கணக்குகளில், ₹19.59 கோடி உதவித்தொகை செலுத்தப்படவில்லை. ஒரு வலுவான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு இல்லாதது, மதிப்பீடு மற்றும் நேரடி ஆய்வுகள், நடத்தப்படாதது போன்ற காரணங்களால், திட்டத்தின் கண்காணிப்பில் பற்றாக்குறை ஏற்பட்டது.

## 2.1 முன்னுரை

‘ஆதி திராவிடர் மாணவர்களுக்கான ப்ரி - மெட்ரிக் கல்வி உதவித்தொகை’[1] (Pre MS-SC) என்பதன் நோக்கம், ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் படிக்கும் SC மாணவர்களின் கல்விக்காக நிதி உதவி அளிப்பதன் மூலம் அவர்களது பெற்றோருக்கு ஆதரவளிப்பதாகும். இதனால் மாணவர்களின் இடைநிறுத்தம், குறிப்பாக தொடக்க கல்வி நிலையிலிருந்து உயர் நிலைக்கு மாறும் நிலையில் மாணவர்கள் இடைநிறுத்தம் செய்வது குறைகிறது. மேலும், இது, IX மற்றும் X வகுப்புகளில், SC மாணவர்களின் பங்கேற்பை அதிகரிப்பதன் மூலம் அவர்களைச் சிறப்பாகச் செயல்படச் செய்வதுடன், போஸ்ட்-மெட்ரிக் நிலைக்குச் செல்ல சிறந்த வாய்ப்பும் அளிக்கிறது. அங்கீகரிக்கப்பட்ட அரசு மற்றும் தனியார் பள்ளிகளில் படிக்கும் மற்றும் செல்லத்தக்க UDISE குறியீட்டைக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு Pre MS-SC வழங்கப்படும்.

## 2.2 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

மாணவர்கள் Pre MS-SC பெறும் தகுதிக்கான நிபந்தனைகள் மற்றும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

---

[1] முந்தைய Pre MS-SC திட்டம் 01-07-2012 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. தூய்மைப்பணி மற்றும் சுகாதார கேடு விளைவிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களின் குழந்தைகளுக்கும் இதேபோன்ற திட்டத்தை மத்திய அரசு 01-04-1977 முதல் அமல்படுத்தியது. 2021-22 முதல், இந்த இரண்டு திட்டங்களும், இரண்டு கூறுகளை உள்ளடக்கிய **‘SC மாணவர்கள் மற்றும் பிறருக்கான ப்ரி மெட்ரிக் உதவித்தொகை திட்டம்’** எனப்படும் ஒரே திட்டமாக இணைக்கப்பட்டன. **முதல் கூறு** என்பது, IX மற்றும் X வகுப்புகளில் படிக்கும் SC மாணவர்களுக்கானது (கூறு 1) மற்றும் **இரண்டாம் கூறு** என்பது, தூய்மைப்பணி மற்றும் சுகாதார கேடு விளைவிக்கும் பணிகளில் ஈடுபட்டுள்ள பெற்றோர் அல்லது பாதுகாப்பாளர்களின், I முதல் X வரை படிக்கும் குழந்தைகளுக்கானது.
**‘Pre MS-SC’** எனப்படும் **முதல் கூறு** மட்டுமே இந்த PA மீதான தணிக்கையின் பரப்பாகும், மற்றும் இந்த கூறு தொடர்பான தணிக்கை முடிவுகள் மட்டுமே இந்த PA அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.1: Pre MS-SCக்கு தகுதி பெறுவதற்கான நிபந்தனைகள் மற்றும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| வ.எண் | அம்சங்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1 | நோக்கம் | இந்தியாவில் படிப்பவர்களுக்கு மட்டுமே |
| 2 | வழங்குபவர் | விண்ணப்பதாரர் வசிக்கும் மாநிலத்தின் அரசு |
| 3 | மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள்[2] | |
| | (அ) தேசியம்/குடியுரிமை | இந்திய குடிமக்கள் மட்டுமே |
| | (ஆ) வகை | SC |
| | (இ) பெற்றோர்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் | ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| 4 | உதவித்தொகையின் கூறுகள் (கல்விக்கான உதவிதொகை[3] - தொகுக்கப்பட்டது) | |
| | வெளி மாணாக்கர்கள் | ₹3,500 |
| | விடுதி மாணாக்கர்கள் | ₹7,000 |
| | *திவ்யாங்* (மாற்றுத்திறனாளிகள்) மாணவர்கள் | 10 விழுக்காடு கூடுதல் உதவித்தொகை |
| 5 | நிதி அமைப்பு | மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 60:40 என்ற பகிர்வு விகிதம்[4] |
| 6 | பணம் செலுத்தும் வழிமுறை | மாணவர்கள் அல்லது பெற்றோரின் கணக்கில் நேரடியாக DBT மூலம் மட்டுமே செலுத்தப்படும் |

(ஆதாரம்: Pre MS-SC வழிகாட்டுதல்கள்)

## 2.3 செயல்முறை

Pre MS-SC வழிகாட்டுதல்களின்படி[5], உதவித்தொகைக்கான விண்ணப்பம் கல்வியாண்டின் (AY) நவம்பர் மாதம் 30ம் தேதிக்குள் ஆன்லைனில் மாநில உதவித்தொகை இணையதளத்தில் சமர்ப்பிக்கப்படலாம். இணையவழியில் அல்லது நேரடியாக சமர்ப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், தேர்ச்சி பெற்ற அனைத்து தேர்வுகள் தொடர்பான சான்றிதழ்களின் ஒரு சுய-சான்றளிக்கப்பட்ட நகல், சாதி[6] மற்றும்

2 Pre MS-SC உதவித்தொகை பெற்றவர் வேறு எந்த கல்வி உதவித்தொகையையும் பெற இயலாது. I முதல் X வகுப்பு வரை படிப்பதற்காக வேறு ஏதேனும் கல்வி உதவித்தொகை வழங்கப்பட்டால் மாணவர்கள் அவரவர் விருப்பத்திற்கிணங்க ஏதேனும் ஒன்றைப் பெற்று, அதனை கல்வி நிறுவனத் தலைவரின் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

3 2022-23 முதல்.

4 2019-20 முதல். 2019-20க்கு முன், இந்த திட்டம் மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டது. அவை தங்களது தவிர்க்கவியலாத பொறுப்புகளுக்கு மேலாக 100 விழுக்காடு CAவை மத்திய அரசிடம் இருந்து பெறுகின்றன.

5 Pre MS வழிகாட்டுதல்கள், 2017 மற்றும் 2019-20ன் பத்தி 12.

6 தாசில்தார் நிலைக்கு கீழில்லா அங்கீகரிக்கப்பட்ட வருவாய் அலுவலரால் முறையாக கையொப்பமிடப்பட்டது.

வருமானச் சான்றிதழ்[7] ஆகியவற்றை கட்டாயமாகக் கொண்டிருக்க வேண்டும். மாணவர், ஆதார் வைத்திருப்பதற்கான சான்றை சமர்ப்பிக்க வேண்டும் அல்லது ஆதார் அங்கீகாரத்திற்கு உட்படுத்தப்பட வேண்டும். அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரர்கள் கல்வி கற்கும் அல்லது இறுதியாக பயின்ற கல்வி நிறுவனத்தின் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட்டு, பின்னர், அத்தலைவரின் பரிந்துரையுடன் குறிப்பிடப்பட்ட அனுமதி வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்படும். இருப்பினும், Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 7ன் படி, கல்வி நிறுவனத்தில்[8] சேர்ந்த நாளன்றே அனைத்து மாணவர்களும் IT போர்ட்டலில் உதவித்தொகைக்காக விண்ணப்பிப்பதை கல்வி நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும்.

திட்ட வழிகாட்டுதல்களின்படி[9], மாநிலம், Pre MS-SC திட்டத்திற்கான மாநில அளவிலான வருடாந்திரத் திட்டத்தை (AAP) முந்தைய ஆண்டின் பிப்ரவரி 28 அல்லது அதற்கு முன்பாகத் தயாரிக்க வேண்டும். ஏழ்மை நிலையிலிருந்த குடும்பங்களுக்கான தனிப்பட்ட இலக்குகள், தகுதி, முன்மொழியப்பட்ட கவரேஜ் ஆகியவற்றை வழங்குவதோடு அவர்களை அடையாளம் காண்பதற்கான செயல்முறைகள், வேலை வாய்ப்பளிக்கக்கூடிய கல்விப் பிரிவுகளை அடையாளம் காண்பது, கண்காணிப்பிற்கான அமைப்புகள் போன்றவற்றையும் AAP தெளிவாக வழங்க வேண்டும். AAPகள், மத்திய அரசில் மதிப்பீடு செய்யப்பட்டு, ஒவ்வொரு மாநிலத்திற்குமான ஒதுக்கீடு ஒவ்வொரு ஆண்டும் மார்ச் 30க்கு முன் இறுதி செய்யப்படும்.

Pre MS-SC திட்டமானது, தொடங்கப்பட்ட ஆண்டான 2012-13ல் இருந்து மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டு வந்தது. இதற்காக, மாநில அரசுகள், தங்கள் தவிர்க்கவியலாத பொறுப்புக்கு (committed liability) கூடுதலாக 100 விழுக்காடு மத்திய நிதி உதவியை[10] (Central Assistance - CA) மத்திய அரசிடம் இருந்து பெற்றன. 2019-20 முதல் நடைமுறைக்கு வரும் வகையில், மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 60:40 என்ற பகிர்வு விகிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டது. மேலும், திட்ட வழிகாட்டுதல்களின்படி[11], 2022-23 முதல் மாநில அரசின் பங்கு

7 சுயதொழில் புரியும் பெற்றோர்/பாதுகாப்பாளர்: தாசில்தார் நிலைக்கு கீழில்லா வருவாய் அதிகாரியால் வழங்கப்பட்ட சான்றிதழ். பணிபுரியும் பெற்றோர்/பாதுகாப்பாளர்கள்: வேலை வழங்குநரிடம் இருந்து வருமானச் சான்றிதழைப் பெற வேண்டும். பணிபுரியும் பெற்றோர்/பாதுகாப்பாளர்கள், பிற கூடுதல் வருமானங்களுக்கான ஒருங்கிணைந்த சான்றிதழை வருவாய் அதிகாரியிடமிருந்து பெற வேண்டும்.

8 புதுப்பிப்பிற்கான விண்ணப்பமாக இருந்தால், மாணவர் அடுத்த வகுப்பிற்கு உயர்வு பெற்று, பள்ளி/கல்வி நிறுவனத்தில் மீண்டும் சேர்ந்ததை அந்நிறுவனம் உறுதி செய்த பிறகு, மாணவரின் வருகை நாட்களின் அடிப்படையில் புதுப்பிக்கப்படும்.

9 Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 12.

10 மாநில அரசின் ஓராண்டிற்கான தவிர்க்கவியலாத பொறுப்பின் அளவானது, முந்தைய திட்டக் காலம்/நிதி ஆணைய (FC) காலத்தின் இறுதி ஆண்டில் மாநிலம் மற்றும் மத்திய அரசின் மீதான மொத்த தேவைக்கு சமமாக இருக்கும். இது மாநில அரசுகளால் தங்கள் சொந்த வரவு செலவு திட்ட ஒதுக்கீட்டின் மூலம் அடையப்பட்டது.

11 Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 9.1.

வழங்கப்பட்டதை உறுதி செய்த பிறகு, பயனாளிகள்/பாதுகாப்பாளரின் கணக்கில் மத்திய அரசின் பங்கு நேரடியாக செலுத்தப்படும்.

மாநிலத்தில் Pre MS-SCன் செயல்முறை **விளக்கப்படம் 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 2.1: Pre MS-SCஐ செயல்படுத்துவதற்கான செயல்முறை அமைப்பு**




### 2.3.1 நிதி இருப்பு மற்றும் உதவித்தொகை வழங்கல்

2017-23 காலக்கட்டத்தில், Pre MS-SC உதவித்தொகைகளுக்கான நிதி இருப்பு மற்றும் வழங்கல் **அட்டவணை 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.2: நிதி இருப்பு மற்றும் வழங்கல்: Pre MS-SC**

(₹ கோடியில்)

| ஆண்டு | | தொடக்க இருப்பு | தேவையான நிதி/ வருடாந்திர தேவை | தவிர்க்க வியலாத பொறுப்பு/ சராசரி தேவை | பெறப்பட்ட நிதி | | மொத்த நிதி | மொத்த செலவினம் | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மத்திய பங்கு | மாநில பங்கு | | | |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) = (2+5+6) | (8) | (9) = (7)-(8) |
| 2017-18 | | 44.52 | 77.73 | 65.76 | 0 | 65.76 | 110.28 | 77.73 | 32.55 |
| 2018-19 | | 32.55 | 77.82 | 65.76 | 0 | 65.76 | 98.31 | 77.82 | 20.49 |
| 2019-20 | | 20.49 | 78.31 | 65.76 | 0 | 56.96 | 77.45 | 78.31 | (-) 0.86 |
| 2020-21 | | (-) 0.86 | 79.40 | 31.76 | 50.18 | 31.76 | 81.08 | 79.40 | 1.68 |
| 2021-22 | | 1.68 | 90.01 | 36.00 | 53.94 | 36.00 | 91.62 | 90.01 | 1.61 |
| 2022-23 | மத்திய | 1.61 | 114.36 | - | - | - | - | - | 1.28 |
| | மாநில | 0.11 | | 45.74 | - | 45.84 | 45.95 | 44.25 | 1.70 |

(ஆதாரம்: ADW இயக்குநரகத்தால் வழங்கப்பட்ட விவரங்கள்)

**அட்டவணை 2.2ன்** படி:

- 2017-20 காலக்கட்டத்தில், திட்டத்தின் செலவினமானது, மாநிலத்தின் தவிர்க்கவியலாத பொறுப்புக்கான தொகை மற்றும் அந்தந்த நிதியாண்டுகளின் தொடக்க இருப்பு ஆகியவற்றால் ஈடுசெய்யப்பட்டதால் மத்திய நிதி பெறப்படவில்லை.
- 2022-23 முதல் மாநில மற்றும் மத்திய பங்குகள் வெவ்வேறு நேரங்களில் தனித்தனியாக செலுத்தப்பட்டு வருகின்றன மற்றும் மத்திய பங்கு PFMS போர்ட்டலில் வழங்கப்படவில்லை. செயல்பாட்டு முகமையாக இயங்கும் மாநிலத்திடம் பயனாளிகளுக்கு செலுத்தப்பட்ட மத்திய பங்கின் அளவு தொடர்பான விவரங்களும் அனைத்து பயனாளிகளுக்கும் ஒரே அளவிலான செலுத்தம் இருந்ததா என்பதை அறிவதற்கான விவரங்களும் இல்லை எனத் தணிக்கை கண்டது.

### 2.3.2 மாணவர்களின் உள்ளடக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம்

2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட Pre MS-SC உதவித்தொகைகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் **விளக்கப்படம் 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.




(ஆதாரம்: 2021-25 ஆண்டுகளுக்கான AAPகள்)

## 2.4 பயனாளிகளின் உள்ளடக்கம்

திட்ட வழிகாட்டுதல்களின்படி[12], மாநில அரசு, ஏப்ரல் முதல், திட்டத்தின் விவரங்களை அறிவித்து, மாநிலத்தின் முன்னணி செய்தித்தாள்களில் விளம்பரம் செய்வதன் மூலமும், அந்தந்த வலைதளங்கள்/உதவித்தொகை இணையதளங்கள் மற்றும் பிற ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்து

[12] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2017 மற்றும் 2021-26ன் பத்திகள் 11 மற்றும் 14.

விண்ணப்பங்களுக்கான அழைப்பினை விடுக்கும். இத்திட்டம் குறித்து பல்வேறு விழிப்புணர்வு முகாம்களை அரசு மேற்கொண்டும் செய்தித்தாள்களில் விளம்பரங்களை வெளியிட்டும் கூட பின்வரும் பத்திகளில் வழங்கப்பட்டுள்ளபடி, தகுதியுள்ள அனைத்து SC மாணவர்களும் திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படவில்லை என்பதை தணிக்கை கவனித்தது.

### 2.4.1 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் ப்ரி-மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டங்களில் பள்ளிகள் பங்கேற்காதது

கல்வியியல் மேலாண்மைத் தகவல் மையத்தின் (Educational Management Information System - EMIS) படி, தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் இருந்த மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை, AD & TW துறையின் உதவித்தொகை தரவுகளின்படியான Pre MS-SC மற்றும் Pre MS-ST உதவித்தொகையை பெற்றுவரும் பள்ளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டது. சராசரியாக 46 விழுக்காடு பள்ளிகள், 2019-22 ஆண்டுகளில், தங்கள் பள்ளிகளில் படிக்கும் SC/ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களைப் பயன்படுத்தவில்லை எனத் தணிக்கை கண்டது. விவரங்கள் **இணைப்பு 2.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

இத்திட்டம் குறித்த போதிய விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு இல்லாதததது, பள்ளிகள் இத்திட்டங்களில் பங்கேற்காததற்கான காரணமாக இருக்கலாம் எனவும், இது, தகுதியுள்ள SC/ST மாணவர்கள் உதவித்தொகைப் பயனைப் பெற இயலாமைக்கு வழிவகுத்ததையும் தணிக்கை கவனித்தது.

நிறைவுக்கூட்டத்தின் போது, தொடர்புடைய தரவுகளை ஆராயும் பொருட்டு, துறையின் செயலாளர் மற்றும் DADW ஆகியோரால் தணிக்கையின் தரவுகள் கோரப்பட்டது. இது தொடர்பான துறையின் நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (ஆகஸ்ட் 2024).

### 2.4.2 தகுதி வாய்ந்த SC மாணவர்கள் திட்டத்தில் சேர்க்கப்படாதது

தகுதி வாய்ந்த SC பயனாளிகளின் தோராயமான எண்ணிக்கையைக் கண்டறிய, பள்ளிக் கல்வி (School Education - SE) துறையால் பராமரிக்கப்படும் EMIS தரவை[13] தணிக்கை ஆய்வு செய்தது. Pre MS-SCக்குத் தகுதியுள்ள IXஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை, தகுதியுள்ள மற்றும் பயனடைந்த பயனாளிகளுக்கு இடையே உள்ள இடைவெளியைக் கண்டறியும் பொருட்டு, 2019-23[14] ஆண்டுகளின் விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டது (**அட்டவணை 2.3**).

[13] EMIS தரவு 2019-20 முதல் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றன. அதற்கு முன், தரவானது கை முறையில் பராமரிக்கப்பட்டது. மேலும், EMIS தரவு உதவித்தொகைகளுடன் தொடர்புடையது அல்ல, இந்த அறிக்கையில் ஒப்பீட்டு நோக்கங்களுக்காக மட்டுமே பயன்படுத்தப்படுகிறது.

[14] EMIS தரவு 2019-20 முதல் மட்டுமே கிடைக்கப்பெறுகின்றன. அதற்கு முன், விவரங்கள் கை முறையில் பராமரிக்கப்பட்டன.

**அட்டவணை 2.3: திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதி வாய்ந்த SC மாணவர்கள்**

| ஆண்டு | EMIS தரவுகளின்படி தகுதியுள்ள பயனாளிகள் | GoIக்கு சமர்ப்பிக்கப்பட்ட AAPன் படியான புதிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | தகுதி வாய்ந்த மாணவர்கள் சேர்க்கப்படாதது | |
|---|---|---|---|---|
| | | | எண்–ணிக்கை | விழுக்காடு |
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 2019-20 | 2,30,234 | 1,10,316 | 1,19,918 | *52* |
| 2020-21 | 2,31,781 | 1,65,943 | 65,838 | *28* |
| 2021-22 | 2,35,337 | 1,68,386 | 66,951 | *28* |
| 2022-23 | 2,30,736 | 1,82,415 | 48,321 | *21* |

(ஆதாரம்: 2023-24ஆம் ஆண்டிற்கான AAP மற்றும் SE துறையால் வழங்கப்பட்ட EMIS தரவு)

Pre MS-SCல் 2019-23 காலகட்டத்தில் சேர்க்கப்படாத தகுதி வாய்ந்த மாணவர்களின் விழுக்காடு 21 முதல் 52 வரை இருந்தது **அட்டவணை 2.3**ல் இருந்து தெரிய வருகிறது. தகுதி வாய்ந்த பயனாளிகள் போதுமான முனைப்புடன் அடையாளம் காணப்படாத நிலையில், இத்திட்டங்கள் தற்போது கல்வி உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் விழிப்புணர்வுள்ள மாணவர்களுக்கு மட்டுமே பயன்களை வழங்குகின்றன.

அனைத்துத் துறைகளிலும் உள்ள அனைத்து தரவுத்தளங்களும் ஒரே மென்பொருளில் ஒருங்கிணைக்கப்பட, இடைநிரல் பயன்பாட்டுடன் (Application Programming Interface- API) கூடிய ஒரு வலுவான பயன்பாட்டு வசதி (one stop facility) வழங்கப்படுவதை நோக்கமாகக் கொண்டு, 2023-24 முதல் மாநில உதவித்தொகை இணையதளம் அறிமுகப்படுத்தப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2024). 2023-24ஆம் ஆண்டிலிருந்து EMIS மற்றும் UMIS[15]ஐ பயன்படுத்துவதன் மூலம், துறையால் தகுதி பெற்ற பயனாளிகளின் முழுமையான தரவைப் பெற்று அவர்களிடம் திட்டத்தை கொண்டு செல்ல முடியும் என்று பதிலில் மேலும் கூறப்பட்டது.

### 2.4.3 மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த தகுதியுள்ள குடும்பங்களிலிருந்து மாணவர்கள் அடையாளம் காணப்படாதது

வழிகாட்டுதல்களின்படி[16] மாநில அரசு பல்வேறு ஆதாரங்களின் மூலம் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த தகுதியுள்ள குடும்பங்களைக் கண்டறிந்து, மாணவர்களை திட்டத்தின் கீழ் சேர்க்கும் பணிக்கான சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளும். அத்தகைய மாணவர்கள், ‘சமூக பொருளாதாரம் மற்றும் சாதிக் கணக்கெடுப்பு (Socio Economic Caste Census), 2011’ (SECC)ன் படி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பற்றாக்குறை கொண்ட மற்றும் பெற்றோர்களில் ஒருவர் அல்லது இருவருமே எழுத்தறிவற்றவர்களாக இருந்த குடும்பங்களைச்

[15] உயர் கல்வித்துறையின் பல்கலைக்கழக மேலாண்மை தகவல் அமைப்பு.

[16] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்திகள் 5.1 மற்றும் 5.2.

சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும். இதற்காக, கிராம ஊராட்சிகளின் அறிவிப்புப் பலகைகள், பள்ளிக் குழுக்கள் மற்றும் பெற்றோர்-ஆசிரியர் கலந்துரையாடல் கூட்டங்கள் மற்றும் பிற அரசு/பொது விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொள்வதோடு, தகுதி வாய்ந்த மாணவர்களைக் கண்டறிந்து, அவர்கள் இத்திட்டத்தில் சேர்ந்து பயனடையும்படி வழிகாட்டும் பொருட்டு, ஒவ்வொரு ஆண்டும் மார்ச்/ஏப்ரல் மாதங்களில் விழிப்புணர்வு நடவடிக்கைகளை மாநிலங்கள் மேற்கொள்ள வேண்டும்.

இருப்பினும், இத்திட்டத்தின் கீழ் சேர்வதற்கான ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களை அடையாளம் காண சிறப்பு முகாம்கள் எதுவும் நடத்தப்படவில்லை எனத் தணிக்கை கண்டது.

தமிழ்நாடு அரசு, 2021-22 முதல் 2024-25 வரையான ஆண்டுகளுக்கான Pre MS-SC தொடர்பான AAPகளை மத்திய அரசுக்கு அனுப்பும்போது[17], ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்கள் பற்றிய விவரங்கள் உதவித்தொகை தரவுகளுடன் பதிவேற்றப்படும் என குறிப்பிட்டிருந்தது. மேலும், மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த SC குடும்பங்களைக் கண்டறிந்து திட்டத்தின் கீழ் அவர்களைச் சேர்ப்பதற்கு மாநிலத்தின் ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்ட SECC கணக்கெடுப்பு பயன்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும், 2021-22ஆம் ஆண்டிலிருந்து தனது AAPகளில் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்கள் தொடர்பான தரவுகளை சேர்க்க அரசு உறுதியளித்திருந்தாலும், அத்தகைய குடும்பங்களைக் கண்டறிய போதுமான முயற்சிகள் எடுக்கப்படவில்லை எனத் தணிக்கை கண்டது.

### 2.4.4 Pre MS-SC பயனாளிகளின் இடைநிறுத்தம்/நீக்கம்

திட்ட வழிகாட்டுதல்களின்படி[18], மாநிலங்கள், மாணவர்களின் புதிய சேர்க்கைக்காக அனைத்து தொடக்க/உயர்நிலைப் பள்ளிகளையும் உள்ளடக்கிய முறையான வழியில் மாணவர்களை அடையாளம் காணவேண்டும். மேலும், இடைநிறுத்தம் செய்த மாணவர்களை மீண்டும் பள்ளிக்கு வர ஊக்குவிக்க வேண்டும். இருப்பினும், கல்வி உதவித்தொகையின் நோக்கத்தை பாதிக்கும் வகையில், இடைநிறுத்தம் செய்த மாணவர்களை மீண்டும் சேர ஊக்குவிப்பதற்கு போதிய நடவடிக்கைகள் கல்வி நிறுவனங்களால் எடுக்கப்படவில்லை.

---

[17] AAP 2021-22 (நவம்பர் 2021); AAP 2022-23 (ஏப்ரல் 2022); AAP 2023-24 (ஏப்ரல் 2023) மற்றும் AAP 2024-25 (ஜூலை 2024).

[18] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 5.4.

**விளக்கப்படம் 2.3ல்** காட்டப்பட்டுள்ளபடி, எட்டு மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட 65 கல்வி நிறுவனங்களில், 2017-22 வரையில் 1,488 மாணவர்கள் இடைநின்றனர்/நீக்கப்பட்டனர்.

**விளக்கப்படம் 2.3: தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் இடைநிறுத்தியவர்கள்**




(ஆதாரம்: AD&TW துறையின் Pre MS-SC தரவுத்தளத்தின் தரவு பகுப்பாய்வு)

கல்வியாண்டின் அடுத்த ஆண்டில் மாணவரின் உதவித்தொகைக்கான புதுப்பித்தலைச் சரிபார்க்க, அவர்களது உதவித்தொகை ID தனிப்பட்ட அடையாளங்காட்டியாக எடுத்துக்கொள்ளப்பட்டது. இதன் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட Pre MS-SC பயனாளிகளின் தரவின் மீதான பகுப்பாய்வில், 13,993 மாணவர்கள் அடுத்த ஆண்டில் இடைநிறுத்தம் செய்தது/நீக்கப்பட்டது வெளியானது (**இணைப்பு 2.2**).

UDISE+ன்படி, பள்ளிக் கல்வியின் தொடக்க நிலை மற்றும் உயர்நிலையில், அகில இந்திய மற்றும் தமிழ்நாட்டின் இடைநிற்றல் விகிதங்கள்[19], **அட்டவணை 2.4** மற்றும் பாலின வாரியான இடைநிற்றல் விகிதங்கள் **இணைப்பு 2.3** ஆகியவற்றில் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 2.4: பள்ளிக் கல்வியின் தொடக்க நிலை மற்றும் உயர்நிலையில் இடைநிற்றல் விகிதம்**

| கல்வி-யாண்டு | உயர் தொடக்க நிலை (VI முதல் VIII வகுப்பு வரை) | | | | | | உயர் நிலை (வகுப்புகள் IX & X) | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | அகில இந்தியா | | | தமிழ்நாடு | | | அகில இந்தியா | | | தமிழ்நாடு | | |
| | பொது | SC | ST | பொது | SC | ST | பொது | SC | ST | பொது | SC | ST |
| 2017-18 | 2.87 | 6.59 | 5.02 | 1.70 | 8.85 | 10.83 | 14.94 | 21.77 | 22.14 | 7.16 | 19.99 | 21.28 |
| 2018-19 | 2.51 | 6.04 | 6.69 | 13.76 | 0 | 0 | 13.21 | 20.20 | 24.93 | 14.43 | 19.11 | 19.73 |
| 2019-20 | 0 | 3.75 | 6.06 | 0 | 1.55 | 17.61 | 10.95 | 18.65 | 24.18 | 1.40 | 13.66 | 32.34 |
| 2020-21 | 0 | 3.34 | 5.02 | 0 | 0.64 | 3.15 | 10.29 | 15.32 | 20.91 | 0 | 7.90 | 20.12 |
| 2021-22 | 1.51 | 3.56 | 6.03 | 0 | 0 | 0.52 | 10.94 | 12.55 | 16.62 | 3.92 | 5.08 | 9.44 |

(ஆதாரம்: மத்திய அரசின் கல்வி அமைச்சகம் UDISE+ முகப்பு[20])

19 ஒரு குறிப்பிட்ட கல்வியாண்டில் ஒரு குறிப்பிட்ட கல்வி நிலையில் சேர்க்கப்பட்ட மாணவர்களில் அடுத்த கல்வியாண்டில் எந்தவொரு கல்வி நிலையிலும் சேர்க்கப்படாத மாணவர்களின் விகிதம்.

20 https://dashboard.udiseplus.gov.in/#/reportDashboard/sReport.

SC/ST மாணவர்களின் இடைநிறுத்தல் விகிதம் உயர்நிலைக் கல்வியில் அதிகமாக இருப்பது **அட்டவணை 2.4ல்** இருந்து தெரிய வருகிறது, வகுப்பு VI முதல் VIII வரை படிக்கும் அனைத்து மாணவர்களும் உயர் நிலைக்கு முந்தைய நிலைக்குச் செல்லும் நிலையில், 2017-22 காலகட்டத்தில் வகுப்பு IX மற்றும் Xல் SC மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் மாநிலத்தில் 20 விழுக்காட்டிலிருந்து 5 விழுக்காடாகக் குறைந்து சரிவு நிலையில் இருந்தது. இது துறையின் சிறந்த செயல்திறனைக் காட்டினாலும், தொடக்கப்பள்ளி போலவே இடைநிறுத்தல் நேர்வுகள் பூஜ்ஜியத்திற்கு கொண்டு வரப்பட வேண்டும்.

நிறைவுக் கூட்டத்தின் போது, தணிக்கையால் வழங்கப்பட்ட தரவுகளை துறை ஆய்வு செய்யும் என்று DADW கூறினார். இது தொடர்பாக துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிர்நோக்கப்படுகிறது (ஆகஸ்ட் 2024).

## 2.5 உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு

திட்ட வழிகாட்டுதல்களின்படி[21], கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களும் அதில் சேரும் அதே நாளில் உதவித்தொகைக்காக IT போர்ட்டலில் விண்ணப்பிப்பதை கல்வி நிறுவனங்கள் உறுதிசெய்ய வேண்டும். மாநிலங்கள், விண்ணப்பதாரர்களுக்கான தகுதி, சாதி நிலை, ஆதார் அடையாளம் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்கள் ஆகியவற்றின் சரிபார்ப்பை இணையதளத்தில் மேற்கொள்ளும். இவை குறித்த தணிக்கை முடிவுகள் பின்வரும் துணைப் பத்திகளில் கொடுக்கப்பட்டுள்ளன.

### 2.5.1 பல்வேறு நிலைகளில் விண்ணப்பங்களைச் செயலாக்கம் செய்ய கால வரம்பு இல்லாதது

இணையதளம் தொடங்கப்படுவதில், 2017-23 ஆண்டுகளில் தாமதம் ஏற்பட்டு, டிசம்பர் மாதம் மற்றும் அதே AYன் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதத்திற்கு இடையே தொடங்கப்பட்டது. இது **பத்தி 2.6.1ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, ADWன் இயக்ககத்திடம் இருந்து உதவித்தொகைக்கான அனுமதியைப் பெறுவதிலும், உதவித்தொகையை மாணவர்களுக்கு வழங்குவதிலும் தாமதத்தை ஏற்படுத்தியது.

பல்வேறு கல்வி மற்றும் பாடப் பிரிவுகளுக்கு வெவ்வேறு கல்வி காலெண்டர்கள் பின்பற்றப்படுவதால், விண்ணப்பங்களைப் பெறவும் அவற்றைச் செயலாக்கவும் உறுதியான ஒரு கால வரம்பை பின்பற்றுவதில் துறைக்கு சிரமம் ஏற்படுவதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2024). தகுதியுள்ள அனைத்து விண்ணப்பங்களும், அந்தந்த AYக்குள் செயலாக்கப்பட்டு வழங்கப்படுவதை துறை உறுதி செய்கிறது. மேலும், AD&TW உதவித்தொகை இணையதளம், 2022-23 முதல், ஒருங்கிணைந்த மாநில உதவித்தொகை இணையதளத்திற்கு மாறியுள்ளது. மேலும், DBT மூலம் பகிர்வு முறையின் (60:40) படி உதவித்தொகை வழங்கப்படுகிறது.

[21] Pre MS-SC வழிகாட்டுதல்கள் 2021-26ன் பத்தி 7.

இக்காரணங்களால் மத்திய அரசின் தேசிய உதவித்தொகை இணையதளத்துடன் கால வரம்புகள் பொதுப்படையாக இணைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், திட்ட வழிகாட்டுதல்களின்படி, IT போர்ட்டலில் மாணவர்கள் விண்ணப்பிப்பதும், உதவித்தொகை இணையதளத்தில் கல்வி நிறுவனங்களால் மாணவர்களின் விவரங்கள் சரிபார்க்கப்படுதலும், அக்கல்வி நிறுவனங்களில் மாணவர்களின் சேர்க்கை நாளன்றே மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தணிக்கை கண்டது.

### 2.5.2 உதவித்தொகை விண்ணப்பங்களின் போதிய ஆய்வு இல்லாமை

ADWன் இயக்ககத்தால் அனுமதிக்கப்படும் முன்னதாக, நிறுவன அளவிலும், மாவட்ட அளவிலும் (DADTWO) உதவித்தொகை விண்ணப்பங்கள் ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இருப்பினும், உதவித்தொகை விண்ணப்பங்களின் மீதான நேரடி ஆய்வு மற்றும் உதவித்தொகை தரவுகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தின:

- தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்/பள்ளிகளில், 2,937 விண்ணப்பங்களுள் 878 விண்ணப்பங்களில்[22] (30 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை.
- Pre MS-SCன் வழிகாட்டுதல்களின்படி[23], 16 பிப்ரவரி 2017ல் இருந்து, அனைத்து உதவித்தொகை திட்டங்களுக்கான அடையாள ஆவணமாக ஆதார் இருந்து வருகிறது, 2020-21ஆம் ஆண்டின் உதவித்தொகை தரவுத்தளத்தின் மீதான பகுப்பாய்வு, எட்டு[24] பயனாளிகள் தவறான ஆதார் எண்களை வழங்கியிருந்ததை வெளிப்படுத்தியது.
- துறையால் பராமரிக்கப்பட்ட பயனாளிகளின் தரவுத்தளத்தை மற்ற பல்வேறு தரவுத்தளங்களுடன்[25] ஒப்பீடு செய்ததில், 6,861 SC மாணவர்களின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தது. இதன் விளைவாக, 2017-23 ஆண்டுகளில் அனுமதியற்ற தொகையாக ₹1.45 கோடி செலுத்தப்பட்டது **(இணைப்பு 2.4).**

---

22 வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் முறையே 836 மற்றும் 572 விண்ணப்பங்களில் இணைக்கப்படவில்லை. ஒரே மாதிரியான விண்ணப்பங்களின் நகல்கள் நீக்கப்பட்டபின், தகுதியற்ற விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை கணக்கிடப்பட்டது.

23 Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 9.5 மற்றும் 9.6.

24 மூன்று பயனாளிகளின் ஆதார் ID ‘(அப்போஸ்ட்ரோபி) உடன் தொடங்கப்பட்டிருந்தன, நான்கு பயனாளிகளின் ஆதார் ‘1’ உடன் தொடங்கப்பட்டிருந்தன மற்றும் ஒரு ஆதார் எண் 999999999999 என வழங்கப்பட்டிருந்தது.

25 பள்ளிக் கல்வித் துறையின் EMIS தரவுத்தளம் PAG (A&E), தமிழ்நாடு அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட ஓய்வூதிய தரவுகள், TNeGAயிலிருந்து பெறப்பட்ட வருமானச் சான்றிதழ் தரவு போன்றவை.

அரசு பின்வருமாறு பதிலளித்தது (ஜூலை 2024):

- தவறான ஆதார் எண்களைக் கொண்ட மாணவர்களின் ஆதார் குறித்த விவரங்கள் மற்றும் இணை ஆவணங்களுடன் மாணவர்களின் அப்போதைய கல்வி நிலை ஆகியவை நிறுவனங்களிடம் கோரப்பட்டது (ஜூன் 2024). கல்வி நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பதிலின் அடிப்படையில் தேவையான இடங்களில் மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டது.
- வருவாய் துறையால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழின் அடிப்படையில் உதவித்தொகை அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், தேவைப்படும் இடங்களில் மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டது. (ஜூன் 2024).

### 2.5.3 IT போர்ட்டலில் விண்ணப்பிக்காத SC/ST பயனாளிகளுக்கு Pre MS உதவித்தொகை வழங்கப்படல்

விண்ணப்பங்களின் சமர்ப்பிப்பு மற்றும் அவற்றின் செயலாக்கம் தொடர்பாக, Pre MS-SC மற்றும் PMS-SC செயல்படுத்தப்படும் முறையை மத்திய அரசு, 2022-23 முதல் மறுசீரமைத்தது[26]. ஆதார் அடிப்படையிலான செலுத்தங்களுக்கும், அரசு தனது பங்கை வழங்கிய பின்னர் ஆதார் அடிப்படையில் மத்திய அரசின் பங்கு வழங்கப்படுவதற்கும் விண்ணப்பதாரரின் ஆதார் எண்கள் பெறப்படுவது அவசியமாகிறது. மேலும், திட்ட வழிகாட்டுதல்களின் கீழ் வழங்கப்பட்டுள்ள காலவரம்பின்படியே மத்திய அரசின் பங்கு செயலாக்கப்படுவது ஆகியவை மத்திய அரசால் மேற்கொள்ளப்பட்ட முக்கிய மாற்றங்கள் ஆகும்.

PMS-SCக்கான இணையதளம் ஜனவரி 2023 முதல் செயல்பட்டு வந்த நிலையில், மார்ச் 2023[27] நிலவரப்படி, Pre MS-SCக்கான இணையதளம் செயல்படத் தொடங்கவில்லை எனத் தணிக்கை கண்டது. 2022-23 ஆம் ஆண்டில் Pre MS-SCக்கான இணையதளம் தொடங்கப்படுவதில் இருந்த இத்தாமதம், விண்ணப்பங்கள் மீதான ஆய்வு, உதவித்தொகைக்கான அனுமதி பெறுதல் மற்றும் மாநிலப் பங்கான 40 விழுக்காடு வழங்கப்படுதல் ஆகியவற்றில் தாமதத்தை ஏற்படுத்தியது.

இணையதள வசதிகள் தயாராக இல்லாததாலும், மார்ச் 2023க்கு முன் மாநிலப் பங்கு செலுத்தப்பட வேண்டியதாலும், 2022-23ல் Pre MS உதவித்தொகை பெறத் தகுதியான SC/ST மாணவர்களை அடையாளம் காண்பதற்கு EMIS தரவுத்தளத்தைப் பயன்படுத்த DADW முடிவு செய்து (மார்ச் 2023), தகுதி பெற்ற மாணவர்களின் கணக்குகளில் மாநிலப் பங்கான 40 விழுக்காட்டை செலுத்தியது. இது Pre MSக்கான வழிகாட்டுதல்களையும் GoIன் அறிவுறுத்தல்களையும் மீறுவதாக இருந்தது. இவ்வாறு, 2,65,187 Pre MS-SC மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகையாக ₹56.21 கோடி (i) மாணவர்கள் இணையவழி IT போர்ட்டலில்

[26] 21 ஜூலை 2022 தேதியிடப்பட்ட, MoSJ&E, சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் துறையின் கோப்பு எண், K-17/1/2020-SCD-V-Part (2)ன்படி.

[27] ஆகஸ்ட் 2024 நிலவரப்படி, Pre MS-SCக்கான இணையதளம் செயல்படுத்தப்படவில்லை.

விண்ணப்பிக்காமலும் (ii) வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் போன்ற தேவையான ஆவணங்கள் துறையால் சரிபார்க்கப்படாமலும் வழங்கப்பட்டது. **பத்தி 4.6.3ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, 2022-23ஆம் ஆண்டிற்கான Pre MS-ST உதவித்தொகை வழங்கலிலும் மேற்கூறப்பட்ட நடைமுறையே பின்பற்றப்பட்டது.

EMISல் பள்ளிக் கல்வித் துறையால் பராமரிக்கப்படும் மாணவர்களின் தரவு AD & TW துறையால் பயன்படுத்தப்பட்டது எனவும் முக்கிய தகுதிக்கான நிபந்தனைகளான சாதி மற்றும் வருவாய் சான்றிதழ்களைச் சரிபார்க்க, இது மின் ஆளுமை முகமையால் (TNeGA) பராமரிக்கப்படும் சான்றிதழ் வழங்கும் துறையான வருவாய் துறையின் தரவுத்தளத்துடன் சரிபார்க்கப்பட்டது எனவும் அரசு பதிலளித்தது (ஜூலை 2024).

இருப்பினும், உதவித்தொகை பெறத் தகுதியான மாணவர்களின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ₹2.50 இலட்சத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்று இருந்தாலும், EMIS தரவுகளில், அதற்கான வருமான அடுக்குகளில் ஒன்றில் ₹2 இலட்சம் முதல் ₹3 இலட்சம் வரை என்று குறிப்பிடப்பட்டிருப்பதை தணிக்கை கண்டது. எனவே, பெற்றோரின் ஆண்டு வருமான அளவுகோலின்படி தகுதியான பயனாளிகளைக் கண்டறிவது சாத்தியமற்ற ஒன்றாகிறது.

நிறைவுக் கூட்டத்தின் போது, துறையானது ஒரு தன்னியக்க களஞ்சிய (automated repository) அடிப்படையிலான சரிபார்ப்பு செயல்முறைக்கு மாறுவதாகவும், பள்ளிக் கல்வித் துறையிடம் வருமான அடுக்குகளை மாற்றியமைக்கும்படி கோரப்பட்டுள்ளதாகவும் DADW கூறினார்.

## 2.6 உதவித்தொகை செலுத்தம்

திட்ட வழிகாட்டுதல்களின்படி[28], உதவித்தொகையானது ஏப்ரல் 01 அல்லது கல்வி நிறுவனத்தில் சேரும் மாதம், இவற்றுள் எது பிந்தையதோ அது முதல் அந்த AYல் பரீட்சைகள் முடிவடைந்த மாதம் வரை செலுத்தப்படலாம். உதவித்தொகை புதுப்பிக்கப்படும் நேர்வில் முந்தைய ஆண்டில் உதவித்தொகை வழங்கப்பட்ட மாதத்திற்கு அடுத்த மாதத்திலிருந்து அது செலுத்தப்படும்.

### 2.6.1 உதவித்தொகை வழங்குவதில் தாமதம்

மாணவர்களுக்கு உதவித்தொகை உரிய நேரத்தில் மற்றும் முறையாக வழங்கப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். 2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட Pre MS-SC உதவித்தொகையின் தணிக்கை பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- தெரிவு செய்யப்பட்ட 67 கல்வி நிறுவனங்களின் 8,037 நேர்வுகளில் பணம் செலுத்தப்படுவதில் ஒரு மாதம் முதல் ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தாமதம் ஏற்பட்டது. இவ்வகையில் பயனாளிகளுக்கு செலுத்தப்பட்ட தொகை ₹2.29 கோடியாகும் **(இணைப்பு 2.5).**

[28] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2017ன் பத்தி 9 மற்றும் 16.2.

- மாநில அளவில், 4,73,504 நேர்வுகளில் பணம் செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது. செலுத்தப்பட்ட தொகை ₹135.25 கோடி ஆகும் **(இணைப்பு 2.5).**

மத்திய அரசின் உதவி போதுமான அளவில் வெளியிடப்படாததே 2017-20 ஆண்டுகளில் உதவித்தொகை தாமதமாக வழங்கப்பட்டதற்கான காரணம் ஆகும். மேலும், இதன் காரணமாக தொடர்ந்து வந்த ஆண்டுகளில் உதவித்தொகை கொண்டு செல்லப்பட்டு வழங்கப்பட நேரிட்டது என்று அரசு பதிலளித்தது (ஜூலை 2024). மேலும், மத்திய அரசின் நிபந்தனைகளின்படி உதவித்தொகை இணையதளத்தை தொடர்ந்து மாற்றியமைத்ததாலும், கணிசமான எண்ணிக்கையிலான மாணவர்கள் தங்கள் வங்கிக் கணக்குகளில் தங்கள் ஆதாரை இணைக்காததாலுமே 2021-23 ஆண்டுகளில் இத்தாமதம் ஏற்பட்டதாக பதிலில் கூறப்பட்டது.

இருப்பி , திட்டத்தின் வழிகாட்டுதல்களின்படி[29], மத்திய உதவித்தொகை நிலுவையில் இருந்த நிலையில், உதவித்தொகை மாநில பட்ஜெட்டில் இருந்து செலுத்தப்பட்டு, அத்தொகை திரும்ப பெறும்படி கோரப்படலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மத்திய வெளியீட்டின் தாமதத்தால், மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவது நிறுத்தி வைக்கப்படக்கூடாது என்று தணிக்கை கண்டது.

### 2.6.2 பயனாளிகளின் தவறான வங்கிக் கணக்கு விவரங்கள் காரணமாக உதவித்தொகை வழங்கப்படாமை

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், 63 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 1,396 மாணவர்களின் வங்கிக் கணக்குகளில், பல்வேறு காரணங்களால்[30] ₹35.39 இலட்சம் செலுத்தப்படவில்லை எனத் தணிக்கை கவனித்தது **(இணைப்பு 2.6)**. இத்தொகையில், தெரிவு செய்யப்பட்ட 44 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 571 மாணவர்களின் 2017-20 ஆண்டுகளுக்கான உதவித்தொகையான ₹16.17 இலட்சம் அரசுக்கு திருப் செலுத்தப்பட்டது.

Pre MS-SC, PMS-SC மற்றும் PMS-SCC[31] திட்டங்களின் 2014-20 ஆண்டுகளுக்கான இது போன்று திருப்பி அனுப்பப்பட்ட நேர்வுகள் சிறப்பு முகாம்கள் மூலம் செயலாக்கப்பட்டன என அரசு பதிலளித்தது (ஜூலை 2024). செயலாக்கப்படாத தொகை மார்ச் 2023ல் அரசுக் கணக்கில் ஒப்படைக்கப்பட்டது. நிறைவுக் கூட்டத்தின்போது, உதவித்தொகை வழங்குவது முற்றிலும் ஆதார் அடிப்படையிலானதாக மாறும்போது இந்த சிக்கல் தீர்க்கப்படும் என்று DADW கூறினார்.

---

[29] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2017ன் பத்தி 16.2.

[30] முடக்கப்பட்ட அல்லது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்ட கணக்கு, முடிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட கணக்கு, வழக்கின் கீழுள்ள கணக்கு, செல்லாத கணக்கு, செயல்பாடற்ற கணக்கு, இதர கணக்குகள், இது போன்ற வங்கி கணக்கு இல்லை போன்றவை.

[31] கிருத் வ மதம் மாறிய ஆதிதிராவிடர் மாணவர்களுக்கான மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்.

இவ்வாறு, உதவித்தொகை வழங்குவதில் காணப்பட்ட தாமதம் மற்றும் பயனாளிகளின் தவறான வங்கி கணக்கு விவரங்கள் காரணமாக உதவித்தொகை வழங்கப்படாதது போன்றவை, தேவையுடைய SC மாணவர்கள் தங்கள் கல்வியை நிறைவு செய்வதில் நிதி நெருக்கடியை ஏற்படுத்தியது.

## 2.7 Pre MS-SCன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

தகுதியுள்ள பயனாளிகளுக்கு சரியான நேரத்தில் உதவித்தொகை வழங்கும் வகையில் மாநில அரசு, கள ஆய்வுகள், சமூகத் தணிக்கைகள், தரவு பகுப்பாய்வுகள் போன்றவற்றை உள்ளடக்கிய வலுவான கண்காணிப்பு அமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும் என்று திட்ட வழிகாட்டுதல்கள்[32] வரையறுக்கின்றன. மேலும், வெளிப்படைத்தன்மை, பொறுப்புடைமை, செயல்திறன் மற்றும் தாமதமின்றி உதவித்தொகை சரியான நேரத்தில் வழங்கப்படுதல் ஆகியவற்றை உறுதிசெய்யும் வலுவான பாதுகாப்பு அம்சங்களுடன் கூடிய இணையதளத்தில் திட்டங்கள் செயலாக்கப்பட வேண்டும் என்றும் வழிகாட்டுதல்கள்[33] கூறுகின்றன.

இருப்பினும், தீர்க்கப்படவேண்டிய பின்வரும் சிக்கல்களைத் தணிக்கை கவனித்தது:

- மாணவரால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துத் தரவுகளும்[34] தானாகச் சரிபார்க்கப்பட, அவற்றின் தரவுத்தளம், டிஜிலாக்கர் அல்லது அது போன்ற பிற வழிமுறைகளோடு இணைக்கப்படவில்லை.
- மாணவர்களின் முன்னேற்றம் மற்றும் கல்வி நிறுவனத்தின் செயல்திறனைக் கண்காணிப்பதற்கான ஒரு செயல்திறன் தொகுதி பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்டு இணைக்கப்படவில்லை.
- பயனாளிகளின் தரவு விவரங்களின் இரட்டைப்பதிவு (duplication) நீக்கம் செய்யப்படுவதை உறுதி செய்வதற்காக, பல்வேறு உதவித்தொகை திட்டங்களின் கீழ் பயனாளிகளின் முழுமையான தரவுத்தளம் பராமரிக்கப்பட வேண்டும்.
- திட்ட விளைவுகளை அறியும்படி, திட்டம் மதிப்பீடு செய்யப்படவில்லை.
- திட்டத்தில் பதிவு செய்யப்பட்ட மாணவர்களின் கல்வி முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கு ஒரு வலுவான கண்காணிப்பு பொறிமுறை அமைக்கப்படவில்லை.

---

[32] Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2017ன் பத்தி 17; Pre MS-SC வழிகாட்டுதல்கள், 2021-26ன் பத்தி 5.7.

[33] பத்தி 11.

[34] வசிக்கும் இடம், தகுதி, சாதி நிலை, ஆதார் அடையாளம் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்கள் குறித்து.

- அல்காரிதம் மூலம் தொடர்பற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட குறைந்தது 10 விழுக்காடு கல்வி நிறுவனங்களை/ மாணவர்களை உள்ளடக்கிய வட்டார/மாவட்ட/மாநில அளவிலான நேரடி சரிபார்ப்புகள் நடத்தப்படவில்லை.

ஒரு புதிய உதவித்தொகை இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதால், மேற்கூறப்பட்ட குறைபாடுகளுக்கு வரும் நிதியாண்டில் தீர்வு காணப்படும் என்று அரசு பதிலளித்தது (ஜூலை 2024). மேலும், இணையதள டாஷ்போர்டு மூலம் கண்காணிப்பு திறம்பட மேற்கொள்ளப்படும் என்றும் கூறப்பட்டது.

நிறைவுக் கூட்டத்தின் போது, குறைந்தபட்சம் 10 விழுக்காடு கல்வி நிறுவனங்கள்/மாணவர்கள் மீதான நேரடி சரிபார்ப்பு மாவட்ட அளவிலான அதிகாரிகளால் நடத்தப்படும் என்று DADW கூறினார்.

இவ்வாறு, நேரடி சரிபார்ப்பு சோதனைகள் மற்றும் சமூக/மதிப்பீட்டுத் தணிக்கை மற்றும் சரிபார்ப்பு ஆய்வுகள் ஆகியவற்றுடன் கூடிய திறம்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பை செயல்படுத்துவதன் மூலம் திட்டத்தின் நோக்கங்கள் எதிர்பார்க்கப்படும் வகையில் நிறைவேறுவதை உறுதி செய்யும்.

# அத்தியாயம் III

# ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

# அத்தியாயம் III

## ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், சராசரியாக 39 விழுக்காடு பள்ளிகள் 2019-22 ஆண்டுகளில் தங்கள் பள்ளிகளில் படிக்கும் SC/ST மாணவர்களுக்கான PMS திட்டத்தைப் பயன்படுத்தவில்லை. தகுதியுடைய 20 முதல் 29 விழுக்காடு மாணவர்கள், 2019-22 ஆண்டுகளில் இத்திட்டத்தில் பயன்பெறவில்லை. இத்திட்டத்தில் சேர்க்க, மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களை அடையாளம் காண்பதற்கான சிறப்பு முயற்சிகள் அல்லது தொடர் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. தகுதியான மாணவர்களுக்கு ‘இலவச அட்டை’ வழங்கல் செயல்முறை அரசால் செயல்படுத்தப்படாமலேயே இருந்தது. இடைநிறுத்தம் செய்த மாணவர்களை, கல்வி நிறுவனங்களில் மீண்டும் சேரும் வண்ணம் ஊக்குவிக்கப் போதுமான நடவடிக்கைகள் துறை அல்லது கல்வி நிறுவனங்களால் எடுக்கப்படவில்லை. ஆதி திராவிடர் நல இயக்குநரகம், நடைமுறையிலிருந்த வழிகாட்டுதல்களுக்கு எதிராக, ₹55.50 கோடியை, 35 நிலையான வைப்புகளாகப் பிரித்து டெபாசிட் செய்திருந்தது. தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில், 27 விழுக்காடு விண்ணப்பங்களில் வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. பெற்றோர்களின் ஆண்டு வருமானம் உச்ச வரம்பை மீறிய 20,509 மாணவர்களுக்கு, ₹41.95 கோடிக்கான ஒப்புதல் அளிக்கப்பட்டு உதவித்தொகை வழங்கப்பட்டது. நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களை நிரப்புவதில், கல்வி நிறுவனங்களின் மாணவர் சேர்க்கை செயல்முறையில் வெளிப்படையின்மை, தன்னிச்சை மற்றும் சுயவிருப்புரிமை ஆகியவை காணப்பட்டன. தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தவறான தரவு தளத்தாலும், அதன் காரணமாக வின்னப்பங்கள் ஒருதலைபட்சமாக DoTEஆல் நிராகரிக்கப்பட்டதாலும், 5,801 மாணவர்களுக்கு ₹38.04 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவில்லை. பயனாளிகளுக்கு 2022-23ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை, 2021-22ஆம் ஆண்டின் வழங்கலுடன் ஒப்பிடுகையில், 2022-23ஆம் ஆண்டில், 30,424 மாணவர்கள், ₹17.90 கோடி அதிகமாக பெற்றிருந்தது வெளியானது. 160 மாணவர்கள் மாநிலத்தின் பகிர்வான 40 விழுக்காடு உதவித்தொகையை இரண்டு முறை பெற்றிருந்தனர். இவ்வாறு செலுத்தப்பட்ட கூடுதல் கட்டணம் ₹13.50 இலட்சம் என கணக்கிடப்பட்டது. சிறுபான்மையினருக்கான PMS-SC மற்றும் PMS உதவித்தொகை; முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை மற்றும் PMS-SC உதவித்தொகை, போன்ற இரண்டு வகையான உதவித்தொகைகளை மாணவர்கள் பெற்ற நேர்வுகள் காணப்பட்டன. ஒரு வலுவான தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு இல்லாதது. மதிப்பீடு/சமூகத் தணிக்கை மற்றும் நேரடி ஆய்வுகளை நடத்தாதது ஆகியவை திட்டங்களின் போதிய கண்காணிப்பின்மைக்கு வழிவகுத்தது.

## 3.1 முன்னுரை

மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தின் முதன்மைத் திட்டமான ஆதி திராவிடர் மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டமானது (PMS-SC), SC மாணவர்களின் கல்வி உரிமைக்கான மத்திய அரசின் முன்னோடித் திட்டம் ஆகும். இது, 1944 முதல் செயல்பட்டு வருகிறது, PMS-SC என்பது, மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைச் சேர்ந்தவர்களை மையமாகக் கொண்டு, உயர்கல்வியில் SC மாணவர்களின் GERஐ, நிதி உதவி வழங்குவதன் மூலம் கணிசமாக உயர்த்துவதாகும். நிதி உதவியானது, மாணவர்கள் தங்கள் உயர்கல்வியை நிறைவு செய்ய உதவும் வகையில், அவர்கள் தங்கள் உயர்நிலை அல்லது மேல்நிலைக் கல்வியை முடித்த பின் வழங்கப்படுகின்றது.

## 3.2 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

PMS-SCஐப் பெறும் மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள் மற்றும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 3.1**ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 3.1: PMS-SCன் தகுதிக்கான நிபந்தனைகள் மற்றும் முக்கிய அம்சங்கள்**

| வ.எண் | அம்சங்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1 | திட்டத்தின் பரப்பு | இந்திய நாட்டில் மட்டுமே கல்வி கற்க வழங்கப்படுகிறது. விண்ணப்பதாரர்கள் அவர்களது மாநில அரசால்[1] தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். |
| 2 | வழங்குபவர் | விண்ணப்பதாரர் சார்ந்திருக்கும் மாநிலம் அதாவது அவர் வசிக்கும் மாநிலத்தின் அரசு. |
| 3 | **மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள்** | |
| | (அ) மாணவர்களின் வகை | SC |
| | (ஆ) பெற்றோர்/பாதுகாப்பாளரின் ஆண்டு வருமானம் | கடந்த நிதியாண்டில்[2] அனைத்து ஆதாரங்களிலிருந்தும் பெறப்பட்ட தொகை, ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| | (இ) இரட்டை உதவித்தொகை | PMS-SCன் கீழ் உதவித்தொகை பெறுபவர் வேறு எந்த கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகையையும் பெறுபவராக இருக்க கூடாது |
| | (ஈ) தன்னிச்சையாக மற்று வெளிப்படைத்தன்மையற்ற செயல்முறைகள்[3] மூலம் நிரப்பப்பட்ட இடங்கள். | PMS-SC உதவித்தொகைக்கு தகுதி இல்லை. |

1 அரசால் தீர்மானிக்கப்பட்ட குடியுரிமை விதிமுறைகளின்படி, நிரந்தரமாக குடியேறிய அல்லது வசித்து வந்த மாநிலம்.

2 ஒரு வருடத்திற்கு மேல் தொடரும் கல்வி பிரிவுகளுக்கு, மட்டுமே வருமானச் சான்றிதழ், ஒருமுறை மட்டுமே கொடுக்கப்பட வேண்டும், அதாவது சேர்க்கையின் போது மட்டுமே எடுக்கப்பட வேண்டும். வருமானச் சான்றிதழ் மாநில அரசால் தீர்மானிக்கப்படும் ஆணையத்தால் வழங்கப்பட வேண்டும்.

3 மாநில அரசால் தீர்மானிக்கப்பட்ட தகுதிக்கான அளவுகோல்களைப் பின்பற்றாமல், நிர்வாக ஒதுக்கீடு, NRI ஒதுக்கீடு, உடனடி சேர்க்கைகள் போன்றவை உட்பட.

| வ.எண் | அம்சங்கள் | விவரங்கள் | |
|---|---|---|---|
| 4 | **கல்வி பிரிவின் முழு காலத்திற்கான உதவித்தொகை கூறுகள்** | | |
| | (அ) கல்விக் கட்டணம் உட்பட திரும்பப்பெற இயலாத கட்டாயக் கட்டணங்கள். | அரசின் கட்டண நிர்ணய/சீராய்வு குழுவால் நிர்ணயிக்கப்பட்டபடி | |
| | (ஆ) கல்விக்கான வருடாந்திர கொடுப்பனவு[4]: | | |
| | **கல்வி பிரிவுகள்** | **விடுதி மாணாக்கர்கள்** | **வெளி மாணாக்கர்கள்** |
| | **குரூப் 1:** UG/PG நிலை தொழில்முறை பிரிவுகள் | ₹13,500 | ₹7,000 |
| | **குரூப் 2:** பட்டம்/டிப்ளமோ/சான்றிதழுக்கு வழிவகுக்கும் பிற தொழில்முறை பிரிவுகள் | ₹9,500 | ₹6,500 |
| | **குரூப் 3:** குரூப் I & IIன் கீழ் சேர்க்கப்படாத UG/PG பிரிவுகள் | ₹6,000 | ₹3,000 |
| | **குரூப் 4:** உயர்நிலைக்குப் பிந்தைய (Xஆம் வகுப்புக்குப் பிந்தைய நிலை) பட்டமற்ற பிரிவுகள் அனைத்தும் | ₹4,000 | ₹2,500 |
| | (இ) திவ்யாங் மாணவர்களுக்கு கூடுதல் உதவித்தொகை | 10 விழுக்காடு கூடுதல் உதவித்தொகை. | |
| 5 | நிதியளிப்பு முறை | மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 60:40[5] பகிர்வு விகிதம். | |
| 6 | மாணவர்களுக்கு உதவித்தொகை செலுத்தப்படும் வழிமுறை | DBT[6] மூலம். | |

(ஆதாரம்: PMS-SC வழிகாட்டுதல்கள்)

## 3.3 செயல்முறை

PMS-SC வழிகாட்டுதல்களின்படி[7], உதவித் தொகைக்கான விண்ணப்பம், ஆன்லைனில், உதவித்தொகை இணையதளத்தில், சாதிச் சான்றிதழ் மற்றும் வருமானச் சான்றிதழ் மற்றும் அனைத்து கல்விச் சான்றிதழ்களின் சுய சான்றொப்பமிடப்பட்ட நகலுடன் கல்வியாண்டின் நவம்பர் 30ஆம் தேதிக்குள் சமர்ப்பிக்கப்படலாம். அனைத்து வகையிலும் முழுமை பெற்ற விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்கள் கல்வி கற்கின்ற அல்லது கடைசியாகக் கல்வி கற்ற நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இருப்பினும், 2020-26ன் PMS வழிகாட்டுதல்களின் பத்தி 9ன் படி, கல்வி நிறுவனத்தில் சேரும் அதே நாளில் அனைத்து மாணவர்களும்

4 2021-22 முதல் பொருந்தும்.

5 2020-21 முதல் பொருந்தும். 2020-21க்கு முன், அந்தந்த மாநில அரசின் தவிர்க்கவியலாத பொறுப்புக்கு மேல், மாநில அரசுகளால் மேற்கொள்ளப்பட்ட செலவினங்களுக்காக, 100 விழுக்காடு மத்திய உதவி மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டது.

6 2021-22 முதல் பொருந்தும், மாநில அரசின் பங்கு வழங்கப்பட்டதை உறுதிசெய்த பிறகு, மத்திய பங்கு மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் DBT முறையில் நேரடியாக செலுத்தப்படுகிறது.

7 PMS-SC வழிகாட்டுதல்கள் 2018ன், பத்தி 13.

உதவித் தொகைக்கான IT போர்ட்டலில் விண்ணப்பிப்பதை நிறுவனங்கள்[8] உறுதி செய்ய வேண்டும்.

திட்ட வழிகாட்டுதல்களில் பரிந்துரைக்கப்பட்ட ‘மீன்ஸ் டெஸ்ட்’[9]ன் படி, தகுதியான SC மாணவர்களுக்கு PMS-SC உதவித்தொகைகள் அனுமதிக்கப்படுகின்றன. அதன்படி, விண்ணப்பதாரர்கள் தங்களின் தகுதிச் சான்றுகளை நிரூபிக்கத் தேவையான மதிப்பெண் பட்டியல்கள், சாதி மற்றும் வருமானச் சான்றிதழ்களை இணைக்க/பதிவேற்றம் செய்ய வேண்டும்.

உரிய வருவாய் அதிகாரிகளால் வழங்கப்படும் வருமானச் சான்றிதழ், முதல் நிலையாக கல்வி நிறுவனங்களாலும், இரண்டாம் நிலையாக மாவட்டங்களாலும் சரிபார்க்கப்படுகிறது. அரசு/அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உள்ள PMS-SC பயனாளிகளுக்கான தகுதி இரண்டு நிலைகளில் சரிபார்க்கப்படுகிறது. சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் உள்ள PMS-SC பயனாளிகளின் வருமானச் சான்றிதழ், மூன்றாம் நிலை சரிபார்ப்பிற்காக, தொழில்நுட்பக் கல்வி இயக்குநரகம் (DoTE), மருத்துவக் கல்வி இயக்குநரகம், கல்லூரிக் கல்வி இயக்குநரகம் போன்ற கல்வி நிர்வாகத் தலைமையகங்களுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.

திட்ட வழிகாட்டுதல்களின்படி[10], மாநிலம், முந்தைய ஆண்டின் பிப்ரவரி மாதம் 28ஆம் நாள் அல்லது அதற்கு முன், PMS-SC திட்டத்திற்கான மாநில அளவிலான வருடாந்திரத் திட்டத்தைத் (AAP) தயாரிக்க வேண்டும். AAPயானது, திட்டத்தின் இலக்குகள், தகுதி, ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைத் திட்டத்தில் சேர்ப்பதற்கான தனிப்பட்ட முன்மொழிவுகள், பயனாளிகளை அடையாளம் காண்பதற்கான செயல்முறைகள், வேலை வாய்ப்பு தரும் கல்விப் பிரிவுகளை அடையாளம் காண்பது, கண்காணிப் அமைப்புகள் போன்றவற்றைத் தெளிவாக வழங்க வேண்டும். AAP மத்திய அரசால் மதிப்பிடப்பட்டு, நிதி முறையின் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள வருடாந்திர அதிகரிப்பின்படி, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் 15க்கு முன் ஒவ்வொரு மாநிலத்திற்கான செலவினம் இறுதி செய்யப்படும்.

மாநிலத்தில் PMS-SCஐ செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு **விளக்கப்படம் 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

---

8 புதுப்பித்தல் மாணவர்களைப் பொறுத்தமட்டில், மாணவர் அடுத்த வகுப்பிற்கு உயர்த்தப்பட்டு, விடுதி/வெளி மாணாக்கராக அதே படிப்பில் சேர்ந்துள்ளனர் என்பது கல்வி நிறுவனத்தில் இருந்து உறுதிசெய்யப்படுதல் மற்றும் மாணவர்களின் வருகை ஆகியவற்றின் அடிப்படையில் தானாகவே புதுப்பிக்கப்படும்.

9 நிதி உதவி பெற ஒருவர் தகுதியானவரா என்பதைத் தீர்மானிக்கும் முறை.

10 PMS-SC வழிகாட்டுதல்கள் 2020-26ன் பத்தி 14.

விளக்கப்படம் 3.1: PMS-SCயை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு




## 3.4 பயனாளிகளின் உள்ளடக்கம்

திட்ட வழிகாட்டுதல்களின்படி[11], மாநில அரசு, மே-ஜுன் மாதங்களில், திட்டங்களின் விவரங்களை அறிவித்து, மாநிலத்தின் முன்னணி செய்தித்தாள்களிலும், அந்தந்த வலைதளங்கள்/உதவித்தொகை இணையதளங்கள் மற்றும் பிற ஊடகங்கள் மூலமாகவும் விளம்பரம் செய்து விண்ணப்பங்களை அழைக்கிறது. அரசு, திட்டம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்து செய்தித்தாள்கள் மூலம் விளம்பரங்களை வெளியிட்டிருந்தும் கூட, **பத்திகள் 3.4.1** முதல் **3.4.3** வரை குறிப்பிடப்பட்டுள்ளபடி, தகுதியுடைய அனைத்து SC மாணவர்களும் இத்திட்டத்தின் கீழ் கொண்டு வரப்படவில்லை எனத் தணிக்கை கண்டது.

### 3.4.1 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் போஸ்ட் மெட்ரிக் திட்டங்களில் பள்ளிகள் பங்கேற்காதது

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், EMIS தரவுகளின்படி[12], காணப்பட்ட மொத்த பள்ளிகளின் எண்ணிக்கை, AD & TW துறையின் உதவித்தொகை தரவுகளின்படி, PMS-SC மற்றும் PMS-ST உதவித்தொகை (XI மற்றும் XII வகுப்புகள் மட்டும்) இரண்டையும் பெறும் பள்ளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டது.

---

11 PMS-SC வழிகாட்டுதல்கள், 2018ன் பத்தி XII.

12 EMIS தரவு 2019-20 முதல் மட்டுமே கிடைப்பதாக இருந்தது. முன்னதாக, தரவு கைமுறையில் பராமரிக்கப்பட்டது.

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், சராசரியாக 39 விழுக்காடு பள்ளிகள், 2019-22 காலகட்டத்தில், SC/ST மாணவர்களுக்கான PMS-SC மற்றும் PMS-ST உதவித்தொகையைப் பெறவில்லை என தணிக்கை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது (**இணைப்பு 2.1**).

இத்திட்டம் குறித்த போதிய விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு இல்லாததே பள்ளிகள் இதில் பங்கேற்காமைக்கான காரணமாக இருக்கக்கூடும். மேலும், தகுதியுள்ள SC/ST மாணவர்கள் உதவித்தொகை பெற இயலாமைக்கு இது வழி வகுத்திருக்கக்கூடும் எனவும் தணிக்கை கண்டது.

நிறைவுக் கூட்டத்தின் போது, செயலாளரும் DADWயும் தொடர்புடைய தரவுகளைத் துறை ஆராயும் பொருட்டு தணிக்கையிடம் அதைக் கோரினர். இது தொடர்பாக துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது (ஆகஸ்ட் 2024).

### 3.4.2 தகுதி வாய்ந்த SC மாணவர்கள் திட்டத்தில் சேர்க்கப்படாதது

தகுதி வாய்ந்த SC பயனாளிகளின் தோராயமான எண்ணிக்கையைக் கண்டறிய, EMISன் படியான PMS-SC பெறுவதற்கு தகுதியுடைய XIஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கை, 2019-23[13] காலக்கட்டத்தில் விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கையுடன், இவ்விரண்டிற்கும் இடையே இருந்த இடைவெளியைக் கணக்கிடும் பொருட்டு ஒப்பிடப்பட்டது (**அட்டவணை 3.2**).

**அட்டவணை 3.2: திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதி வாய்ந்த மாணவர்கள் (வகுப்பு XI)**

| கல்வி ஆண்டு | EMIS தரவுகளின்படி தகுதி வாய்ந்த பயனாளிகள் | AD & TW தரவுத்தளத்தின்படி புதிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை | திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதி வாய்ந்த மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | | | எண்கள் | விழுக்காடு |
| 2019-20 | 1,80,209 | 1,27,124 | 53,085 | *29* |
| 2020-21 | 1,85,276 | 1,48,384 | 36,892 | *20* |
| 2021-22 | 2,03,416 | 1,55,110 | 48,306 | *24* |
| 2022-23 | 1,73,642 | இல்லை | - | - |

(ஆதாரம்: SE துறையால் வழங்கப்பட்ட EMIS தரவு மற்றும் AD & TW துறையால் வழங்கப்பட்ட உதவித்தொகை தரவுகளின் தரவுப் பகுப்பாய்வு)

**அட்டவணை 3.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, PMS-SC திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதிபெற்ற XIஆம் வகுப்பு மாணவர்கள், 2019-22ல், 20 முதல் 29 விழுக்காடு வரை இருந்தனர். தகுதியுடைய பயனாளிகள் முனைப்புடன் அடையாளம் காணப்படாத நிலையில், இத்திட்டத்தை அறிந்து உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே இத்திட்டம் பயனளித்து வந்தது.

மாநில உதவித்தொகை இணையதளம், 2023-24ல் அறிமுகப்படுத்தப்பட்டு, அனைத்து துறைகளிலும் உள்ள அனைத்து தரவுத்தளங்களின் API ஒருங்கிணைப்புடன், வலுவான ஓரிட நிறுத்த வசதியை (one stop

[13] EMIS தரவு 2019-20 முதல் மட்டுமே கிடைப்பதாக இருந்தது. முன்னதாக, தரவு கை முறையில் பராமரிக்கப்பட்டது.

facility) வழங்குவதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது என அரசு பதிலளித்தது (ஜூலை 2024). மேலும், 2023-24 முதல் அமலுக்கு வந்த EMIS மற்றும் UMISஐப் பயன்படுத்துவதன் மூலம், தகுதியுடைய அனைத்து பயனாளிகளின் தரவைப் பெற்று அவர்களுக்கு திட்டப் பலன்களை துறையால் அளிக்க இயலும் என்று பதிலில் கூறப்பட்டது.

### 3.4.3 மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைச் சேர்ந்த தகுதியான மாணவர்களை அடையாளம் காணாதது

PMS-SC வழிகாட்டுதல்கள்[14], மாநில அரசு பல்வேறு ஆதாரங்களில் இருந்து மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைக் கண்டறிந்து, தகுதியுள்ள மாணவர்களைச் சேர்க்க சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்பட வலியுறுத்துகிறது. அத்தகைய மாணவர்களில் SECC-2011ன்படி மூன்று அல்லது அதற்கு மேற்பட்ட பற்றாக்குறை உள்ள SC குடும்பங்களைச் சேர்ந்தவர்களும் அடங்குவர். இதில் ஒன்று அல்லது இரண்டு பெற்றோருமே கல்வியறிவு இல்லாதவர்களும் மாநில அரசு/நகராட்சி/உள்ளாட்சிப் பள்ளியில் X வகுப்பு தேர்ச்சி பெற்ற பெற்றோர்களும் காணப்பட்டனர். மேலும், கல்வியாண்டு 2021-22ல், PMS-SCன் கீழ் மத்திய அரசு, பயனாளிகளின் மாநில வாரியான தற்காலிக இலக்குகளை நிர்ணயிக்கும் போது, மொத்த இலக்காக நிர்ணயிக்கப்பட்ட 7,71,162 பயனாளிகளுள், மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த பயனாளிகளுக்கான இலக்காக 2,57,054 மாணவர்களை நிர்ணயித்திருந்தது.

இருப்பினும், மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களை அடையாளம் காண, அரசு சிறப்பு முயற்சிகளை மேற்கொள்ளவில்லை அல்லது சிறப்பு நடவடிக்கைகள் எடுக்கவில்லை என்பதை தணிக்கைக் கவனித்தது. மேலும், மத்திய அரசின் 2021-22ஆம் ஆண்டிற்கான இலக்கான 7.71 இலட்சம் மாணவர்களுக்கு எதிராக, 6.95 இலட்சம் மாணவர்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயனடைந்துள்ளனர். இது, திட்டத்தின் பலன் அடையப்படுவதில் 10 விழுக்காடு குறைபாட்டிற்கு[15] வழிவகுத்தது.

அரசு, 2021-22 முதல் 2024-25 ஆண்டுகளுக்கான AAPகளை, PMS-SCக்காக, மத்திய அரசுக்கு அனுப்பும்போது[16], உதவித்தொகைத் தரவுகளுடன் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்கள் தொடர்பான தரவுகள் பதிவேற்றப்படும் என்று கூறியது. மேலும், மாநிலத்தின் ஊரக வளர்ச்சித் துறையால் மேற்கொள்ளப்பட்ட SECC கணக்கெடுப்பு, SC குடும்பங்களில் இருந்து மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைக் கண்டறிந்து, திட்டத்தின் கீழ் அவர்களைச் சேர்க்க பயன்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும், 2021-22லிருந்து AAPகளில் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்கள் தொடர்பான தரவுகளைப் பெற அரசு உறுதியளித்திருந்தாலும்,

---

14 PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்திகள் 6.2 மற்றும் 6.3.

15 (7.71 - 6.95)/7.71 x 100.

16 AAP 2021-22 (நவம்பர் 2021); AAP 2022-23 (ஏப்ரல் 2022); AAP 2023-24 (ஏப்ரல் 2023) மற்றும் AAP 2024-25 (ஜூலை 2024).

போதுமான முயற்சிகள் எடுக்கப்படவில்லை அல்லது விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. மேலும், மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த SC குடும்பங்களை அடையாளம் காண பயன்படுத்தப்பட்ட ஊரக வளர்ச்சித் துறையின் கணக்கெடுப்பு விவரங்கள் தணிக்கைக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

இவ்வாறு, போதிய விளம்பரமின்மை, தகுதியான பயனாளிகளைக் கண்டறிவதற்கு, தரவைப் பயன்படுத்தாதது மற்றும் மிகவும் ஏழ்மை நிலையில் இருந்த குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களைக் கண்டறிவதில் அரசிடம் காணப்பட்ட குறைபாடுகள் ஆகியவற்றால் கணிசமான எண்ணிக்கையிலான தகுதியான SC/ST பயனாளிகளுக்கு உதவித்தொகை கிடைக்க இயலாமற்போனது.

**பரிந்துரை 1:**

**மத்திய அரசின் நிதியுதவித் திட்டங்களின் கீழ் கல்வி உதவித்தொகை பெறத் தகுதிபெறும் மிக ஏழ்மை நிலையிலுள்ள குடும்பங்களில் இருந்து தகுதியுள்ள SC/ST மாணவர்களைச் சேர்க்கும் பொருட்டு, பயனாளிகளை முனைப்புடன் அடையாளம் காணவும், அதற்கான விளம்பர நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அரசு தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

### 3.4.4 இலவச அட்டை வழங்கல்

PMS-SC வழிகாட்டுதல்கள், 2021ன் படி, கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை முன்கூட்டியே செலுத்தாமல் தகுதியுள்ள அனைத்து மாணவர்களும் கல்வி நிறுவனங்களில் சேர்க்கப்படுவதற்கு ‘இலவச அட்டை’ மாநில அரசால் வழங்கப்பட வேண்டும். இது, திட்ட வழிகாட்டுதல்களின்படி, தொகையானது மாணவரின் கணக்கில் செலுத்தப்படும்போது, அத்தொகையை, மாணவரிடமிருந்து வசூலிக்கும்படி கல்வி நிறுவனத்திற்கு அறிவிக்கப்படும் என்ற நிபந்தனையுடன் வழங்கப்படுகிறது.

இலவச அட்டை, தகுதியுள்ள மாணவர்களுக்கு, அரசால் இன்னும் வழங்கப்பட வேண்டிய நிலையிலேயே இருப்பதாகத் தணிக்கை கண்டது.

நிறைவுக் கூட்டத்தின் போது, இலவச அட்டை வழங்குவதில் இருந்த சில சிக்கல்கள் இருப்பதை ஏற்று PMS-SC நிலைக்கு மாறும் Pre MS-SC மாணவர்களுக்கு முதலில் இலவச அட்டை வழங்கத் துறை திட்டமிட்டுள்ளதாக DADW கூறினார்.

இருப்பினும், வழிகாட்டு நெறிமுறைகள் வெளியிடப்பட்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் இலவச அட்டை வழங்கப்படாததால், தகுதியுள்ள மாணவர்கள் கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணங்களை முன்கூட்டியே செலுத்தாமல் கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற முடியாத நிலை ஏற்பட்டிருந்ததைத் தணிக்கை கவனித்தது.

### 3.4.5 PMS-SC பயனாளிகளின் இடைநிறுத்தம்/நீக்கம்

**விளக்கப்படம் 3.2**ல் காட்டப்பட்டுள்ளபடி, 52 தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில், 2017-22 ஆண்டுகளில், எட்டு மாவட்டங்களில் 1,202 மாணவர்கள் இடைநிறுத்தம் செய்திருந்தனர்/ நீக்கப்பட்டனர்.

**விளக்கப்படம் 3.2: தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் இருந்து இடைநிறுத்தம் செய்த பயனாளி மாணவர்களின் விவரங்கள்**




(ஆதாரம்: துறை வழங்கிய உதவித்தொகை தரவுத்தளத்தின் தரவு பகுப்பாய்வு)

அடுத்த ஆண்டில் மாணவரின் உதவித்தொகை புதுப்பிக்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்ப்பதற்காக மாணவர்களின் உதவித்தொகை ID ஒரு தனிப்பட்ட அடையாளங்காட்டியாக எடுத்துக் கொள்ளப்பட்டு, பயனாளிகளின் தரவுத்தளம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இப்பகுப்பாய்வில், கல்வியாண்டிற்கு அடுத்த ஆண்டில், மாநில அளவில் 37,553 மாணவர்கள் இடைநிறுத்தம் செய்திருந்தது/நீக்கப்பட்டிருந்தது வெளியானது **(இணைப்பு 2.2)**.

PMS-SC வழிகாட்டுதல்களின்படி[17], மாநிலங்கள், அனைத்து மேல்நிலை பள்ளிகளையும் உட்படுத்தி பள்ளியின் சேர்க்கைக்கான மாணவர்களை ஒரு ஒழுங்குமுறையில் அடையாளம் காண்பதும் மற்றும் XII வகுப்பிற்குப் பிறகு கல்வி நிறுத்தம் செய்த மாணவர்களை மீண்டும் உயர்கல்வியில் சேர ஊக்குவிப்பதும் அவசியமாகிறது.

இருப்பினும், இடைநிறுத்தம் செய்த மாணவர்கள் மீண்டும் சேர்வதை ஊக்குவிக்க துறை அல்லது கல்வி நிறுவனங்கள் போதுமான நடவடிக்கைகள் எடுக்கவில்லை எனத் தணிக்கை கண்டது. இது, PMS-SC உதவித்தொகையின் நோக்கத்தை தோற்கடிக்கும் வகையில் இருந்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது, தணிக்கை மூலம் வழங்கப்பட்ட தரவுகளை துறை பகுப்பாய்வு செய்யும் என்று DADW கூறினார். இது தொடர்பாக துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை எதிர்பார்க்கப்படுகிறது (ஜுன் 2024).

17 PMS வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்தி 6.5.

## 3.5 திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை

PMS-SC திட்டம், 2019-20 வரை மாநில அரசுகளால் செயல்படுத்தப்பட்டது. இக்காலகட்டத்தில், மாநிலங்கள், தங்களது தவிர்க்கவியலாத பொறுப்புகளுக்கு கூடுதலாக, திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்பட்ட மொத்த செலவினங்களுக்கான 100 விழுக்காடு CAயினையும் மத்திய அரசிடமிருந்து பெற்றன. நிதியளிப்பு முறை, தவிர்க்கவியலாத பொறுப்பு முறையிலிருந்து மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையேயான 60:40 பகிர்வு விகிதம் என்ற நிலையான வடிவத்திற்கு 2020-21ல் மாற்றியமைக்கப்பட்டது.

கல்வியாண்டு 2021-22 முதல், PMS-SCகான மத்திய பங்கானது, தொடர்புடைய மாநில அரசின் பங்கு வழங்கப்பட்டதை உறுதிசெய்த பிறகு மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக DBT முறையில் செலுத்தப்படுகிறது. நிர்வாக மானியத்திற்குத் தேவைப்படும் நிதியைத் தவிர வேறு எந்த மத்திய நிதியும் இத்திட்டத்தின் கீழ் மாநில அரசுகளுக்கு வழங்கப்படமாட்டாது.

### 3.5.1 மாணவர்களின் உள்ளடக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்

2017-23 காலகட்டத்தில் வழங்கப்பட்ட உதவித்தொகைகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் **விளக்கப்படம் 3.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.




(ஆதாரம்: 2021-25 ஆண்டுகளுக்கான AAPகள்)

### 3.5.2 நிதி இருப்பு மற்றும் உதவித்தொகை வழங்கல்

PMS-SC உதவித்தொகையின், 2017-23 காலகட்டத்திற்கான நிதி இருப்பு மற்றும் வழங்கல் **அட்டவணை 3.3ல்** வழங்கப்பட்டுள்ளது.

அட்டவணை 3.3: 2017-23 காலகட்டத்தில் நிதிகளின் வரவினம் மற்றும் செலவினம்

(₹ கோடியில்)

| ஆண்டு | | தொடக்க இருப்பு | கோரப்பட்ட நிதி/ வருடாந்திர தேவை | தவிர்க்க–வியலாத பொறுப்பு/சராசரி தேவை | பெறப்பட்ட நிதி | | மொத்த நிதி இருப்பு | மொத்த செல–வினம் | இறுதி இருப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | மத்திய பங்கு | மாநில பங்கு | | | |
| (1) | | (2) | (3) | (4) | (5) | (6) | (7) = (5)+(6)+(2) | (8) | (9) = (7)-(8) |
| 2017-18 | | (-) 1,841.70 | 1,689.33 | 1,526.46 | 434.48 | 1,526.46 | 119.26 | 1,689.33 | (-) 1,570.10 |
| 2018-19 | | (-) 1,570.10 | 1,431.24 | 1,526.46 | 1,407.38 | 1,431.24 | 1,268.55 | 1,431.24 | (-) 162.69 |
| 2019-20 | | (-) 162.69 | 1,245.38 | 1,526.46 | 925.60 | 1,245.38 | 2,008.29 | 1,245.38 | 762.91 |
| 2020-21 | | 762.91 | 1,089.15 | 435.60 | 120.23 | 435.60 | 1,318.74 | 1,089.15 | 229.70 |
| 2021-22 | மத்திய | 229.70 | 608.66 | - | - | - | - | - | - |
| | மாநில | - | 441.58 | 441.58 | - | 513.02 | 513.02 | 441.58 | 71.44 |
| 2022-23 | மத்திய | - | - | - | - | - | - | - | - |
| | மாநில | 71.44 | 461.42 | 461.42 | - | 461.63 | 533.07 | 472.01 | 61.06 |

(ஆதாரம்: ADWன் இயக்குநரகத்தால் வழங்கப்பட்ட விவரங்கள்)

- மாநில மற்றும் மத்திய பங்குகள், 2021-22 முதல், வெவ்வேறு நேரங்களில் தனித்தனியாக செலுத்தப்பட்டு வருகின்றன மற்றும் மத்திய பங்கு PFMS போர்ட்டலில் வழங்கப்படவில்லை. செயல்படுத்தும் முகமையான மாநில அரசு, பயனாளிகளுக்கு வழங்கப்பட்ட மத்திய பங்குகள் குறித்த விவரங்களைக் கொண்டிருக்கவில்லை. இதனால் அனைத்து பயனாளிகளுக்கும் வழங்கப்பட்ட உதவித்தொகை ஒரே அளவிலானதா என்பதை அறிய இயலவில்லை என தணிக்கை கண்டது.

### 3.5.3 நிதி மாற்றம்

GFR, 2017ன் விதி 230(8)ன் படி, வழங்கப்பட்ட நிதியிலிருந்து பெறப்படும் வட்டியானது, அந்தந்த தொகுநிதிகளுக்கு விகிதாச்சார அடிப்படையில் கட்டாயமாக அனுப்பப்படுவதை தனித்த நோடல் முகமை (Single Nodal Agency - SNA) உறுதி செய்யும் . இருப்பினும், திரட்டப்பட்ட மொத்த வட்டித்தொகையும் மத்திய அரசிற்கான அதன் பங்கு பிரிக்கப்படாமல், மாநில அரசு கணக்கிலேயே வைக்கப்பட்டு வந்ததைத் தணிக்கை கவனித்தது.

GoI வழிகாட்டுதல்களின்படி[18], SNAகள், பெறப்பட்ட அனைத்து நிதிகளையும் SNA கணக்கில் மட்டுமே வைத்திருக்கும் மற்றும் நிலையான வைப்பு/ஃப்ளெக்சி-கணக்கு/மல்டி-ஆப்ஷன் வைப்பு கணக்கு/கார்ப்பரேட் லிக்விட் கால வைப்பு (Corporate Liquid Term Deposit - CLTD) கணக்கு போன்றவற்றுக்கு[19] கணக்கை மாற்றாது. இருப்பினும், ADWன் இயக்ககம் தனது SB கணக்கிலிருந்து 15-03-2022 மற்றும் 31-03-2022க்கு இடையே பல்வேறு தேதிகளில், ₹55.50 கோடியைத் திரும்ப எடுத்துக் கொண்டது. மேலும், 35 நிலையான வைப்புகளாகப்[20] பிரித்து IDBI வங்கியில்

[18] நிதி அமைச்சகம், செலவினத் துறை (PFMS பிரிவு)யின் 23-03-2021 தேதியிடப்பட்ட அலுவலக குறிப்பாணை.

[19] திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட வேண்டிய செலுத்தங்கள் தவிர மற்ற நிதிகள் வேறு எந்த வங்கிக் கணக்கிற்கும் அனுப்பப்படமாட்டாது.

[20] ₹1.5 கோடி × 34; ₹0.5 கோடி × 1.

91 நாட்களுக்கு டெபாசிட் செய்திருந்ததை தணிக்கை கவனித்தது. நிதியாண்டு 2021-22ன் இறுதியில் செயல்படுத்தப்பட்ட இந்த நடவடிக்கை, நடைமுறையில் இருக்கும் வழிகாட்டுதல்களுக்கு எதிரானது.

நிறைவுக் கூட்டத்தின் போது, நிலையான வைப்புத்தொகைகளுக்கு நிதியைத் திருப்புவது விதிமீறல் என்பதை செயலாளர்/DADW ஒப்புக்கொண்டார். அனைத்து FD கணக்குகளும் முடிக்கப்பட்டு, வட்டி முறையாக அரசுக் கணக்கில் செலுத்தப்பட்டது என அரசு பதிலளித்தது (ஜூலை 2024). உதவித்தொகை நிதிகள் 2021-22 முதல் SNA கணக்கில் பராமரிக்கப்பட்டு வருவதால் இனி நிதிகளை FDகளாக மாற்றுவதற்கான வாய்ப்புகள் இல்லை என்றும் பதிலில் கூறப்பட்டது.

## 3.6 உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு

திட்ட வழிகாட்டுதல்களின்படி[21], தங்கள் கல்வி நிறுவனங்களில் அனுமதிக்கப்பட்ட அனைத்து மாணவர்களும், அந்த நிறுவனங்களில் சேரும் அதே நாளில் உதவித்தொகைக்கான தகவல் தொழில்நுட்ப இணையதளத்தில் விண்ணப்பிப்பதை கல்வி நிறுவனங்கள் உறுதி செய்ய வேண்டும். புதுப்பித்தல் மாணவர்களைப் பொறுத்தவரை மாணவர் அடுத்த வகுப்பிற்கு உயர்வு பெற்று, விடுதி/வெளி மாணவராக அதே படிப்பில் சேர்ந்துள்ளனர் என்பதையும் மாணவரின் வருகைப் பதிவையும் அவரது கல்வி நிறுவனம் சரிபார்த்து உறுதிப்படுத்துவதன் அடிப்படையில் மாணவர் தானாக புதுப்பிக்கப்படுவர்.

### 3.6.1 பல்வேறு நிலைகளில் விண்ணப்பங்களின் செயலாக்கத்திற்கான கால வரம்பு இல்லாதது

இணையதளம், 2017-23 காலக்கட்டத்தில், AYன் டிசம்பர் மாதம் மற்றும் அடுத்த ஆண்டின் ஜனவரி மாதங்களுக்கு இடையே தாமதமாகத் தொடங்கப்பட்டது. இத்தாமதத்தால், **பத்தி 3.7.1ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, ADWன் இயக்ககத்தால் உதவித்தொகை அனுமதிக்கப்படுவதிலும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதிலும் தாமதம் ஏற்பட்டது.

பல்வேறு கல்வி மற்றும் பாடப் பிரிவுகளுக்கு வெவ்வேறு கல்வி காலெண்டர்கள் பின்பற்றப்படுவதால், விண்ணப்பங்களைப் பெறவும் அவற்றைச் செயலாக்கவும் உறுதியான ஒரு கால வரம்பை பின்பற்றுவதில் துறைக்கு சிரமம் ஏற்படுவதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2024). தகுதியுள்ள அனைத்து விண்ணப்பங்களும், அந்தந்த கல்வியாண்டிற்குள் செயலாக்கப்பட்டு வழங்கப்படுவதை துறை உறுதி செய்கிறது. மேலும், AD&TW உதவித்தொகை இணையதளம், 2022-23 முதல், ஒருங்கிணைந்த மாநில உதவித்தொகை இணையதளத்திற்கு மாறியுள்ளது. மேலும், DBT மூலம் பகிர்வு முறையின் (60:40) படி உதவித்தொகை வழங்கப்படுகிறது. இக்காரணங்களால் மத்திய அரசின் தேசிய உதவித்தொகை இணையதளத்துடன் கால வரம்புகள் பொதுப்படையாக இணைக்கப்பட்டுள்ளன.

---

[21] PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்தி 9.

இருப்பினும், திட்ட வழிகாட்டுதல்களின்படி IT போர்ட்டலில் மாணவர்களின் விண்ணப்பச் செயலாக்கமும் உதவித்தொகை இணையதளத்தில் மாணவர்கள் விவரங்கள் கல்வி நிறுவனத்தால் சரிபார்க்கப்படுவதும், சேர்க்கையின் அதே நாளிலேயே மேற்கொள்ளப்பட வேண்டும் எனத் தணிக்கை கண்டது.

### 3.6.2 உதவித்தொகை விண்ணப்பங்களின் போதிய ஆய்வின்மை

உதவித்தொகை விண்ணப்பங்கள் ADWன் இயக்ககத்தால் அனுமதிக்கப்படுவதற்கு முன்னதாக நிறுவன அளவிலும் மாவட்ட அளவிலும் (DADTWO) மற்றும் துறைகளின் நிர்வாகத் தலைவர்களாலும்[22] ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இருப்பினும், உதவித்தொகை விண்ணப்ப ஆவணங்களின் ஆய்வு மற்றும் உதவித்தொகை தரவுகளின் மீதான பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்/பள்ளிகளில், 2,766 விண்ணப்பங்களுள் 758 விண்ணப்பங்களில்[23] (27 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை.
- PMS-SC வழிகாட்டுதல்களின்படி[24], 16 பிப்ரவரி 2017 முதல் ஆதார் அனைத்து உதவித்தொகை திட்டங்களுக்கும் அடையாள ஆவணமாக உள்ளது. உதவித்தொகையின் 2020-21ஆம் ஆண்டிற்கான தரவுத்தளத்தின் மீதான பகுப்பாய்வு 165 பயனாளிகள்[25] தவறான ஆதார் எண்கள் வழங்கியிருந்ததை வெளிப்படுத்தியுள்ளது.
- துறையின் உதவித்தொகை பயனாளிகளின் தரவுத்தளத்தை மற்ற பல்வேறு தரவுத்தளங்களுடன்[26] ஒப்பிடுகையில், 20,509 SC மாணவர்களின் பெற்றோரின் வருமானம் ஆண்டு வரம்பான ₹2.50 இலட்சத்தை மீறியிருந்ததால், 2017-23 காலகட்டத்தில், அனுமதியற்ற தொகையாக ₹41.95 கோடி வழங்கப்பட நேரிட்டது (**இணைப்பு 2.4**).

---

22 கல்லூரி கல்வி இயக்குநர், தொழில்நுட்ப கல்வி இயக்குநர், மருத்துவ கல்வி இயக்குநர் போன்றவர்கள்.

23 வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் முறையே 708 மற்றும் 638 விண்ணப்பங்களில் இணைக்கப்படவில்லை. இரண்டிலும் இருந்த (overlapped) விண்ணப்பங்களை சரிசெய்த பிறகு தகுதியற்ற விண்ணப்பங்களின் எண்ணிக்கை அடையப்பெற்றது.

24 PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்திகள் 11.15 மற்றும் 11.6.

25 ஒரு பயனாளியின் ஆதார் '(அப்போஸ்ட்ரோபி) உடன் தொடங்குகிறது, ஒரு மாணவரது ஆதார் '0' உடன் தொடங்குகிறது, இரண்டு பயனாளிகளின் ஆதார் '1' உடன் தொடங்குகிறது, 153 பயனாளிகளின் ஆதார் தவறானது என காட்டப்பட்டுள்ளது, ஒரு பயனாளிக்கு நான்கு இலக்கங்கள் கொண்ட ஆதார் மட்டுமே இருந்தன. ஆறு பயனாளிகள் 11 இலக்க ஆதார் எண்ணைக் கொண்டிருந்தன மற்றும் ஒரு ஆதார் எண் '999999999999' என காட்டப்பட்டிருந்தது.

26 பயனாளிகளின் பெற்றோரின் வருமான வரி விவர அறிக்கை, தமிழ்நாடு PAG (A&E)-யிடமிருந்து பெறப்பட்ட ஓய்வூதிய தரவு, TNEGAயிலிருந்து வருமான சான்றிதழ் தரவு, பள்ளி கல்வித் துறையின் EMIS தரவுத்தளம் போன்றவை.

அரசு பின்வருமாறு பதிலளித்தது (ஜுலை 2024):

- தவறான ஆதார் எண்களைக் கொண்ட மாணவர்களின் ஆதார் விவரங்களையும், அவர்களின் தற்போதைய கல்வி நிலையையும் ஆதாரங்களுடன் வழங்க கல்வி நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன (ஜுன் 2024). நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பதிலின் அடிப்படையில் தேவையான இடங்களில் உதவித்தொகை மீளப்பெறும் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது.
- வருவாய்த் துறையால் வழங்கப்பட்ட வருமானச் சான்றிதழின் அடிப்படையில் உதவித்தொகை அனுமதிக்கப்பட்டது. இருப்பினும், தேவையான இடங்களில் உதவித்தொகை மீளப்பெறுதல் நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது (ஜுன் 2024).

### 3.6.3 சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையின் தகுதியற்ற அனுமதி

PMS-SC வழிகாட்டுதல்களின்படி[27], மாநில அரசால் தீர்மானிக்கப்பட்ட தகுதி அளவுகோல்களைப் பின்பற்றாமல் சுய விருப்பு மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற முறையில் நிரப்பப்பட்ட அனைத்து இடங்களும் (நிர்வாக ஒதுக்கீடு, NRI ஒதுக்கீடு, உடனடி சேர்க்கை (spot admission) உட்பட) PMS-SCக்கு தகுதியற்றவை மற்றும் கட்டணங்கள் திருப்பிச் செலுத்தப்பட மாட்டாது.

தமிழ்நாட்டில், நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் தங்கள் உறுப்பினர் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கைக்கான செயல்முறையை மேற்கொள்ளவும், தரவரிசைப் பட்டியலைத் தயாரிக்கவும் பல்வேறு கூட்டமைப்புகள்/சங்கங்களுக்கு[28] ஒரு குழு[29] அனுமதி வழங்குகிறது. தரவரிசைப் பட்டியல் குழுவின் ஒப்புதல் பெற்று வெளியிடப்பட்ட உடன் மாணவர் சேர்க்கை தொடங்குகிறது.

---

27 PMS-SC வழிகாட்டுதல்கள், 2018ன் பத்தி VI iii (அ) மற்றும் PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்தி 5.9ன் கீழுள்ள குறிப்பு, இருப்பினும், சேர்க்கை செயல்பாட்டில் தன்னிச்சை/சுயவிருப்பு இல்லாதிருந்தாலும், படிப்புக்கான கட்டணமானது, உரிய அதிகாரத்தால் அமைக்கப்பட்ட கட்டண நிர்ணயம்/சீராய்வு குழுவால் நிர்ணயிக்கப்பட்டிருந்ததாலும் அந்த இடங்கள் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களாக கருதப்பட மாட்டாது. இது டிசம்பர் 2019ல் அரசுக்கு மத்திய அரசால் தெளிவுபடுத்தப்பட்டது.

28 (அ) தமிழ்நாட்டில் உள்ள சுயநிதி தொழில்முறை கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளின் கூட்டமைப்பு, சென்னை (ஆ) கோயம்புத்தூர் அண்ணா பல்கலைக்கழக இணைப்புக் கல்லூரிகள் மேலாண்மை சங்கம், கோயம்புத்தூர்; (இ) திருநெல்வேலி அண்ணா தொழில்நுட்ப பல்கலைக்கழக சுயநிதி பொறியியல் கல்லூரிகள் மேலாண்மை சங்கம், திருநெல்வேலி மற்றும் (ஈ) தமிழ்நாடு சுயநிதி கலை, அறிவியல் மற்றும் மேலாண்மை கல்லூரிகள் சங்கம், கோயம்புத்தூர்.

29 ஒழுங்குமுறைக்கான குழு – சுயநிதி தொழில்முறை கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் சுயநிதிக் கல்வி நிறுவனங்களின் பல்வேறு தொழில்முறை படிப்புகள் மூலம் தொழில்முறை படிப்புகளுக்கான மாணவர் சேர்க்கையை கண்காணிக்கிறது.

தெரிவு செய்யப்பட்ட இரண்டு மாவட்டங்களில்[30], ஏழு கல்வி நிறுவனங்களின்[31] மீதான சோதனைச் சரிபார்ப்பில், கல்லூரிகள், நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ், தங்கள் சொந்த செயல்முறையைப் பயன்படுத்தி மாணவர்களைச் சேர்த்து, பின்னர் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலை ஒப்புதல்/அங்கீகாரத்திற்காக கூட்டமைப்பிடம் சமர்ப்பித்தது வெளியானது.

ADWன் இயக்ககத்தின் தரவுத்தளம் மற்றும் தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களின் பதிவுகள்[32] மீதான பகுப்பாய்வு, 2017-23 காலக்கட்டத்தில், தரவரிசைப் பட்டியல் வெளியிடப்படும் முன்னதாகவே மேலாண்மையின் கீழ் 8,119 மாணவர்கள் சேர்க்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்தியது. இது, குழுவின் வழிகாட்டுதல்களை மீறுவதாக இருந்தது. இருப்பினும், **இணைப்பு 3.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் செயலாக்கப்பட்டு 8,119 மாணவர்களுக்கு ₹95.80 கோடி வழங்கப்பட்டது.

மேற்கூறப்பட்ட செயல்முறை வெளிப்படைத்தன்மையற்றதாக இருப்பதாலும், கல்வி நிறுவனங்களின் தன்னிச்சையான மாணவர் சேர்க்கையை சுட்டிக்காட்டியதாலும், PMS-SC வழிகாட்டுதல்களின்படி, மேற்கூறப்பட்ட மாணவர் சேர்க்கை இடங்கள் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களாகக் கருதப்படும் மற்றும் உதவித்தொகைக்கு தகுதியற்றவை ஆகும்.

கூட்டமைப்புகள்/சங்கங்களால் வெளியிடப்பட்ட தரவரிசைப் பட்டியலை வழங்கும்படி குழுவின் சிறப்பு அதிகாரி மற்றும் DoTEயிடம் நடத்தப்பட்ட குறிப்பிட்ட தணிக்கை வினவலுக்கு, தேர்வுக் குழுவிடமிருந்து தரவரிசைப் பட்டியலைப் பெற்ற பின் அதனை வழங்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று DoTE பதிலளித்தது (செப்டம்பர் 2023).

நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ், மாணவர் சேர்க்கையானது குழுவால் ஒழுங்குப்படுத்தப்படுகிறது/கண்காணிக்கப்படுகிறது மற்றும் தகுதிப் பட்டியல் கூட்டமைப்பால் வெளியிடப்படுகிறது என அரசு பதிலளித்தது (ஜுலை 2024). மேலும், வெளியிடப்பட்ட தகுதிப் பட்டியலின் அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால், அதாவது DoTEஆல் கல்வி நிறுவனங்களால் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் அனுமதிக்கப்படுகிறது. எனவே, இதனை கல்வி உதவித்தொகைகளின் தகுதியற்ற ஒப்புதல்களாக கருத இயலாது.

30 கோயம்புத்தூர் மற்றும் திருநெல்வேலி.

31 (அ) கோயம்புத்தூர் (i) இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர்; (ii) பொள்ளாச்சி பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், பொள்ளாச்சி; (iii) PSG இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி மற்றும் அப்ளைடு ரிசர்ச், கோயம்புத்தூர்; (iv) RVS பாலிடெக்னிக் கல்லூரி, கோயம்புத்தூர்; (v) RVS தொழில்நுட்ப வளாகம் - கோயம்புத்தூர், கண்ணம்பாளையம்; (vi) ஸ்ரீ ரங்கநாதர் பொறியியல் மற்றும் தொழில்நுட்ப நிறுவனம், அத்திபாளையம், கோயம்புத்தூர் மற்றும் (ஆ) திருநெல்வேலி - PSN பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, பாளையங்கோட்டை.

32 அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியல் படிவம்-I.

தரவரிசைப் பட்டியல் கூட்டமைப்புகளால் தயாரிக்கப்பட்டு, குழுவால் ஒப்புதல் வழங்கப்படவேண்டும் என்பதற்கு மாறாக கல்லூரிகள், நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் உள்ள மாணவர் சேர்க்கை பட்டியலைக் குழுவிடம் சமர்ப்பித்து ஒப்புதல் கோருகின்றன. இது உதவித்தொகையை வழங்குவதற்கான PMS-SC வழிகாட்டுதல்களை மீறுவதால், பதில் ஏற்புடையதாக இல்லை.

நிறைவுக் கூட்டத்தின் போது, தரவரிசைப் பட்டியல் கூட்டமைப்புகளிடம் இருந்து பெறப்பட்டு தணிக்கைக்கு அளிக்கப்படும் என்று DoTE ஆணையர் தெரிவித்தார். இருப்பினும், பட்டியல் இன்னும் வழங்கப்படவில்லை (ஆகஸ்ட் 2024).

**பரிந்துரை 2:**

**SC/ST மாணவர்களுக்கான கல்வி உதவித்தொகையை அனுமதிக்கும் முன் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கைக்கான செயல்முறையினை நிறுவனங்கள் சுயவிருப்பற்று வெளிப்படைத்தன்மையுடன் செயல்படுத்துவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 3.7 உதவித்தொகை வழங்கல்

### 3.7.1 உதவித்தொகை வழங்குவதில் தாமதம்

உதவித்தொகைகள் உரிய நேரத்தில் முறையாக வழங்கப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும், மேலும் மத்திய அமைச்சகமும் மாநிலங்களுக்கு மத்திய உதவியை உரிய நேரத்தில் வழங்க வேண்டும். பொதுவான உதவித்தொகை வழங்கலின் போது, நிலுவை செலுத்தம் தவிர்க்கப்பட வேண்டும். எந்தவொரு நேர்விலும், மத்திய உதவித்தொகையின் தாமதான வழங்கலின் காரணமாக, மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதில் தாமதம் கூடாது.

2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட PMS-SC உதவித்தொகை மீதான தணிக்கை பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 26,767 நேர்வுகளில் உதவித்தொகை செலுத்தப்படுவதில் தாமதம் ஏற்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட 67 கல்வி நிறுவனங்களில், பயனாளிகளுக்கு ₹1.06 கோடி வழங்கப்பட்டிருந்தது. இதில் ஏற்பட்ட தாமதம் ஒரு மாதம் முதல் ஒரு வருடத்திற்கு மேலாக இருந்தது **(இணைப்பு 2.5)**.
- மாநில அளவில், 19,52,306 நேர்வுகளுக்கு ஒரு மாதம் முதல் ஒரு வருடம் வரை தாமதமாக உதவித்தொகை வழங்கப்பட்டது. இவ்வாறு வழங்கப்பட்ட தொகை ₹1,068.29 கோடி ஆகும் **(இணைப்பு 2.5)**.

மத்திய உதவி போதுமான அளவில் வழங்கப்படாததே, 2017-20 காலகட்டத்தில் உதவித்தொகை வழங்கப்படுவதில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் என்று அரசு பதிலளித்தது (ஜுலை 2024). இதனால், ஒரு ஆண்டின் உதவித்தொகை தொடரும் ஆண்டுகளில் வழங்கப்பட நேரிட்டது. மேலும், உதவித்தொகை இணையதளம் மத்திய அரசின் நிபந்தனைகளின்படி தொடர்ந்து மாற்றியமைக்கப்பட்டதும், கணிசமான எண்ணிக்கையிலான மாணவர்கள் தங்கள் வங்கி கணக்கில் ஆதாரை இணைக்காததுமே, 2021-23 காலகட்டத்தில் ஏற்பட்ட தாமதத்திற்கான காரணம் என்றும் கூறப்பட்டது.

இருப்பினும், திட்ட வழிகாட்டுதல்களின்படி, மாநில அரசு தனது வரவு செலவு திட்டத்தில் உரிய வழிவகைகளை செய்வதன் மூலம் மாணவர்களுக்கு உதவித்தொகையை வழங்கி, பின்னர் அதை மத்திய அரசிடமிருந்து திருப் செலுத்தும்படி கோரலாம் எனத் தணிக்கை கண்டது.

### 3.7.2 பயனாளிகளின் தவறான வங்கிக் கணக்கு விவரங்கள் காரணமாக வழங்கப்படாத உதவித்தொகைப் பணம்

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், **இணைப்பு 2.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, பல்வேறு காரணங்களால்[33] 61 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 1,193 மாணவர்களின் வங்கிக் கணக்கில் ₹76.71 இலட்சம் செலுத்தப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. தெரிவு செய்யப்பட்ட 37 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 319 மாணவர்களின், 2017-20 ஆண்டுகள் தொடர்பான ₹18.54 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகை அரசுக்கு திருப்பி செலுத்தப்பட்டது.

Pre MS-SC, PMS-SC மற்றும் PMS-SCC திட்டங்கள் தொடர்பாக மேற்கூறப்பட்ட நேர்வுகள் குறித்து அரசின் விரிவான பதில் (ஜுலை 2024) **பத்தி 2.6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு, கல்வி உதவித்தொகை வழங்குவதில் தாமதம் மற்றும் உதவித்தொகை வழங்கப்படாமை ஆகியவற்றால் SC மாணவர்கள் படிப்பை நிறைவு செய்வதில் நிதி நெருக்கடி ஏற்பட்டது.

### 3.7.3 அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தவறான தரவுகளால் தகுதியான மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படவில்லை

SC/ST/SCC மாணவர்களிடமிருந்து போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைக்கான விண்ணப்பங்கள் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள்[34] DADWOகளின் சரிபார்ப்பிற்காக அந்தந்த கல்வி நிறுவனங்களின் முதல்வர்களால் AD&TW இணையதளத்தில் பதிவேற்றப்படுகின்றன. பொறியியல் மாணவர்களுக்கு DoTE சில

[33] முடக்கப்பட்ட அல்லது நிறுத்திவைக்கப்பட்ட கணக்கு, முடிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட கணக்கு, வழக்கின் கீழுள்ள கணக்கு, செல்லாத கணக்கு, செயலற்ற கணக்கு, இதர காரணங்கள், இது போன்ற கணக்கு இல்லை போன்றவை.

[34] சாதி மற்றும் வருமானச் சான்றிதழ்களின் நகல்கள்.

கூடுதல் விவரங்களைச்[35] சரிபார்த்து, PMS உதவித்தொகைக்காக அதே இணையதளத்தில் தகுதியான மாணவர்களை அங்கீகரிக்கிறது. DoTEஆல் சரிபார்க்கப்பட்ட இந்த கூடுதல் விவரங்களில் ஒன்று, சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் (Controller of Examinations - CoE) தரவுத்தளத்தில்[36] விண்ணப்பதாரரின் பெயர் உள்ளதா என்பதைச் சரிபார்ப்பதும் ஆகும்.

துறையின் உதவித்தொகை தரவுத்தளத்தை ஆய்வு செய்ததில், 2017-22 காலகட்டத்தில், CoEன் தரவுகளில் மாணவர்களின் பெயர் காணப்படவில்லை என்ற காரணத்தால் 5,801 SC மாணவர்களின் உதவித்தொகை கோரிக்கைகளை DoTE நிராகரித்தது வெளியானது. இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில், இதுபோன்ற நேர்வுகளின் சோதனைச் சரிபார்ப்பில், CoE பதிவேட்டில் காணப்படாத மாணவர்களின் பெயர்கள் தேர்வு எழுதிய மாணவர்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் கல்வி நிறுவன பதிவேட்டில் இருந்தது தெரியவந்தது. இதன் விளைவாக, CoEன் தவறான தரவுத்தளம், அதனைத் தொடர்ந்து DoTEன் நிராகரிப்பு ஆகியவற்றின் காரணமாக 5,801 மாணவர்களுக்கு ₹38.04 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவில்லை.

தெரிவு செய்யப்பட்ட நான்கு மாவட்டங்களில்[37] இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 10 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 59 SC மாணவர்களுக்கு உதவித்தொகையாக ₹40.61 இலட்சம் உரிய நேரத்தில் அனுமதிக்கப்படவில்லை.

அந்தந்த துறைத் தலைவரின் உரிய சரிபார்ப்புக்குப் பிறகு மாணவர்களுக்கான உதவித்தொகை துறையால் வழங்கப்படுகிறது என்று அரசு பதிலளித்தது (ஜூலை 2024). எனவே, CoEன் தரவுத்தளத்தின் அடிப்படையில் DoTEஆல் பரிந்துரைக்கப்படாத மாணவர்களின் உதவித்தொகை கோரிக்கையை அதற்கான ஆதார ஆவணங்களுடன் நிறுவனம் மீண்டும் சமர்ப்பிக்கிறது. அவற்றை சரிபார்த்த பிறகு, DoTE, அதற்கான மறுஒப்புதல் வழங்கி, உதவித்தொகையினை கைமுறையாக வழங்க துறைக்குப் பரிந்துரைக்கிறார்.

மேலும், 2021-22ஆம் கல்வியாண்டிலிருந்து, பயனாளிக்கான உதவித்தொகையானது, மாநிலம் மற்றும் மத்திய அரசால் நேரடியாகவும் தனித்தனியாகவும் முறையே 40:60 என்ற பகிர்வு முறையின்படி

---

35 (அ) மாணவர், DoTEயிலிருந்து சேர்க்கைக்ககான அனுமதி பெற்றுள்ளாரா? (ஆ) மாணவர் அரசு அல்லது நிர்வாக ஒதுக்கீடு எதன் கீழ் சேர்க்கப்பட்டுள்ளார்? (இ) விண்ணப்பதாரரின் பெயர் சென்னையிலுள்ள அண்ணா பல்கலைக்கழகம் தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தரவுத்தளத்தில் உள்ளதா? (ஈ) முதல் தலைமுறை பட்டதாரி உதவித்தொகை பெறப்பட்டதா? மற்றும் (உ) பாடநெறி NBA அங்கீகாரத்தைப் பெற்றுள்ளதா?

36 கல்வியாண்டில் 75 விழுக்காடு வருகைப் பதவு பெற்று தேர்வில் கலந்துகொள்ளத் தகுதியான மாணவர்களின் பெயரை CoE, DoTEக்கு சமர்ப்பிக்க வேண்டும், அதன் அடிப்படையில் DoTE உதவித்தொகைக்கான கோரிக்கையை ADW துறைக்கு அனுமதிக்கு முந்தைய செயல்பாடுகளுக்காக அனுப்புகிறார்.

37 கோயம்புத்தூர், கன்னியாகுமரி, பெரம்பலூர் மற்றும் திருநெல்வேலி.

வழங்கப்படுகிறது மற்றும் எந்தவொரு மறு அனுமதிக்கும் இடமளிக்கப்படாத வகையில் உதவித்தொகை விண்ணப்பங்கள் கல்வி இயக்குநரகங்களால் முதன்முறையிலேயே துல்லியமாக சரிபார்க்கப்படுகின்றன.

இருப்பினும், உதவித்தொகைக்கான மறு அனுமதி DoTEஆல் வழங்கப்பட்ட பிறகு, உதவித்தொகை வழங்குவதற்கான கால தாமதத்தை (அதே AY அல்லது அடுத்த AYல் வழங்கப்பட்டதா) தணிக்கையால் சரிபார்க்க முடியவில்லை.

## 3.8 தகுதியற்ற/அதிகப்படியான உதவித்தொகை செலுத்தம்

### 3.8.1 விண்ணப்பங்களின் சரிபார்ப்பை முடிப்பதற்கு முன் உதவித்தொகையை வழங்குதல்

AY 2022-23க்கான விண்ணப்பங்களின் சரிபார்ப்பு செயல்முறை மிகவும் தாமதமாக இருந்தது என்றும் மத்திய அரசுடன் தரவைப் பகிர்வதற்கான செயல்முறையை மாநிலம் இன்னும் தொடங்கவில்லை என்றும் மத்திய அரசு தமிழ்நாடு அரசிடம் பிப்ரவரி 2023ல் தெரிவித்தது. 2022-23 நிதியாண்டுக்கான முழு உதவித்தொகையையும் அதே நிதியாண்டிற்குள் மாணவர்களுக்கு வழங்குவதற்கான செயல்முறையை விரைவுபடுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உத்தரவிட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

AY 2022-23க்கான TNeGAன் உதவித்தொகை தரவுகளின் மீதான தணிக்கை ஆய்வு, 3,28,090 PMS-SC விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் பல்வேறு நிலைகளில்[38] நிலுவையில் இருந்தபோதிலும் அவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளது என்பதை வெளிப்படுத்தியது. விண்ணப்பங்களின் சரித்தன்மை மற்றும் தகுதி உறுதி செய்யப்படுவதற்கு முன் உதவித்தொகைக்கான பணத்தை அனுமதிப்பது/செலுத்துவது முறையற்றது எனத் தணிக்கை கண்டது.

மாணவர்களிடமிருந்து விண்ணப்பங்களைப் பெறுவதற்காக புதிதாக உருவாக்கப்பட்ட உதவித்தொகை இணையதளம்[39], 30 ஜனவரி 2023 அன்று தொடங்கப்பட்டாலும், கல்வி நிறுவனம், மாவட்டம் மற்றும் HoD நிலையிலான உள்நுழைவு TNeGAஆல் இன்னும் உருவாக்கப்பட்டு வருவதாக DADW பதிலளித்தார் (மார்ச் 2024). 2022-23 நிதியாண்டுக்கான உதவித்தொகை முழுவதையும், அதே நிதியாண்டிற்குள் மாணவர்களுக்கு வழங்குவதற்கான செயல்முறையை விரைவுபடுத்துவது தொடர்பான மத்திய அரசின் அறிவுறுத்தல்களுக்கு (பிப்ரவரி 2023) இணங்க, மாணவர் குறித்த விவரங்கள் தொடர்புடைய HoDகளுக்கு அனுப்பப்பட்டு சரிபார்க்கப்பட வேண்டும் என்று 27 பிப்ரவரி 2023 அன்று முடிவு செய்யப்பட்டது.

---

[38] கல்வி நிறுவனம், மாவட்டம், HoD மற்றும் இயக்குநரக மட்டத்தில்.

[39] (i) மாணவர் மற்றும் கல்வி நிறுவனத்தின் நோடல் அதிகாரியின் ஆதார் அங்கீகாரம் (ii) மற்ற தலையீடு இல்லாமல் இணையதளம் வழியாக மட்டுமே வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ் விவரங்களை சரிபார்த்தல் மற்றும் (iii) PFMS மூலம் உதவித்தொகை வழங்குதல் தொடர்பான அம்சங்களை இணைத்த பிறகு.

விண்ணப்பங்கள் HoDஆல் நேரடியாக சரிபார்க்கப்பட்ட பின் மாநிலத்தின் பங்கு வழங்கப்பட்டது.

இருப்பினும், இது திட்ட வழிகாட்டுதல்களின் நிர்ணயிக்கப்பட்ட செயல்முறையை தவிர்த்துச் செல்ல வழிவகுத்தது எனத் தணிக்கை கண்டது. இதனால், முழுமையற்ற சரிபார்ப்பின் காரணமாக தகுதியற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை அனுமதிக்கப்படக்கூடிய சாத்தியக்கூறு இருந்தது. மேலும், கல்வி நிறுவனம், மாவட்டம், HoD மற்றும் இயக்குநரக அளவில் ஆன்லைனில் பெறப்படும் விண்ணப்பங்கள் அதில் சரிபார்க்கப்படுவதற்கான காலக்கெடு இல்லாததால் விண்ணப்பங்களின் செயலாக்கத்தில் தாமதம் ஏற்பட்டது.

### 3.8.2 நம்பகத்தன்மையற்ற வருகை தரவுகளின் அடிப்படையில் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை செலுத்தப்படுதல்

PMS-SC வழிகாட்டுதல்களின்படி, உதவித்தொகையானது, அனுமதிக்கப்பட்ட நேரம் முதல் படிப்பை முடிக்கும் வரை நன்னடத்தை மற்றும் ஒவ்வொரு கல்வியாண்டிலும் 75 விழுக்காடு வருகை என்னும் அடிப்படையில் வழங்கப்படும்.

TNeGA தரவுத்தளத்தை, 2022-23 ஆண்டிற்கான PMS-SC உதவித்தொகை தரவுத்தளத்துடன் ஒப்பிடும்போது, 7,559 மாணவர்களின்[40] வருகை விவரம் 0 முதல் 74 விழுக்காடு வரை இருந்தது வெளியானது. இருப்பினும், மாநில பங்கான 40 விழுக்காடு, மாணவரின் வங்கிக் கணக்கில் செலுத்தப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட ஐந்து கல்லூரிகளின்[41] தரவுத்தளத்தில் வருகை விவரங்கள் சரிபார்க்கப்பட்டபோது, 75 விழுக்காட்டிற்கும் குறைவான வருகை கொண்டவர்கள் எனப் பதிவாகியிருந்த 57 மாணவர்களின் வருகைப் பதிவு கல்லூரிப் பதிவேடுகளில் 75 விழுக்காட்டிற்கு அதிகமாக இருந்ததாகத் தணிக்கை கண்டது. தரவுத்தளத்தின் உண்மைத் தன்மையை கண்டறிய இயலாத நிலையில், நம்பகமற்ற வருகைத் தரவின் அடிப்படையில் உதவித்தொகை வழங்கப்படுவது முறையானதாக இருக்கவில்லை என தணிக்கை கண்டது.

வருகைப்பதிவுத் தரவை சீரற்ற (random) முறையில் சரிபார்த்ததில், மாணவர்கள் தேவையான விழுக்காடு வருகைப்பதிவு கொண்டு வெற்றிகரமாக தேர்ச்சி பெற்றிருந்தனர் என்று அரசு பதிலளித்தது (ஜூலை 2024). இருப்பினும், குறைவான வருகை கொண்டிருந்து, தவறாக உதவித்தொகை செலுத்தப்பட்ட நேர்வுகளிடமிருந்து அத்தொகை

40 பூஜ்ஜிய விழுக்காடு: 7,534 மாணவர்கள், 45 மற்றும் 74 விழுக்காட்டிற்கு இடையே: 25 மாணவர்கள்.

41 (அ) எத்திராஜ் பெண்களுக்கான கல்லூரி, சென்னை (35); (ஆ) JKK முனிராஜா தொழில்நுட்பக் கல்லூரி, ஈரோடு (3); (இ) லயோலா கல்லூரி, சென்னை (2); (ஈ) PIE தொழில்நுட்பம், பொள்ளாச்சி (8) மற்றும் (உ) PSN பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, திருநெல்வேலி (9).

மீட்கப்பட்டு அரசுக் கணக்கில் செலுத்தப்பட தேவையான மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டது என்றும் கூறியது (ஜூன் 2024).

### 3.8.3 TNeGA மென்பொருளில் சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லததால் PMS-SC உதவித்தொகை அதிகமாக செலுத்தப்படுதல்

PMS-SC வழிகாட்டுதல்கள், 2021ன் படி, மாநில மற்றும் மத்திய அரசால் வழங்கப்படும் மொத்த உதவித்தொகையும் மாணவர்களின் கணக்கில் DBT[42] மூலம் மட்டுமே நேரடியாகச் செலுத்தப்படும். மாணவர்கள், 2022-23 முதல், கட்டாயச் சான்றிதழ்களின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்களுடன் தமிழ்நாடு மின் ஆளுமை முகமையின் (Tamil Nadu e-Governance Agency - TNeGA) உதவித்தொகை இணையதளத்தின் வழியாக உதவித்தொகைக்காக விண்ணப்பிக்கின்றனர்.

பயனாளிகளுக்கு 2022-23ல் வழங்கப்பட்ட PMS-SC உதவித்தொகை 2021-22ஆம் ஆண்டின் வழங்கல் உடனான ஒப்பீடு **அட்டவணை 3.4ல்** கொடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, 2021-22ஆம் ஆண்டின் வழங்கலுக்கு எதிராக, 2022-23ஆம் ஆண்டில் 30,424 மாணவர்களுக்கு ₹17.90 கோடி உதவித்தொகை அதிகமாக வழங்கப்பட்டிருந்தது.

**அட்டவணை 3.4: உதவித்தொகையின் அதிகப்படியான செலுத்தம்**

| அதிகப்படியான தொகை வரம்பு (₹ ல்) | மாணவர்–களின் எண்ணி–க்கை | 2021-22ல் கோரப்பட்டது | 2022-23ல் கோரப்பட்டது | அனுமதிக்கப்பட்ட அதிகப்படியான தொகை |
|---|---|---|---|---|
| | | (₹ இலட்சத்தில்) | | |
| 7 இலட்சத்துக்கும் மேல்[43] | 8 | 0.33 | 64.45 | 64.12 |
| 5 இலட்சம் – 7 இலட்சம் | 1 | 0.62 | 5.32 | 4.70 |
| 4 இலட்சம் – 5 இலட்சம் | 1 | 2.51 | 6.07 | 3.56 |
| 3 இலட்சம் – 4 இலட்சம் | 10 | 3.34 | 27.27 | 23.93 |
| 1 இலட்சம் – 3 இலட்சம் | 20 | 16.96 | 41.80 | 24.84 |
| 50,000 - 1 இலட்சம் | 252 | 43.36 | 196.34 | 152.98 |
| 25,000 - 49,999 | 1,122 | 351.14 | 717.25 | 366.11 |
| 20,000 - 24,999 | 822 | 362.51 | 550.17 | 187.66 |
| 15,000 - 19,999 | 537 | 157.80 | 251.80 | 94.00 |
| 10,000 - 14,999 | 647 | 166.13 | 244.23 | 78.10 |
| 5,000 - 9,999 | 4,225 | 1,522.84 | 1,795.52 | 272.68 |
| 1,000 - 4,999 | 22,779 | 6,364.02 | 6,881.21 | 517.19 |
| **மொத்தம்** | **30,424** | **8,991.56** | **10,781.43** | **1,789.87** |

(ஆதாரம்: துறை வழங்கிய தரவு)

[42] தொடர்புடைய மாநில அரசு அவர்களின் பங்கை வழங்கியுள்ளதை உறுதிசெய்த பிறகு, திட்டத்தின் மத்தியப் பங்கு மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் நேரடியாக DBT முறையில் வழங்கப்படும்.

[43] இந்த எட்டு மாணவர்களும் ஒரே நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், அதாவது தந்தை பெரியார் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), திருச்சிராப்பள்ளி.

கோயம்புத்தூர் மாவட்டத்தில், 2022-23ஆம் ஆண்டில், தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில், மாணவர்களுக்கு கூடுதல் உதவித்தொகை வழங்கப்பட்டது தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட சோதனைச் சரிபார்ப்பில், மூன்று நிறுவனங்களின்[44] முதல்வர்கள் மாணவர்கள் அதிகப் பணம் பெற்றிருந்ததை ஒப்புக்கொண்டனர் (டிசம்பர் 2023).

இதற்கும் மேலாக, மாநிலப் பங்கான 40 விழுக்காடு உதவித்தொகையை 160 மாணவர்கள் இருமுறை பெற்றதால் ₹13.50 இலட்சம் அதிகப்படியாக வழங்கப்பட்டிருந்தது.

இவ்வாறு, உதவித்தொகை இணையதளத்தில் போதுமான சரிபார்ப்பு இல்லாததால், உதவித்தொகையாக ₹18.03 கோடி[45] அதிகமாக செலுத்தப்பட நேரிட்டது.

கீழ்க்கண்டவாறு அரசு பதிலளித்தது (ஜுலை 2024):

- கல்வி கற்கும் ஆண்டின் அடிப்படையில் மாறும் கட்டணக் கூறுகள், வெளி/விடுதி மாணாக்கருக்கான பராமரிப்பு தொகை (maintenance allowance) போன்றவை உதவித்தொகை கூறுகளில் உள்ள வேறுபாடுகளுக்கான காரணமாக இருக்கலாம். மேலும், தேவையான இடங்களில் மீட்பு தொடங்கப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது.
- அதிகமாக செலுத்தப்பட்ட உதவித்தொகையை, 160 மாணவர்களிடமிருந்து மீட்டு, அதை அரசுக் கணக்கில் செலுத்துமாறு தொடர்புடைய கல்வி நிறுவனங்களின் தலைவர்களுக்கு துறை அறிவுறுத்தியுள்ளதாகவும், அது செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறப்பட்டது (ஆகஸ்ட் 2023).

இருப்பினும், TNeGA மென்பொருளில் போதுமான சரிபார்ப்புக் கட்டுப்பாடுகள் இல்லாததால் அதிகப்படியான தொகை செலுத்தப்பட நேரிட்டதை தணிக்கை கவனித்தது.

### 3.8.4 அரசு உத்தரவுக்கு இணங்காதது அரசிற்கு ஏற்றுக்கொள்ள முடியாத தொடர்ச்சியான செலவினங்களுக்கு வழிவகுத்தது

அரசின் உத்தரவுகளின்படி (ஜனவரி 2012), அங்கீகரிக்கப்பட்ட சுயநிதி கல்வி நிறுவனங்களில் இலவச/கட்டண இடங்களில் படிக்கும் SC/ST/SCC மாணவர்களுக்கு AY 2011-12 முதல், அத்தகைய நிறுவனங்களால் விதிக்கப்படும் அனைத்து கட்டாய மற்றும் திரும்பப்பெற முடியாத

44 (அ) இந்துஸ்தான் பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் (நான்கு மாணவர்கள்); (ஆ) RVS தொழில்நுட்ப வளாகம் - கோயம்புத்தூர், கண்ணம்பாளையம் (68 மாணவர்கள்) மற்றும் (இ) ஸ்ரீ ரங்கநாதர் இன்ஜினியரிங் அண்ட் டெக்னாலஜி நிறுவனம் அத்திபாளையம், கோயம்புத்தூர் (66 மாணவர்கள்).

45 ₹1,789.87 இலட்சம் (+) ₹13.50 இலட்சம்.

கட்டணங்களும்[46] மத்திய அரசால் வழங்கப்படும் போஸ்ட் மெட்ரிக் திட்டங்களின் கீழ் வழங்கப்படும். செலுத்தப்படவேண்டிய கட்டணம், அரசால் அமைக்கப்பட்ட குழுவால் நிர்ணயிக்கப்பட்டிருந்ததால் அரசு, நிர்வாக ஒதுக்கீட்டுக் கட்டணங்களை நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட அரசு ஒதுக்கீட்டுக் கட்டணத்திற்குக் கட்டுப்படுத்தியது (ஆகஸ்ட் 2017).

இதற்கிடையே, சுயநிதி நிறுவனங்களில் சேர்க்கப்பட்ட மாணவர்கள், தாங்கள் விரும்பும் படிப்பி சேரலாம் எனவும் நிறுவனங்கள் முதலில் அரசு ஒதுக்கீட்டு இடங்களையும் (65 விழுக்காடு), பின்னர் நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களையும் (35 விழுக்காடு) நிரப்ப வேண்டும் எனவும், நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களுக்கு நிர்ணயக் குழுவால் (FFC) நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைக் கோர வேண்டும் எனவும் அரசு ஆணை[47] வழங்கியது (அக்டோபர் 2021). கலந்தாய்விற்குப் (counselling) பிறகும் அரசு ஒதுக்கீட்டு இடங்கள் காலியாக இருந்தால், SC/ST/SCC மாணவர்கள் அரசு ஒதுக்கீட்டின் கீழ் உள்ள இடங்களில் சேர்க்கப்பட்டு, மீதமுள்ளவர்கள் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் சேர்க்கப்பட வேண்டும். அதற்கேற்ப கட்டணங்களும் அரசு அல்லது நிர்வாக ஒதுக்கீட்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட கட்டண விகிதத்தில் கோரப்பட வேண்டும்.

நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் மாணவர் சேர்க்கைக்கான ஒப்புதலையும், PMS-SC மானியத்திற்கான இரண்டாம் நிலை ஆய்வுகளையும் DoTE மேற்கொள்வதால், அக்டோபர் 2021ல் வெளியிடப்பட்ட அரசின் உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் பின்பற்றப்படுவதை உறுதிசெய்த பிறகே உதவித்தொகை அனுமதிக்கப்பட்டிருக்க வேண்டும்.

PMS-SC உதவித்தொகை தரவுகளின் 2021-23 காலகட்டத்தின் மீதான தணிக்கை பகுப்பாய்வு, 507 சுயநிதி நிறுவனங்கள் நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் 9,728 மாணவர்களைச் சேர்த்து அவர்களுக்கான கல்விக் கட்டணமாக ₹85,000ஐக் கோரியதையும், அத்தொகை செலுத்தப்பட்டதையும் வெளிப்படுத்தியது. ADWன் இயக்ககம், அரசு ஒதுக்கீட்டு இடங்கள் முழுமையாக நிரப்பப்பட்டதா என்பதைக் கண்டறியாமல், கல்விக் கட்டணத்தை வழங்கியதன் விளைவாக ₹82.59 கோடி தவறாக வழங்கப்பட்டது **(அட்டவணை 3.5)**. தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களில்[48] இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட ஏழு கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 9,728 மாணவர்களுள், 103 மாணவர்களுக்கு ₹95.33 இலட்சம் செலுத்தப்பட்டது.

---

[46] சேர்க்கை/பதிவு, கல்விப் பயிற்சி, விளையாட்டுகள், சங்கம், நூலக இதழ், மருத்துவ சோதனை ஆகியவற்றிற்காக சேகரிக்கப்பட்ட கட்டணம் மற்றும் கல்வியாளர் நிறுவனம் அல்லது பல்கலைக்கழகம்/வாரியத்திற்கு வல்லுநர் கட்டாயமாகச் செலுத்த வேண்டிய பிற கட்டணங்கள்.

[47] AD&TW துறையின் 15-10-2021 தேதியிடப்பட்ட G.O. (Ms) எண் 72.

[48] கோயம்புத்தூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி.

**அட்டவணை 3.5: அனுமதிக்க முடியாத தொடர்ச்சியான செலவுகள்**

| கல்வி ஆண்டு | நிறுவனங்களின் எண்ணிக்கை | மாணவர்களின் எண்ணிக்கை | கோரப்பட்ட அனுமதிக்க முடியாத தொகை (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 2021-22 | 249 | 4,101 | 36.07 |
| 2022-23 | 258 | 5,627 | 46.52 |
| **மொத்தம்** | **507** | **9,728** | **82.59** |

(ஆதாரம்: PMS-SC உதவித்தொகை தரவின் தணிக்கை பகுப்பாய்வு)

DoTEயிலிருந் பெறப்பட்ட ஒப்புதலின் அடிப்படையில், சுயநிதி கல்லூரிகளில், நிர்வாக ஒதுக்கீட்டு இடங்களின் கீழ் கல்வி கற்கும் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டது என அரசு பதிலளித்தது (ஜுலை 2024).

நிறைவுக் கூட்டத்தின் போது, அரசு இடங்களை நிரப்பிய பின்னரே நிர்வாக இடங்கள் நிரப்பப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதில் சவால்கள் இருப்பதாக செயலாளர் கூறினார். இருப்பினும், தரவுத்தளம் சரிபார்க்கப்பட்ட பிறகு பதில் அளிக்கப்படும் என்றும் தேவைப்பட்டால் மீட்பு நடவடிக்கை தொடங்கப்படும் என்றும் DADW கூறினார். இது தொடர்பாக துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் எதிர்பார்க்கப்படுகின்றன (ஆகஸ்ட் 2024).

## 3.9 ஒன்றுக்கு மேற்பட்ட உதவித்தொகை பெற்ற மாணவர்கள்

PMS-SC வழிகாட்டுதல்களின்படி, PMS-SC திட்டத்தின் கீழ் உதவித்தொகை பெறும் மாணவர் வேறு எந்தவொரு கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகையை பெற்றவராக இருத்தல் கூடாது. வேறு ஏதேனும் கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகை வழங்கப்பட்டால், மாணவர், அவற்றுள் அதிக பயன்தரும் ஒன்றைத் தெரிவு செய்து, அதனை, நிறுவனத் தலைவர் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும், வேறொரு கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகையை மாணவர் ஏற்றுக் கொண்டால், அதனை ஏற்கும் நாளிலிருந்து இத்திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படமாட்டாது.

### 3.9.1 PMS-SC மற்றும் சிறுபான்மையினர் உதவித்தொகையைப் பெறுதல்

SC மாணவர்களுக்கு, 2019-20ல் வழங்கப்பட்ட உதவித்தொகை தொடர்பான தரவுகளின் மீதான ஆய்வில், 137 மாணவர்கள் PMS-SC மற்றும் சிறுபான்மையினருக்கான PMS[49] ஆகிய இரண்டு வகையான உதவித்தொகையையும் பெற்றிருந்தது கவனிக்கப்பட்டது.

---

[49] மாநில அரசுகள் மூலம் மத்திய சிறுபான்மையினர் நல அமைச்சகத்தால் செயல்படுத்தப்படுகிறது/நிதி வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர்/ பாதுகாப்பாளர்களின் ஆண்டு வருமானம் ₹2 இலட்சத்திற்கு மேல் இல்லாத, சிறுபான்மை சமூகங்களின் பொருளாதாரத்தில் பின்தங்கிய சிறந்த மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுகிறது.

இரண்டு உதவித்தொகைகளில் ஏதேனும் ஒன்றை மாணவர்கள் தெரிவு செய்து நிறுவனத் தலைவர் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரத்திற்குத் தெரிவிக்காததாலும், ஒன்றுக்கு மேற்பட்ட உதவித்தொகையைப் பெறும் மாணவர்களை நிராகரிப்பதற்கான முறையான வழிமுறை இல்லாததாலும், **அட்டவணை 3.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி ₹23.20 இலட்சம் தவறாக வழங்கப்பட நேரிட்டது.

**அட்டவணை 3.6: PMS-SC மற்றும் PMS-சிறுபான்மையினர் உதவித்தொகையைப் பெறுதல்**

| மாணவர்களின் எண்ணிக்கை | PMS-SC உதவித்தொகை (₹ல்) | | | PMS – சிறுபான்மையினர் உதவித்தொகை |
|---|---|---|---|---|
| | பராமரிப்பு கொடுப்பனவு | கல்விக் கட்டணம் | மொத்தம் | |
| 137 | 5,87,510 | 17,32,200 | 23,19,710 | 8,92,662 |

(ஆதாரம்: PMS-SC உதவித்தொகை தரவு பகுப்பாய்வு மற்றும் CAG தலைமையகத்திலுள்ள தரவு மேலாண்மை மற்றுமம பகுப்பாய்வு மையத்தால் அமைச்சகத்திலிருந்து சேகரிக்கப்பட்ட PMS-சிறுபான்மையினர் உதவித்தொகை தரவு)

இரண்டு உதவித்தொகை திட்டங்களும் இரண்டு வெவ்வேறு அமைப்புகள் மூலம் இரண்டு வெவ்வேறு காலகட்டத்தில் செயல்படுத்தப்படுகின்றன என அரசு பதிலளித்தது (ஜூலை 2024) மேலும், அன்றைய நிலவரப்படி, தேசிய உதவித்தொகை இணையதளத்திற்கும் மாநில உதவித்தொகை இணையதளத்திற்கும் இடையே எவ்வித ஒருங்கிணைப்பும் இல்லை. எனவே, இவ்விரண்டு அமைப்புகளும் ஒருங்கிணைக்கப்பட்ட பின்னரே இரண்டிலும் இருந்த (overlapping) பயனாளிகளின் சரிபார்ப்பு சாத்தியமாகும். தணிக்கை குறிப்புகளின் அடிப்படையில் ஒரே பயனாளிக்கு பல உதவித்தொகை வழங்கப்படுவதைத் தடுக்கும் பொருட்டு பயனாளிகளின் விவரங்களைப் பகிர்ந்து கொள்ள மத்திய அரசுக்குத் தெரிவிக்கப்படும். மேலும், தேவையான இடங்களில் மீட்பு நடவடிக்கை தொடங்கப்பட்டுள்ளது என்றும் பதிலில் கூறப்பட்டது (ஜூன் 2024).

### 3.9.2 PMS-SC மற்றும் முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகையைப் பெறுதல்

DADWOகளில் உதவித்தொகை பதிவுகள் மற்றும் தொடர்புடைய பிற கோப்புகளை ஆய்வு செய்ததில் மூன்று கல்வி நிறுவனங்களைச்[50] சார்ந்த 1,143 SC மாணவர்கள் முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை[51] (FGG சலுகை) மற்றும் PMS-SC உதவித்தொகை ஆகிய இரண்டு சலுகைகளைப் பெற்றிருந்தனர்,

முதல் பட்டதாரி கட்டணச் சலுகைத் திட்டம் உயர்கல்வித் துறையால் செயல்படுத்தப்பட்டு சரிபார்க்கப்படுகிறது என அரசு பதிலளித்தது (ஜூன் 2024). அனைத்து உதவித்தொகை திட்டங்களையும் ஒரே

---

50 (i) கோயம்புத்தூர் பொறியியல் நிறுவனம், கோயம்புத்தூர்; (ii) PSG தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (iii) தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை.

51 மாநிலத்தில், பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வு மூலம் சேர்க்கப்பட்ட 'முதல் தலைமுறை பட்டதாரி' மாணவர்களுக்கு, 2010-11 முதல் உயர்கல்வித் துறையால் செயல்படுத்தப்பட்ட ஒரு மாநில நிதியுதவி திட்டம்.

இணையதளத்தில் செயல்படுத்துவதன் மூலம் பல்வேறு துறைகளிலிருந்து பல உதவித்தொகைகள் பெறப்படுவதை தவிர்க்கும் வகையில் தமிழ்நாடு மாநில உதவித்தொகை இணையதளம் அமைக்கப்பட்டுள்ளது. மாணவர்கள் பல உதவித்தொகைகளைப் பெறும்பட்சத்தில் ஏதேனும் ஒரு உதவித்தொகை செலுத்தப்பட தேவையான நடவடிக்கை எடுக்கப்படும்.

நிறைவுக் கூட்டத்தின் போது, அனைத்து உதவித்தொகைகளுக்கும் பொதுவான இணையதளம் தொடங்கப்படுவதால், இந்த சிக்கல்கள் நீக்கப்படும் என்று DADW கூறினார். அனுமதியற்ற தொகை இயன்றவரை மீட்டெடுக்கப்பட வேண்டும் என்றும் மீதமுள்ள தொகையை தள்ளுபடி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் தணிக்கை கருத்து தெரிவித்தது.

### 3.9.3 PMS-SC மற்றும் Ph.D. ஊக்கத்தொகை பெறுதல்

SC/ST/SCCயைச் சார்ந்த முழுநேர Ph.D. வல்லுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை, 2013-14ல், அரசு அறிமுகப்படுத்தியது. இது தமிழ்நாட்டிலுள்ள மாநிலப் பல்கலைக்கழகங்கள்/அரசு/அரசு உதவிபெறும் கல்லூரிகளில், இந்த மாணவர்களுக்கு அறிவியல், மனிதநேயம், சமூக அறிவியல், வணிகவியல் மற்றும் சட்டப் பிரிவுகளில் உயர்கல்வி மற்றும் ஆராய்ச்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்புகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. ஒரு குடும்பத்திற்கான வருமான வரம்பு ஆண்டுக்கு ₹8 இலட்சத்துக்குக்[52] குறைவாக இருக்க வேண்டும், வழங்கப்பட்ட ஊக்கத்தொகை ஆண்டுக்கு ₹1 இலட்சம்[53] ஆகும்.

Ph.D. வல்லுநர்களுக்கு, 2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஊக்கத்தொகை தொடர்பான பதிவுகளின் மீதான ஆய்வு ADWன் இயக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டது. இதில், 708 மாணவர்கள் Ph.D.க்கான ஊக்கத்தொகை மற்றும் PMS-SC ஆகிய இரண்டையும் பெற்றிருந்தது வெளிப்படுத்தப்பட்டது **(இணைப்பு 3.2)**.

உதவித்தொகை விண்ணப்ப இரட்டிப்பு கவனிக்கப்பட்டு மீட்பு உத்தரவுகள் வழங்கப்பட்டன மற்றும் முழுப் பட்டியலிருந்து நகல் நீக்கப்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (ஜூலை 2024).

இருப்பினும், திட்ட வழிகாட்டுதல்களின்படி, ஊக்கத்தொகை என்பது குறிப்பிட்ட நபர்களுக்கு அவர்கள் நிலையான செயல்திறனை அடைவதன் அடிப்படையில் கூடுதலாக வழங்கப்படும் ஒன்று என்பதை வெளிப்படுத்தியது. மேலும், Ph.D வல்லுநர், வேறு எந்த உதவித்தொகையையும் பெறக்கூடாது என்பது வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்று ஆகும்.

PMS-SC உதவித்தொகையுடன் ஒப்பிடும்போது, Ph.D. ஊக்கத்தொகைக்கான ஆண்டு வருமான வரம்பு, தகுதிக்கான மொத்த மதிப்பெண்கள் போன்றவை வேறுபட்டு இருப்பதால், இந்த நேர்வில்

[52] 2020-21 வரை: ₹2.50 இலட்சம்.
[53] 2020-21 வரை: ஆண்டுக்கு ₹50,000.

ஊக்கத்தொகையை உதவித்தொகையுடன் சமப்படுத்துவது தவறானது என்று தணிக்கை கண்டது. மேலும், SC/ST மாணவர்களுக்கான PMS, தகுதியுள்ள அனைத்து SC/ST/SCC மாணவர்களுக்கும் வழங்கப்படும் போது, Ph.D. ஊக்கத்தொகையானது, அதைப் பெறுவதற்கான சில நிபந்தனைகளை அடைந்த ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையிலான வல்லுநர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டது.

இவ்வாறு, உதவித்தொகையை ஊக்கத்தொகையுடன் சமன் செய்யும் அரசின் ஆணை தவறானது மற்றும் தகுதியான Ph.D. வல்லுநர், உதவித்தொகை மற்றும் ஊக்கத்தொகை இரண்டையும் பெறுவதற்கு தகுதியுடையவரானால், இரண்டும் அவருக்கு வழங்கப்பட்டிருக்க வேண்டும். இந்த சிக்கல்களை துறை எடுத்துக் கொள்ளாததால் பயனாளிகள் உயர் கல்வியைத் தொடர்வதற்கு முக்கியத் தேவையான ஊக்கத்தொகை அல்லது உதவித்தொகையை பெற இயலவில்லை.

நிறைவுக் கூட்டத்தின் போது, திட்டம் மறு ஆய்வு செய்யப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

## 3.10 PMS-SCன் கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

திட்ட வழிகாட்டுதல்களின்படி[54], மாநில அரசானது, கள ஆய்வுகள், சமூக தணிக்கைகள், தரவு பகுப்பாய்வு போன்ற வலுவான கண்காணிப்பு அமைப்புகளைக் கொண்டிருக்க வேண்டும். இதனால் தகுதியுள்ள பயனாளிகளுக்கு உரிய நேரத்தில் பணம் செலுத்தப்படும். மேலும், வழிகாட்டுதல்கள்[55] திட்டமானது, வெளிப்படைத்தன்மை பொறுப்புடைமை, செயல்திறன் மற்றும் தாமதமின்றி சரியான நேரத்தில் உதவி வழங்கப்படுவதை உறுதிசெய்யும் வலுவான இணைய பாதுகாப்பு நடவடிக்கைகளுடன் கூடிய இணையதளத்தில் இயங்க வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் கூறுகின்றன.

தணிக்கை பின்வருவனவற்றைக் கவனித்தது:

- மாணவரால் சமர்ப்பிக்கப்பட்ட அனைத்துத் தரவுகளும்[56] தானாகச் சரிபார்க்கப்படும் பொருட்டு, டிஜிலாக்கர் அல்லது அதுபோன்ற ஏதேனும் ஒரு செயல்முறை வழியாகத் தரவுத்தளங்கள் இணைக்கப்படவில்லை.
- நிறுவனங்களின் செயல்திறன் மற்றும் மாணவரின் முன்னேற்றத்தைக் கண்காணிப்பதற்கான ஒரு செயல்திறன் தொகுதி பொருத்தமான முறையில் வடிவமைக்கப்பட்டு இணைக்கப்படவில்லை.

---

54 PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்திகள் 6.9 மற்றும் 18.

55 PMS-SC வழிகாட்டுதல்கள், 2020-26ன் பத்தி 13.1.

56 வசிக்கும் இடம், தகுதி, சாதி நிலை, ஆதார் அடையாளம் மற்றும் வங்கிக் கணக்கு விவரங்கள்.

- பயனாளிகளின் நகல்கள் நீக்கப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு பல்வேறு உதவித்தொகை திட்டங்களின் பயனாளிகளின் முழுமையான தரவுத்தளம் இன்னும் பராமரிக்கப்படவில்லை.
- திட்டத்தின் விளைவுகளை மதிப்பிடுவதற்கு சமூக தணிக்கை சீரான இடைவெளியில் நடத்தப்படவில்லை.
- வட்டாரம்/மாவட்டம்/மாநில அளவில், அல்கோரிதம் வழியாக சீரற்ற முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட, குறைந்தது 10 விழுக்காடு கல்வி நிறுவனங்கள்/மாணவர்களின் மீதான நேரடி ஆய்வு நடத்தப்படவில்லை.

புதிய உதவித்தொகை இணையதளம் தொடங்கப்பட்டுள்ளதால், வரும் நிதியாண்டில் மேற்கூறப்பட்ட குறைபாடுகள் கவனிக்கப்படும் என்றும் இணையதளத்தின் டாஷ்போர்டு மூலம் கண்காணிப்பு திறம்பட மேற்கொள்ளப்படும் என்றும் அரசு பதிலளித்தது (ஜுலை 2024).

நிறைவுக் கூட்டத்தின் போது, குறைந்தபட்சம் 10 விழுக்காடு நிறுவனங்கள்/மாணவர்கள் மீதான நேரடி சரிபார்ப்பு மாவட்ட அளவிலான அதிகாரிகளால் மேற்கொள்ளப்படும் என்று DADW கூறினார்.

இவ்வாறு, சரிபார்ப்புச் சோதனைகள் மற்றும் சமூக/மதிப்பீட்டு தணிக்கை மற்றும் நேரடி ஆய்வுகளை நடத்துதல் ஆகியவற்றுடன் கூடிய ஒரு திறம்பட்ட தகவல் தொழில்நுட்ப அமைப்பினை செயல்படுத்துதல் ஆகியன திட்டத்தின் நோக்கங்கள் எதிர்நோக்கப்பட்ட விதத்தில் நிறைவேறுவதை உறுதி செய்யும்.

**பரிந்துரை 3:**

**உதவித்தொகை திட்டங்களை மேலும் சீரமைத்து திறம்பட செயல்படுத்த ஒரு வலுவான தகவல் தொழில்நுட்ப அடிப்படையிலான நிகழ்நேர கண்காணிப்பு மற்றும் குறை நிவர்த்தி அமைப்பினை அரசு விரைவில் நிறுவ வேண்டும்.**

# பிரிவு - ஆ

# பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

# அத்தியாயம் IV

# பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை

# அத்தியாயம் IV

## பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை

**இத்திட்டத்தில், 2019-23 ஆண்டுகளில் தகுதியுடைய வகுப்பு IXஐ சார்ந்த மாணவர்களுள் 35 முதல் 55 விழுக்காட்டினர் பலன் அளிக்கப்படாமல் இருந்தனர். 2,373 ST மாணவர்கள் 2017-22 ஆண்டுகளில் இடைநிறுத்தம் செய்தனர்/அடுத்த ஆண்டில் சேர்க்கையிலிருந்து விலக்கப்பட்டனர். 2018-23 ஆண்டுகளில் நிதியாண்டுகளின் இறுதியில் மத்திய உதவித்தொகை குறைவுபட்டிருந்தது. இதன் நிலுவை ₹16.61 கோடியிலிருந்து ₹42.53 கோடி வரையாக இருந்தது. தெரிவு செய்யப்பட்ட நிறுவனங்களில் பெறப்பட்ட 339 விண்ணப்ப படிவங்களுடன் வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. பெற்றோரின் வருமானம், 2017-23 ஆண்டுகளில், ஆண்டுக்கு ₹2.50 இலட்சம் என்னும் வரம்பைத் தாண்டிய 226 மாணவர்களுக்கு, ₹6.02 இலட்சம் அனுமதியற்ற தொகை வழங்கப்பட்டது. இணைய வழியில் IT போர்ட்டல் வாயிலாக விண்ணப்பிக்காமலும், வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் போன்ற தேவையான ஆவணங்கள் சரிபார்க்கப்படாததுமான 15,325 Pre-MS-ST மாணவர்களுக்கு, 2022-23 ஆம் ஆண்டில், ₹5.17 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களின், 22 கல்வி நிறுவனங்களில் இருந்த 481 மாணவர்களின் வங்கிக் கணக்குகளில், ₹12.40 இலட்சம் உதவித்தொகை செலுத்தப்படவில்லை.**

### 4.1 முன்னுரை

மக்கள் தொகை கணக்கெடுப்பு, 2011ன்படி தமிழ்நாட்டில் வாழும் 37 பழங்குடியின (ST) சமூகங்களின் மக்கள் தொகை 8,41,558 ஆகும், இது மாநிலத்தின் மொத்த மக்கள்தொகையில் 1.17 விழுக்காடாக இருந்தது. பழங்குடியினர் நல இயக்ககம்[1] (TWன் இயக்ககம்), தகுந்த வேலைவாய்ப்பை வழங்குதல், தனிப்பட்ட பொருளாதார நிலையை மேம்படுத்துதல், குறைந்த கல்வியறிவுக்கான காரணங்களைக் கண்டறிதல் மற்றும் கல்வித் தரத்தை மேம்படுத்துதல் மூலம் பழங்குடியின மக்களின் ஒட்டுமொத்த வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் செயல்படுகிறது.

ஜூலை 2012 முதல், IX மற்றும் X ஆம் வகுப்புகளில் பயிலும் பழங்குடியின மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை' (Pre-MS-ST) திட்டம் மத்திய அரசின் பழங்குடியினர் நல அமைச்சகத்தால்[2] (Ministry of Tribal Affairs - MoTA) செயல்படுத்தப்பட்டு வரும் மத்திய நிதியுதவி திட்டமாகும் (CSS). இத்திட்டம், தகுதி வாய்ந்த பழங்குடியின (ST) மாணவர்கள்,

[1] 01 ஏப்ரல் 2018 முதல் முழு நிதி மற்றும் நிர்வாகக் கட்டுப்பாட்டுடன் ஆதி திராவிடர் நல இயக்குநரகத்திலிருந்து பிரிக்கப்பட்டது.

[2] சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகம் இரண்டாகப் பிரிக்கப்பட்ட பிறகு, 1999 இல் நிறுவப்பட்டது.

வகுப்புகள் IX மற்றும் Xல் கல்வியைத் தொடர உதவித்தொகை வழங்குகிறது. கல்வியிலிருந்து இடைநிறுத்தம் செய்யும் நேர்வுகளை குறைக்கவும், குறிப்பாக தொடக்க நிலையிலிருந்து இரண்டாம் நிலைக்கு மாறும் சமயத்தில் காணப்படும் இடைநிறுத்தங்களை குறைக்கவும், ST மாணவர்கள் கல்வியில் போஸ்ட் மெட்ரிக் நிலையை அடைவதற்கான வாய்ப்பை மேம்படுத்தவும், அவர்களுக்கு ஆதரவு அளிப்பதே Pre-MS-STன் நோக்கமாகும்.

## 4.2 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

Pre-MS-STயைப் பெறும் மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள் மற்றும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 4.1: Pre - MS-ST திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| வ.எண் | அம்சங்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 1 | பரப்பு | இந்தியாவில் கல்வி[3] கற்பதற்காக ST மாணவர்களுக்கு அளிக்கப்படும் |
| 2 | வழங்குபவர் | விண்ணப்பதாரரின் மாநிலம் அதாவது அவர் வசிக்கும் மாநிலத்தின் அரசு |
| 3 | **மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள்**[4] | |
| | (அ) வகை | ST |
| | (ஆ) மாணவரின் குடும்ப வருமானம் | ஆண்டிற்கு ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| | (இ) வங்கி கணக்கு | மாணவர் ஒரு அங்கீகாரம் பெற்ற வங்கியில் ஆதார் மற்றும் மொபைல் எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ள செல்லுபடியாகும் வங்கிக் கணக்கு வைத்திருக்க வேண்டும், |
| | (ஈ) வேறு ஏதேனும் உதவித்தொகை | மாணவர் வேறு எந்த உதவித்தொகையையும் பெறுபவராக இருக்கக்கூடாது. |
| 4 | **உதவித்தொகையின் வருடாந்திர மதிப்பு**[5] | |
| | 10 மாதங்களுக்கான உதவித்தொகை | வெளி மாணாக்கர்கள் - ₹2,250;<br>விடுதி மாணாக்கர்கள் - ₹5,250 |
| | புத்தகங்கள் மற்றும் தற்காலிக மானியம் | வெளி மாணாக்கர்கள் - ₹750;<br>விடுதி மாணாக்கர்கள் - ₹1,000 |
| | கூடுதல் வருடாந்திர மாற்றுத்திறனாளி உதவித்தொகை[6] | வெளி மாணாக்கர்கள் - ₹7,200;<br>விடுதி மாணாக்கர்கள் - ₹9,600 |
| 5 | நிதியளிப்பு முறை | மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையே 75:25 என்ற பகிர்வு விகிதம். |

(ஆதாரம்: Pre - MS-ST வழிகாட்டுதல்கள் 2021-26)

---

[3] மாணவர் அரசுப் பள்ளி அல்லது அரசு அல்லது மத்திய/மாநில இடைநிலைக் கல்வி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட பள்ளியில் படித்துக் கொண்டிருக்க வேண்டும்.

[4] எந்த வகுப்பில் படித்தாலும் ஒரு வருடம் மட்டுமே உதவித்தொகை கிடைக்கும். ஒரு மாணவர் ஒரு வகுப்பை மீண்டும் தொடர வேண்டியிருந்தால், அவர்/அவள் அதே வகுப்பிற்கு இரண்டு முறை உதவித்தொகை பெற இயலாது. மாணவர் அடுத்த வகுப்பிற்குச் செல்லும்போது உதவித்தொகையைப் புதுப்பிக்க இயலும்.

[5] 2021-22 முதல் அமலுக்கு வரும்.

[6] 10 மாதங்களுக்கு உதவித்தொகை மற்றும் புத்தகங்கள் மற்றும் தற்காலிக மானியத்திற்கு கூடுதலாக.

## 4.3 செயல்முறை

Pre-MS-ST வழிகாட்டுதல்கள், 2012ன்[7] படி, அனைத்து வகையிலும் பூர்த்திசெய்யப்பட்ட உதவித்தொகைக்கான விண்ணப்பம்[8], விண்ணப்பதாரர்கள் கல்வி பயின்று கொண்டிருக்கும் அல்லது இறுதியாகப் பயின்ற கல்வி நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்னர், அவரால் ஆய்வு செய்யப்பட்டு, அவரது பரிந்துரையுடன் அனுமதி வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்பட வேண்டும். இருப்பினும், 2021-2026 ஆண்டுகளின் Pre-MS-ST வழிகாட்டுதல்கள் பத்தி 4ன்படி, இணைய வழியில் விண்ணப்பிக்கவும், மாணவர்களின் வங்கிக் கணக்கில் DBT முறையில் உதவித்தொகையை வழங்கவும் மாநிலங்கள் இணையதளத்தை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

மாநிலத்தில் Pre-MS-ST யை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு **விளக்கப்படம் 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**விளக்கப்படம் 4.1: Pre-MS-STயை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு**




## 4.4 பயனாளிகளின் உள்ளடக்கம்

Pre-MS-ST வழிகாட்டுதல்களின்படி[9], மாநில அரசுகள் இத்திட்டத்தை தகுந்த முறையில் விளம்பரப்படுத்தி, மாநிலத்தின் முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் அந்தந்த இணையதளங்கள் மற்றும் பிற ஊடக அமைப்புகள் மூலம் உள்ளூர் மொழியில் விளம்பரம் செய்து விண்ணப்பங்களுக்கான அழைப்பை விடுக்க வேண்டும். சமூக அமைப்புகள்/அரசு சாரா நிறுவனங்கள்/ஊராட்சி நிறுவனங்கள்/

[7] PMS-ST வழிகாட்டுதல்களின் பத்தி 12, 2012 மற்றும் 2021-26.

[8] சாதிச் சான்றிதழ் மற்றும் வருமான சான்றிதழுடன்.

[9] Pre-MS-ST வழிகாட்டுதல்கள், 2012 மற்றும் 2021ன் பத்திகள் 11.1 மற்றும் 7.

சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளோடும் ஒருங்கிணைந்து விழிப்புணர்வு முகாம்கள் ஏற்பாடு செய்யப்படலாம்.

### 4.4.1 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் Pre MS-ST திட்டத்தில் பள்ளிகள் பங்கேற்காதது

**பத்தி 2.4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் இருந்த பள்ளிகளுள் சராசரியாக 46 விழுக்காடு பள்ளிகள், 2019-22 காலகட்டத்தில், தங்கள் பள்ளிகளில் படிக்கும் SC/ST மாணவர்களுக்கான ப்ரி-மெட்ரிக் உதவித்தொகைத் திட்டங்களைப் பெற இயலவில்லை என்று தணிக்கை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

இத்திட்டம் குறித்த போதிய விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு இல்லாததே பள்ளிகள் இத்திட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணமாக இருக்க கூடும் என்பதையும், தகுதியான SC/ST மாணவர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்த இயலாமைக்கு இது வழிவகுத்ததையும் தணிக்கை கவனித்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது, துறை இதனை ஆராயும் பொருட்டு, அது குறித்த விவரங்களை, செயலாளர் கோரினார்.

### 4.4.2 தகுதியுடைய ST மாணவர்கள் திட்டத்தில் சேர்க்கப்படாமை

EMIS தரவுதளத்தின்படி Pre-MS-ST பெறுவதற்கு தகுதியுடைய IXஆம் வகுப்பு மாணவர்களின்[10] எண்ணிக்கையானது 2019-23[11] காலக்கட்டத்தில் இருந்த Pre-MS-ST பயனாளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டு இவ்விரண்டிற்கும் இடையிலான இடைவெளி கண்டறியப்பட்டது (**அட்டவணை 4.2**).

**அட்டவணை 4.2: தகுதியுடைய IXஆம் வகுப்பு மாணவர்கள் திட்டத்தில் சேர்க்கப்படாமை**

| ஆண்டு | பயனாளிகள் - EMIS தரவுகளின்படி | AD&TW தரவுகளின்படி புதிய விண்ணப்ப–தாரர்களின் எண்ணிக்கை | திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுடைய மாணவர்கள் | |
|---|---|---|---|---|
| | | | எண்ணிக்கை | விழுக்காடு |
| (1) | (2) | (3) | (4) = (2-3) | (5) |
| 2019-20 | 13,361 | 6,265 | 7,096 | *53* |
| 2020-21 | 15,792 | 7,043 | 8,749 | *55* |
| 2021-22 | 15,168 | 9,870 | 5,298 | *35* |
| 2022-23 | 14,338 | 7,955 | 6,383 | *45* |

(ஆதாரம்: AD&TW மற்றும் SE துறைகளால் வழங்கப்பட்ட தரவு)

திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுடைய வகுப்பு IX மாணவர்கள், 2019-23 காலகட்டத்தில், 35 முதல் 55 விழுக்காடு வரை இருந்ததை **அட்டவணை 4.2** வெளிப்படுத்துகிறது. தகுதியுடைய பயனாளிகள் முனைப்புடன் அடையாளம் காணப்படாத நிலையில், தற்போது

[10] ஆண்டு வருமானம் ₹2 இலட்சத்திற்கும் குறைவாக உள்ளவர்கள்.

[11] 2019-20 முதல் மட்டுமே EMIS தரவு கிடைக்கப்பெற்றது. அதற்கு முன்னதாக, தரவு கையேடு முறையில் பராமரிக்கப்பட்டது.

உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களுக்கு மட்டுமே பயன்களை இத்திட்டங்கள் வழங்குகின்றன.

வருமான வரம்பு மற்றும் சமூக அடிப்படையில் விண்ணப்பங்களை துறை ஆய்வு செய்ய அடிப்படையாகக் கொண்டுள்ள அறிவிப்பின்படி உதவித்தொகைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை அனுமதிக்கப்பட்டிருப்பதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). SE துறையின் EMIS மற்றும் HE துறையின் UMIS ஆகியவற்றை, 2023-24ஆம் ஆண்டிலிருந்து பயன்பாட்டிற்கு கொண்டு வருவதன் மூலம், சாத்தியமான அனைத்து பயனாளிகளின் தரவை பெற்று அவர்களிடையே திட்டத்தைக் கொண்டு செல்ல துறையால் இயலும் என்று மேலும் கூறப்பட்டது.

### 4.4.3 Pre MS-ST பயனாளிகளின் இடைநிறுத்தம்/நீக்கம்

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களிலிருந்து, 2017-22 ஆண்டுகளில், தேர்ந்தெடுக்கப்பட்ட 21 கல்வி நிறுவனங்களில் மொத்தம் 147 ST மாணவர்கள் இடைநிறுத்தம் செய்தனர்/நீக்கப்பட்டனர் மற்றும் அவர்களின் கல்வி முடிவடையும் முன்னரே அவர்களுக்கு உதவித்தொகையாக ₹3.11 இலட்சம் வழங்கப்பட்டிருந்தது. கல்வியாண்டைத் தொடர்ந்து வரும் ஆண்டில் மாணவரின் உதவித்தொகை புதுப்பிக்கப்பட்டதை சரிபார்க்க அவர்/அவளது உதவித்தொகை IDயானது தனித்துவமான அடையாளங்காட்டியாக எடுத்துக் கொள்ளப்பட்டு துறையால் வழங்கப்பட்ட Pre-MS-ST பயனாளிகளின் தரவுத்தளம் பகுப்பாய்வு செய்யப்பட்டது. இப்பகுப்பாய்வு, **இணைப்பு 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, Pre-MS-ST உதவித்தொகைக்கான அனுமதி பெற்ற 1,966 ST மாணவர்கள் இடைநிறுத்தம் செய்திருந்ததை/கல்வியாண்டைத் தொடர்ந்து வந்த ஆண்டில் விலக்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்தியது.

குறைவான குடும்ப வருமானம் காரணத்தாலும், அதன் நிமித்தமாக பணியில் சேர்வதாலுமே உயர்நிலைப் பள்ளி மட்டத்தில் மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் அதிகமாக இருந்திருக்கக் கூடும் என தணிக்கை கண்டறிந்தது. உயர் நிலை அளவில் அதிக இடைநிற்றல் விகிதம், அதற்கேற்ப, மேல்நிலையில் காணப்பட்ட GERன் குறைவு ஆகியவற்றால் ஒரு சில ST மாணவர்களே உயர்கல்வியைத் தேர்ந்தெடுக்க முடிந்தது. எனவே, உயர்கல்வியைத் தொடரும்படி ST மாணவர்களை ஊக்குவிப்பதற்காக ப்ரி-மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களை திறம்பட செயல்படுத்துவது இன்றியமையாத ஒன்றாகிறது.

மேலும், அகில இந்திய நிலையுடன் தமிழ்நாட்டை ஒப்பிடும் போது, உயர் தொடக்க நிலையை விட உயர் நிலை மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் அதிகமாக இருந்தது **அட்டவணை 2.4ல்** இருந்து தெரிய வருகிறது. தமிழ்நாட்டில், 2019-22 ஆண்டுகளில் உயர் தொடக்க மற்றும் உயர் நிலை ஆகிய இரண்டிலும் ST மாணவர்களின் இடைநிற்றல் விகிதம் குறைந்து வந்ததும் இவ்வட்டவணையில் இருந்து தெரிய வருகிறது.

நிறைவுக் கூட்டத்தின் போது, தணிக்கை மூலம் வழங்கப்பட்ட தரவுகளை ஆய்வு செய்து, தகுந்த நடவடிக்கை மேற்கொள்வதாக DADW கூறினார்.

## 4.5 திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை

Pre-MS-STயானது, மத்திய அரசின் பங்களிப்பான (CA) 75 விழுக்காடு மற்றும் மாநில அரசின் பங்களிப்பான 25 விழுக்காடு நிதியினைக் கொண்டு மாநில அரசுகளால் செயல்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும், பரிந்துரைக்கப்பட்ட படிவங்களின்படி[12] அவ்வாண்டின் நிதி தேவைக்கான முன்மொழிவுகளை மாநிலங்கள் அனுப்ப வேண்டும். நிதி இருப்பு மற்றும் பொது நிதி விதிகளுக்கு மாநிலம் இணங்குவதன் பேரில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் மாநிலங்களுக்கு மத்திய உதவி வழங்கப்படும்.

### 4.5.1 மாணவர்களின் உள்ளடக்கம் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்

2017-23 ஆண்டுகளில் வழங்கப்பட்ட உதவித்தொகைகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் **விளக்கப்படம் 4.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 4.2: 2017-23ல் வழங்கப்பட்ட உதவித்தொகை மற்றும் செலவினம்**




(ஆதாரம்: வருடாந்திர செயல் திட்டம் - 2023-24)

### 4.5.2 நிதி இருப்பு மற்றும் வழங்கல்

Pre-MS-ST உதவித்தொகையின், 2017-23 ஆண்டுகளுக்கான நிதி இருப்பு மற்றும் வழங்கல் **அட்டவணை 4.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

---

12 தணிக்கை சான்றிதழ் மற்றும் பயன்பாட்டு சான்றிதழ்(கள்) உட்பட.

**அட்டவணை 4.3: 2017-23 காலகட்டத்தில் வரவினம் மற்றும் செலவினம் : Pre MS-ST உதவித்தொகை**

(₹ இலட்சத்தில்)

| ஆண்டு | ஆண்டு வாரியாக | | மத்திய/மாநில பங்கு | | வழங்கப்பட்ட CA | CAன் மொத்த நிலுவைத் தொகை |
|---|---|---|---|---|---|---|
| | தேவை கோரிக்கை | செலவு | மாநிலம் (25 விழுக்காடு) | மத்திய (75 விழுக்காடு) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) |
| 2017-18 | 295.48 | 462.52 | 115.63 | 346.89 | 0 | (-) 214.80 |
| 2018-19 | 302.37 | 300.38 | 75.10 | 225.28 | 225.28 | 0 |
| 2019-20 | 399.08 | 383.81 | 95.95 | 287.86 | 287.86 | 0 |
| 2020-21 | 548.24 | 395.46 | 98.87 | 296.00 | 296.59 | 0 |
| 2021-22 | 627.13 | 492.50 | 123.13 | 369.38 | 352.76 | 16.61 |
| 2022-23 | 410.29 | 573.84 | 143.46 | 430.38 | 387.85 | 42.53 |

(ஆதாரம்: 2021-24 ஆண்டுகளுக்கான AAPகள்)

ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிலுவையில் இருந்த CAன் மொத்தப் பற்றாக்குறை, 2018-23 ஆண்டுகளில், ₹16.61 இலட்சம் முதல் ₹42.53 இலட்சம் வரை இருந்தது **அட்டவணை 4.3**லிருந்து தெரிய வருகிறது.

வருடாந்திர தேவைக் கோரிக்கை சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், 2016-21 ஆண்டுகளுக்கான CA உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை என்று GoTN பதிலளித்தது (ஜூன் 2024). மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உதவித்தொகை வழங்கப்பட வேண்டி இருந்ததால் மாநில அரசின் நிதி இதற்காகப் பயன்படுத்தப்பட்டது. மேலும் மத்திய அரசின் நிதி வழங்கப்பட்ட பின் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்ட செலவினம் அதில் சரிசெய்யப்பட்டது என்றும், 2022-23 முதல், மத்திய அரசின் நிதி வழங்கப்படுவதில் எவ்வித தாமதமோ அல்லது நிதி வழங்கப்படாமையோ இருக்கவில்லை எனவும் பதிலில் கூறப்பட்டது.

## 4.6 உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு

திட்ட வழிகாட்டுதல்களின்படி, அனைத்து வகையிலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள், விண்ணப்பதாரர்கள் கல்வி கற்றுவரும் அல்லது இறுதியாக கற்ற பள்ளி நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். பின்னர், அவற்றின் ஆய்வுக்குப் பிறகு கல்வி நிறுவனத் தலைவரின் பரிந்துரையுடன் அனுமதி வழங்கும் அதிகாரிக்கு அனுப்பப்படும்.

### 4.6.1 பல்வேறு நிலைகளில் விண்ணப்பங்களைச் செயலாக்க கால வரம்பு இல்லாதது

இணையதளம், 2017-23 ஆண்டுகளில், தாமதமாகத் தொடங்கப்பட்டது. அதாவது, தொடர்புடைய AYன் டிசம்பர் மாதம் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் ஜனவரி மாதங்களுக்கு இடையே இது தொடங்கப்பட்டது. இத்தாமதத்தால் **பத்தி 4.7.1ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, TWன்

இயக்ககத்திலிருந்து உதவித்தொகைக்கான அனுமதி கிடைப்பதிலும் அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதிலும் தாமதம் ஏற்பட்டது.

பல்வேறு படிப்புகள் மற்றும் பிரிவுகளுக்கு வெவ்வேறு கல்வி காலெண்டர்கள் பின்பற்றப்படுவதால், விண்ணப்பங்களைப் பெறுதலிலும் அவற்றைச் செயலாக்குவதிலும் திட்டவட்டமான ஒரு கால வரம்பை பின்பற்றுவதில் துறைக்கு சிரமம் ஏற்படுவதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). தகுதியுடைய அனைத்து விண்ணப்பங்களும், அதனதன் கல்வியாண்டிற்குள் செயலாக்கப்பட்டு வழங்கப்படுவதை துறை உறுதி செய்கிறது. மேலும், AD&TW உதவித்தொகை இணையதளம், 2022-23 முதல், ஒருங்கிணைந்த மாநில உதவித்தொகை இணையதளத்திற்கு மாறியுள்ளதாலும் உதவித்தொகை DBT மூலம் வழங்கப்பட்டு, பகிர்வு முறையின் கீழ் (60:40) வந்துள்ளதாலும், கால வரம்புகள் மத்திய அரசின் தேசிய உதவித்தொகை இணையதளத்துடன் பொதுவாக அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

### 4.6.2 உதவித்தொகை விண்ணப்பங்களின் மீது போதிய ஆய்வு இல்லாதது

உதவித்தொகை விண்ணப்பங்கள் TWன் இயக்ககத்தால் அனுமதிக்கப்படும் முன்னதாக, கல்வி நிறுவன அளவிலும் மாவட்ட அளவிலும் (DADTWO) ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இருப்பினும், உதவித்தொகை விண்ணப்பங்களின் மீதான ஆய்வு மற்றும் உதவித்தொகை தரவுகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தின:

- **தெரிவு செய்யப்பட்ட பள்ளிகளில் ஆய்வு செய்யப்பட்ட 729 விண்ணப்பங்களுள் 339 விண்ணப்பங்களில்[13] (47 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை.**
- துறையின் உதவித்தொகை பயனாளிகளின் தரவுத்தளத்தை மற்ற பல்வேறு தரவுத்தளங்களுடன்[14] ஒப்பிடுகையில், 226 ST மாணவர்களின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தது. இதன் விளைவாக 2017-23ல் அனுமதியற்ற தொகையாக ₹6.02 இலட்சம் செலுத்தப்பட்டது **(இணைப்பு 2.4).**

இது தொடர்பான ஒரு குறிப்பிட்ட தணிக்கை வினவலுக்கு, தேவையான ஆவணங்கள் மாணவர்களால் சமர்ப்பிக்கப்படுவதற்கான ஒப்புதலை/உத்திரவாதத்தை அவர்களின் பெற்றோரிடமிருந்து பெற்ற பின்னரே உதவித்தொகை விண்ணப்பங்கள் செயலாக்கப்பட்டன என்று

[13] வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் முறையே 335 மற்றும் 237 விண்ணப்பங்களில் இணைக்கப்படவில்லை. விண்ணப்பங்களின் நகல்களை சரிசெய்த பிறகு தகுதியற்ற விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை அடையப்பட்டது.

[14] TNeGAயிலிருந்து வருமானச் சான்றிதழ் தரவு. மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் EMIS தரவுத்தளம்.

நான்கு பள்ளிகளின்[15] தலைமையாசிரியர்கள் பதிலளித்தனர் (டிசம்பர் 2023). ST மாணவர்களின் பெற்றோர்கள் மலைப்பகுதிகளில் வசித்து வந்ததாகவும், பலமுறை வட்டாட்சியர் அலுவலகத்திற்குச் சென்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெற இயவில்லை என்றும் குறிப்பிட்டதோடு இக்காரணங்களால் வாழ்வாதாரத்திற்கான ஊதியத்தை அவர்களால் பெற இயலவில்லை என்றும் கூறியதாக வெள்ளியங்காடு GHS தலைமையாசிரியர் கூறினார். மேலும், குடியிருப்பாளர்கள் அனைவரும் ஒரே சாதிப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதாலும், சான்றிதழ்கள் வழங்கப்படும் என்று அவர்களால் வழங்கப்பட்ட உறுதியின் பேரிலும் அவர்களது விண்ணப்பங்கள் செயலாக்கப்பட்டதாகவும் அவர் கூறினார்.

திட்ட வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உரிய அதிகாரி/துறைகளால் வழங்கப்படும் தரவு/சான்றிதழ்களையே துறை சார்ந்திருக்க வேண்டியுள்ளதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). 2022-23ஆம் ஆண்டிலிருந்து, இணையவழி சாதி/வருமானச் சான்றிதழ்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வருவாய்த் துறை இணையதளத்தில் இருந்து தரவைப் பெறுவதன் மூலம் உதவித்தொகை இணையதளத்தில் அவை தானாகவே சரிபார்க்கப்படுவதாகவும் பதிலில் கூறப்பட்டது.

### 4.6.3 IT போர்ட்டலில் விண்ணப்பிக்காத பயனாளிகளுக்கு Pre MS உதவித்தொகை வழங்கப்பட்டமை

இணையதள வசதி தயாராக இல்லாததாலும், மாநிலப் பங்கானது மார்ச் 2023க்கு முன் வழங்கப்பட வேண்டும் என்பதாலும், **பத்தி 2.5.3ல்** விளக்கப்பட்டுள்ளபடி, EMIS தரவுத்தளத்தைப் பயன்படுத்தி, 2022-23 ஆம் ஆண்டிற்கான Pre MS உதவித்தொகைக்குத் தகுதியான SC/ST மாணவர்களை DADW கண்டறிந்து (மார்ச் 2023), மாநில பங்கான 40 விழுக்காட்டை அவர்களின் கணக்குகளில் செலுத்தியது. இச்செயல் Pre MS-STக்கான வழிகாட்டுதல்கள் மற்றும் மத்திய அரசின் அறிவுறுத்தல்களை முற்றிலுமாக மீறுவதாக இருந்தது.

IT போர்ட்டலில் விண்ணப்பிக்காத 15,325 Pre MS-ST மாணவர்களுக்கு, கல்வியாண்டு 2022-23ல், வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் போன்ற தேவையான ஆவணங்களின் சரிபார்ப்பின்றி, ₹5.17 கோடி உதவித்தொகை வழங்கப்பட்டிருப்பதாக உதவித்தொகை தரவுகளின் மீதான தணிக்கை ஆய்வு வெளிப்படுத்தியது.

EMISல் பள்ளிக் கல்வித் துறையால் பராமரிக்கப்படும் மாணவர்கள் தொடர்பான தரவு, AD & TW துறையால் பயன்படுத்தப்படுவதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும் இத்தரவு, உதவித்தொகை பெறத் தேவையான முக்கிய தகுதி நிபந்தனைகளான வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழுக்காக, TNeGAஆல் பராமரிக்கப்படும் சான்றிதழ் வழங்கும்

[15] (i) GHS, நாயக்கன்பாளையம்; (ii) GHS, வெள்ளியங்காடு; (iii) GTR HS, முத்தத்துவயல் மற்றும் (iv) GTR HSS, ஆனைகட்டி.

வருவாய்த் துறையின் தரவுத்தளத்துடன் சரிபார்க்கப்படுவதாகவும் கூறப்பட்டது.

இருப்பினும், உதவித்தொகை பெறுவதற்குத் தகுதியான மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமானம் ₹2.50 இலட்சத்திற்கும் குறைவாக இருக்க வேண்டும் என்றிருக்க, EMIS தரவுகளில் பெற்றோரின் ஆண்டு வருமானத்திற்கான அடுக்குகளில் (income slabs) ஒன்று ₹2 இலட்சம் முதல் ₹3 இலட்சம் வரை என இருந்ததை தணிக்கை கவனித்தது. எனவே, மாணவர்களது பெற்றோரின் ஆண்டு வருமான அளவுகோலின்படி தகுதியான பயனாளிகளைக் கண்டறிவது சாத்தியமற்றிருந்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது, மையப்படுத்தப்பட்ட தரவுத்தளத்தின் அடிப்படையிலான ஒரு தன்னியக்கச் சரிபார்ப்பு செயல்முறைக்கு துறை மாறுவதாக DADW கூறினார். மேலும், வருமான அடுக்குகளை மாற்றியமைக்கும்படி பள்ளிக் கல்வித் துறை கோரப்பட்டுள்ளதாகவும் DADW தெரிவித்தார்.

## 4.7 உதவித்தொகை வழங்கல்

திட்ட வழிகாட்டுதல்களின்படி, கல்வி உதவித்தொகையானது உரிய நேரத்தில் தவறாமல் மாணவர்களுக்கு வழங்கப்படுவதை மாநில அரசுகள் உறுதி செய்ய வேண்டும். மத்திய உதவி வெளியீடு நிலுவையில் இருந்தால், மாநில வரவு செலவு திட்டத்தில் இருந்து உதவித்தொகைகள் செலுத்தப்பட்டு பின்னர் அத்தொகை திரும்பக் கோரப்படலாம். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மத்திய உதவித் தொகை வழங்கப்படுவதில் ஏற்படும் தாமதத்தால் மாணவர்களுக்கு வழங்கப்படும் உதவித்தொகை நிறுத்தி வைக்கப்படக்கூடாது.

### 4.7.1 உதவித்தொகை வழங்கப்படுவதில் இருந்த தாமதம்

Pre MS-ST உதவித்தொகை தரவின் மீதான பகுப்பாய்வு, 2017-22 ஆண்டுகளில், ₹10.36 கோடி மதிப்பிலான உதவித்தொகை 40,320 நேர்வுகளுக்கு தாமதமாக வழங்கப்பட்டிருந்ததை வெளிப்படுத்தியது. இத்தாமதம், ஒரு மாதம் முதல் 10 மாதங்கள் வரை இருந்தது **(இணைப்பு 4.1)**.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், **இணைப்பு 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தேர்ந்தெடுக்கப்பட்ட 24 கல்வி நிறுவனங்களில் இருந்த 1,073 நேர்வுகளுக்கு ₹26.10 இலட்சம் மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டதில் தாமதம் காணப்பட்டது.

திட்ட இணைப்பு (mapping) மற்றும் மத்திய மற்றும் மாநிலப் பங்குகளுக்கான கணக்குத் தலைப்பை உருவாக்குவது போன்ற காரணங்களால் உதவித்தொகை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும், உதவித்தொகை வழங்குவதில் தற்போது தாமதம் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 4.7.2 பயனாளிகளின் தவறான வங்கி கணக்கு விவரங்கள் காரணமாக வழங்கப்படாத உதவித்தொகை

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், பல்வேறு காரணங்களால்[16], **இணைப்பு 2.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 22 நிறுவனங்களைச் சார்ந்த 481 மாணவர்களின் வங்கிக் கணக்குகளில் ₹12.40 இலட்சம் செலுத்தப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. இதில், தெரிவு செய்யப்பட்ட எட்டு கல்வி நிறுவனங்களில், 2017-19 ஆண்டுகளில், 39 மாணவர்கள் தொடர்பான ₹0.87 இலட்சம் அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

உதவித்தொகை வழங்கல், 2020-21ல் IFHRMS மூலம் மேற்கொள்ளப்பட்டதால், அந்த ஆண்டின் மீத இருப்புத்தொகை தன்னியக்கமாகவே அரசிடம் ஒப்படைக்கப்பட்டது என்று அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும், 2021-22ஆம் ஆண்டு முதல், கணக்கு அடிப்படையிலான செலுத்தமும் அதனை தொடர்ந்து 2022-23 ஆம் ஆண்டு முதல் ஆதார் அடிப்படையிலான செலுத்தமும் மேற்கொள்ளப்பட்டதால், உதவித்தொகை பெறப்படாத நேர்வுகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறைந்திருந்ததாக கூறப்பட்டது.

## 4.8 கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு

கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு, திட்டத்தின் செயல்திறனை மதிப்பிடுவதற்கும், திட்டம் தொடங்கப்பட்டதன் நோக்கங்கள் அடையப்பட்டனவா என்பதை உறுதி செய்வதற்கும் பயன்படுத்தப்படுகிறது. இத்திட்டத்தின் வெளியீட்டு அளவுகள், விளைவுகள் மற்றும் தாக்கம் ஆகியவற்றின் தற்போதைய மற்றும் வருங்கால நிர்வாகத்தை மேம்படுத்துவதே இதன் நோக்கமாகும்.

### 4.8.1 மாவட்ட அளவில் உதவித்தொகை பெற்றவர்களின் கல்வி நிறுவன வாரியான பட்டியலை NIC இணையதளத்தில் வெளியிடாதது

உதவித்தொகை வழங்கப்பட, அதைப் பெறுபவர்களின் கல்வி நிறுவன வாரியான பட்டியல், தேவையான விவரங்களுடன் மாவட்ட அளவில் NIC இணையதளத்தில் வெளியிடப்படுவதை மாநில அரசு உறுதி செய்ய வேண்டும். இருப்பினும், இது பின்பற்றப்படவில்லை என தணிக்கை கண்டது.

---

16 முடக்கப்பட்ட அல்லது நிறுத்திவைக்கப்பட்ட கணக்கு, முடிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட கணக்கு, வழக்கின் கீழிருந்த கணக்கு, செல்லாத கணக்கு, பயன்பாடற்ற கணக்கு, இதர வகை, இல்லாத கணக்கு போன்றவை.

### 4.8.2 குறை நிவர்த்தி அலுவலர்கள்

திட்ட வழிகாட்டுதல்களின்படி, மாணவர்களின் உதவித்தொகை தொடர்பான குறைகளைத் நிவர்த்தி செய்வதற்காக மாநில மற்றும் மாவட்ட அளவுகளில் குறை நிவர்த்தி அலுவலர்களை (Grievance Redressal Officers-GROகள்) மாநில அரசு நியமிக்க வேண்டும்.

இருப்பினும், மாணவர்களின் குறைகளை நிவர்த்தி செய்ய GROகள் நியமிக்கப்படவில்லை என தணிக்கை கண்டது.

மாணவர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கான குறை நிவர்த்தி அமைப்பாக ஒரு அழைப்பு மையம் TWன் இயக்ககத்தால் நிறுவப்பட்டுள்ளது என அரசு பதிலளித்தது (ஜூன் 2024).

# அத்தியாயம் V

# பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

# அத்தியாயம் V

# பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

**PMS-STயில் பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை (PMS-ST) திட்டத்தில், 2019-23 ஆண்டுகளில் சேர்க்கப்படாத XIஆம் வகுப்பைச் சார்ந்த தகுதியுடைய மாணவர்கள் 30 முதல் 42 விழுக்காடு வரை இருந்தனர் மற்றும் 2,013 பயனாளிகள் இடைநிறுத்தம் செய்தனர். மத்திய உதவியின் மொத்த பற்றாக்குறை, 2017-22 ஆண்டுகளில், ₹2.23 கோடி முதல் ₹16.12 கோடி வரை இருந்தது. தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் பெறப்பட்ட 333 விண்ணப்ப படிவங்களுடன் வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. பெற்றோரின் ஆண்டு வருமானம், அதன் வரம்பாகிய ₹2.50 இலட்சத்திற்கும் மேற்பட்டிருந்த 401 ST மாணவர்களுக்கு, கல்வி உதவித்தொகையாக ₹64.24 இலட்சம் வழங்கப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், 2017-23 ஆண்டுகளில், 32 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 308 மாணவர்களின் வங்கி கணக்குகளில், தவறான வங்கிக் கணக்கு விவரங்கள் காரணமாக, ₹26.72 இலட்சம் செலுத்தப்படவில்லை. தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தவறான தரவுத்தளத்தால் 162 மாணவர்களுக்கு ₹1.12 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவில்லை. கல்வி நிறுவனங்கள் 99ல், 253 மாணவர்களுக்கான கல்விக் கட்டணம் இருமுறை ஒப்புதல் அளிக்கப்பட்டு செலுத்தப்பட்டிருந்தது. இது, கல்விக் கட்டணமாக ₹1 கோடி இருமுறை செலுத்தப்பட வழிவகுத்தது. இரண்டு கல்வி நிறுவனங்களில் 35 ST மாணவர்கள் முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை மற்றும் PMS-ST உதவித்தொகை ஆகிய இரண்டையும் பெற்றிருந்தனர். எட்டு மாணவர்கள் 2017-21 ஆண்டுகளில், Ph.Dக்கான ஊக்கத்தொகை மற்றும் PMS-ST ஆகிய இரண்டையும் பெற்றிருந்ததன் விளைவாக ₹1.21 இலட்சம் அதிகமாக செலுத்தப்பட நேரிட்டது.**

## 5.1 முன்னுரை

'இந்தியாவில் கல்வி கற்கும் பழங்குடியின மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை' (PMS-ST) என்பது பழங்குடியினர் நலத்திற்காக மத்திய அமைச்சகத்தால் செயல்படுத்தப்படும் மத்திய நிதியுதவி திட்டமாகும். இத்திட்டத்தின் நோக்கம், தகுதியுடைய ST மாணவர்களுக்கு, நிதியுதவி அளிப்பதன் மூலம், மேல்நிலைக் கல்விக்குப் பின் முதுகலை வரை தரமான கல்வியை வழங்குவதும் பயனாளிகள் உரிய நேரத்தில் உதவித்தொகை பெறுவதை உறுதிசெய்யும் வகையில் நுட்பமான ஒரு தளத்தை உருவாக்குவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும். உதவித்தொகையானது, இந்தியாவில் கல்வி கற்கும் மாணவர்களுக்கு விண்ணப்பதாரர் வசித்து

வரும் மாநிலத்தின் அரசால் தீர்மானிக்கப்பட்ட விதிமுறைகளின்படி வழங்கப்படுகிறது.

## 5.2 திட்டத்தின் முக்கிய அம்சங்கள்

PMS-STயைப் பெறுவதற்கான மாணவர்களின் தகுதிக்கான நிபந்தனைகள் மற்றும் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் அட்டவணை 5.1ல் கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 5.1: PMS-STயைப் பெறுவதற்கான தகுதி மற்றும் முக்கிய அம்சங்கள்**

| வ. எண் | அம்சங்கள் | விவரங்கள் | | |
|---|---|---|---|---|
| 1 | **தகுதிக்கான நிபந்தனைகள்** | | | |
| | (அ) மாணவர் பிரிவு | அவர்/அவள் வசிக்கும் மாநிலத்தால் குறிப்பிடப்பட்ட STஐச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். | | |
| | (ஆ) மாணவர்களின் கல்வித் தகுதி | மெட்ரிக்குலேஷன் அல்லது மேல்நிலைக் கல்வி அல்லது அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் அல்லது இடைநிலைக் கல்வி குழுமத்தின் ஏதேனும் ஒரு உயர்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும். | | |
| | (இ) வருமான அளவுகோல்கள் | அனைத்து ஆதாரங்களில் இருந்தும் பெறப்படும் குடும்ப வருமானம், ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். | | |
| | (ஈ) வேறு ஏதேனும் உதவித்தொகை பெறுதல் | மாணவர் வேறு எந்த உதவித்தொகையையும்[1] பெற்றிருக்கக் கூடாது. | | |
| 2 | **உதவித்தொகையின் மதிப்பு (இரண்டு கூறுகளை உள்ளடக்கியது).** | | | |
| | (அ) கட்டணக் கூறு - திருப்பி பெற இயலாத, கட்டாயமாக செலுத்தப்பட வேண்டிய கட்டணச் செலுத்தம். | நான்கு வகைப் பாடப்பிரிவுகளில் மாணவரால் தொடரப்படும் பாட வகைக்கு, மாநில அளவிலான கட்டண நிர்ணயக் குழுவால் முடிவு செய்யப்படும். | | |
| | (ஆ) வருடாந்திர உதவித்தொகை[2] (₹ல்) | | | |
| | | **வகை/பாடப்பிரிவுகள்** | **விடுதி மாணவர்கள்** | **வெளி மாணவர்கள்** |
| | | **குரூப் I:** பல்வேறு கல்விப் பிரிவுகளில் தொழில்முறை படிப்புகளில், பட்டம், PG டிப்ளமோ மற்றும் M.Phil, Ph.D, பெறுவதற்கான, இளங்கலை (UG) மற்றும் முதுகலை (PG) பட்டப் படிப்புகள். | ₹12,000 | ₹5,500 |
| | | **குரூப் II:** குரூப் Iன் பாடப்பிரிவுகளில் கலை, அறிவியல் மற்றும் வணிகத்தி கீழ் வராத தொழில்முறை அல்லாத அங்கீகரிக்கப்பட்ட UG மற்றும் PG படிப்புகள். | ₹8,200 | ₹5,300 |
| | | **குரூப் III:** தொழிற்கல்வி பிரிவு, ITI தொழில்நுட்பக்கல்வி போன்றவை. | ₹5,700 | ₹3,000 |
| | | **குரூப் IV:** X வகுப்பை நுழைவுத் தகுதியாக கொண்ட, உயர்நிலைக் கல்விக்குப் பிந்தைய பட்டம் பெறாப் படிப்புகள். | ₹3,800 | ₹2,300 |
| | (இ) உதவித்தொகையுடன் கூடுதலாக மாற்றுத்திறனாளி மாணவருக்கு வழங்கப்பட்ட வருடாந்திர கூடுதல் மாற்றுத்திறனாளி ஊக்கத்தொகை | விடுதி மாணவர்கள்: ₹9,600;<br>வெளி மாணவர்கள்: ₹7,200. | | |

[1] ஒரு மாணவருக்கு வேறு ஏதேனும் உதவித்தொகை/பயிற்சித்தொகை வழங்கப்பட்டால், மாணவர், அதிக நன்மை பயக்கும் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, அதனை கல்வி நிறுவனத் தலைவர் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

[2] இருப்பினும், சம்பந்தப்பட்ட மாநில அரசு நிர்வாகமானது திட்டத்தின் பரிந்துரைக்கப்பட்ட விகிதங்களுக்கு மேல் உதவித்தொகையை வழங்கலாம்

| வ. எண் | அம்சங்கள் | விவரங்கள் |
|---|---|---|
| 3 | நிதியளிப்பு முறை (மத்திய மற்றும் மாநிலங்களுக்கு இடையிலான பகிர்வு விகிதம்) | 75:25 |
| 4 | மாணவர்களுக்கு உதவித்தொகை செலுத்தும் முறை | DBT[3] மூலம் |

(ஆதாரம்: PMS-ST வழிகாட்டுதல்களிலிருந்து தொகுக்கப்பட்டது)

## 5.3 செயல்முறை

PMS-ST வழிகாட்டுதல்களின்படி[4], அனைத்து வகையிலும்[5] பூர்த்திசெய்யப்பட்ட உதவித்தொகைக்கான விண்ணப்பம், விண்ணப்பதாரர்கள் கல்வியைத் தொடர்ந்து கொண்டிருக்கும் அல்லது இறுதியாக கல்விகற்ற நிறுவனத் தலைவரிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும், பின்னர், விண்ணப்பதாரர் வசிக்கும் மாநிலத்தின் அரசால் குறிப்பிடப்படும் அதிகாரிக்கு, அவ்வப்போது வழங்கப்படும் அறிவுறுத்தல்களின்படி, விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டும். இருப்பினும், 2022ஆம் ஆண்டின் PMS-ST வழிகாட்டுதல்களின் பத்தி 5ன் படி, இணைய வழியில் விண்ணப்பிக்கவும், மாணவர்களின் வங்கிக் கணக்கில் DBT மூலம் உதவித்தொகையை வழங்கவும் மாநிலங்கள் இணையதளத்தை உருவாக்க வேண்டியது அவசியமாகிறது.

மாநிலத்தில் PMS-STயை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு **விளக்கப்படம் 5.1ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

---

[3] 2021-22 முதல்.

[4] PMS-ST வழிகாட்டுதல்கள், 2012ன் பத்தி 12.

[5] தேர்ச்சி பெற்ற அனைத்து தேர்வுகள் தொடர்பான சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகலுடன், சாதிச் சான்றிதழ், வருமான அறிவிப்பு/சான்றிதழ்.

**விளக்கப்படம் 5.1: PMS-STயை செயல்படுத்துவதற்கான நிறுவன அமைப்பு**




## 5.4 பயனாளிகளின் உள்ளடக்கம்

PMS-ST வழிகாட்டுதல்களின்படி[6], மாநில அரசுகள் இத்திட்டத்தை தகுந்த முறையில் விளம்பரப்படுத்தி, மாநிலத்தின் முன்னணி செய்தித்தாள்கள் மற்றும் அந்தந்த இணையதளங்கள் மற்றும் பிற ஊடக அமைப்புகள் மூலம் உள்ளூர் மொழியில் விளம்பரம் செய்து விண்ணப்பங்களுக்கான அழைப்பை விடுக்க வேண்டும். பொது சமூக அமைப்புகள்/அரசு சாரா நிறுவனங்கள்/ஊராட்சி நிறுவனங்கள்/ சம்பந்தப்பட்ட பிற அமைப்புகளோடும் இணைந்து விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படலாம். மேலும், உதவித்தொகை சரியான நேரத்தில் வழங்கப்படுவதை உறுதி செய்வதற்காக, மே 01ஆம் தேதிக்குள் விண்ணப்பங்களைப் பெறும் வண்ணம் ஒரு இணையதளத்தை தொடங்க மாநிலங்கள் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று வழிகாட்டுதல்கள் குறிப்பிடுகின்றன.

### 5.4.1 தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் PMS-ST திட்டத்தில் பள்ளிகள் பங்கேற்காதது

**பத்தி 3.4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் இருந்த பள்ளிகளுள் சராசரியாக 39 விழுக்காடு பள்ளிகள், 2019-22 காலகட்டத்தில், PMS-SC மற்றும் PMS-ST

[6] PMS-ST வழிகாட்டுதல்கள், 2012ன் பத்தி 11 மற்றும் PMS-ST வழிகாட்டுதல்கள், 2022ன் பத்திகள் 8 மற்றும் 9.

உதவித்தொகையைப் பெறவில்லை என்று தணிக்கை பகுப்பாய்வு வெளிப்படுத்தியது.

இத்திட்டம் குறித்த போதிய விளம்பரம் மற்றும் விழிப்புணர்வு இல்லாததே பள்ளிகள் இத்திட்டத்தில் பங்கேற்காமைக்கான காரணமாக இருக்க கூடும் எனத் தணிக்கை கண்டது, இதன் விளைவாகத் தகுதியான SC/ST மாணவர்கள் இத்திட்டத்தைப் பயன்படுத்த இயலவில்லை.

### 5.4.2 தகுதியுள்ள ST மாணவர்கள் சேர்க்கப்படாதது

EMIS தரவுத்தளத்தின்படி, PMS-ST பெறுவதற்கு தகுதியுடைய XI ஆம் வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கையானது, 2019-23[7] காலகட்டத்தில் விண்ணப்பித்திருந்த PMS-ST பயனாளிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிடப்பட்டு, இவ்விரண்டிற்கும் இடையிலான இடைவெளி கண்டறியப்பட்டது (**அட்டவணை 5.2**).

**அட்டவணை 5.2: தகுதியுடைய ST மாணவர்கள் திட்டத்தில் சேர்க்கப்படாதது**

| ஆண்டு | EMIS தரவுகளின்படி தகுதியுள்ள பயனாளிகள் (வகுப்பு XI) | AD&TW தரவுகளின்படி புதிய விண்ணப்பதாரர்களின் எண்ணிக்கை (வகுப்பு XI) | திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுள்ள பயனாளிகள் (விழுக்காடு) |
|---|---|---|---|
| 2019-20 | 8,214 | 5,345 | 2,869 *(35)* |
| 2020-21 | 9,122 | 6,215 | 2,907 *(32)* |
| 2021-22 | 10,709 | 7,480 | 3,229 *(30)* |
| 2022-23 | 8,090 | 4,661 | 3,429 *(42)* |

(ஆதாரம்: AD&TW மற்றும் SE துறைகளால் வழங்கப்பட்ட தரவு)

திட்டத்தில் சேர்க்கப்படாத தகுதியுடைய XIஆம் வகுப்பு மாணவர்கள், 2019-23 காலக்கட்டத்தில், 30 முதல் 42 விழுக்காடு வரை இருந்தனர். தகுதியுடைய பயனாளிகள் முனைப்புடன் அடையாளம் காணப்படாத நிலையில், CSS திட்டங்கள், தற்போது இத்திட்டம் குறித்து தெரிந்து, உதவித்தொகைக்கு விண்ணப்பிக்கும் ST மாணவர்களுக்கு மட்டுமே பயன்களை வழங்கி வருகின்றன என்பதை **அட்டவணை 5.2** வெளிப்படுத்துகிறது.

வருமான வரம்பு மற்றும் சாதிப் பிரிவின் அடிப்படையில் விண்ணப்பங்களை ஆய்வு செய்ய துறை அடிப்படையாகக் கொண்டுள்ள அறிவிப்பின்படி உதவித்தொகைக்கு விண்ணப்பித்த மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை அனுமதிக்கப்பட்டிருப்பதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). SE துறையின் EMIS மற்றும் HE துறையின் UMIS ஆகியவற்றை, 2023-24ஆம் ஆண்டிலிருந்து பயன்படுத்துவதன் மூலம், சாத்தியமான அனைத்து பயனாளிகளின் தரவை பெற்று அவர்களிடையே திட்டத்தைக் கொண்டு செல்ல துறையால் இயலும் என்று மேலும் கூறப்பட்டது.

[7] 2019-20 முதல் மட்டுமே EMIS தரவு கிடைக்கப்பெற்றது. அதற்கு முன்னதாக, தரவு கைமுறையாகப் பராமரிக்கப்பட்டது.

#### 5.4.3 PMS-ST பயனாளிகளின் இடைநிற்றல்

உயர்நிலைக் கல்விக்கு அல்லது மேல்நிலைக் கல்விக்குப் பிந்தைய கல்வி நிலையிலுள்ள ST மாணவர்கள், தங்கள் கல்வியை முடிக்கும் வகையில் அவர்களுக்கு நிதியுதவி வழங்குவதே PMS-STன் நோக்கமாகும்.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2017-23 ஆண்டுகளில், 20 கல்வி நிறுவனங்களில் இருந்து மொத்தம் 64 பயனாளிகள் இடைநிறுத்தம் செய்திருந்தனர் மற்றும் அவர்களின் கல்விக் காலம் முடிவடையும் முன்னரே அவர்களுக்கு உதவித்தொகையாக ₹31.59 இலட்சம் வழங்கப்பட்டிருந்தது. மாநில அளவில், **இணைப்பு 2.2ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 2017-23ல் 2,013 பயனாளிகள் இடைநிறுத்தம் செய்திருந்தனர்.

தணிக்கை மூலம் வழங்கப்பட்ட தரவுகளை ஆய்வு செய்து, அதன் மீது துறை நடவடிக்கை மேற்கொள்ளும் என நிறைவுக் கூட்டத்தின் போது DADW கூறினார்.

இவ்வாறு, இடைநிறுத்தம் செய்த SC/ST மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் அதற்கான காரணங்கள் அரசால் கண்டறியப்படாதது, அம்மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டதன் நோக்கத்தையே முறியடித்தது.

**பரிந்துரை 4:**

**உயர்நிலைப் பள்ளி அளவில் இடைநிறுத்தம் செய்த மாணவர்களை அடையாளம் கண்டு, இடைநிறுத்தம் செய்ததற்கான காரணங்களை கண்டறிய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும், இம்மாணாவர்கள் உயர்கல்வியை தொடரும் பொருட்டு அவர்களை மீண்டும் கல்வியில் இணையும்படி ஊக்குவிக்கவும் அரசு போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.**

### 5.5 திட்டமிடல் மற்றும் நிதி மேலாண்மை

PMS-STயானது, மத்திய அரசின் பங்களிப்பான (CA) 75 விழுக்காடு மற்றும் மாநில அரசின் பங்களிப்பான 25 விழுக்காடு நிதியினைக் கொண்டு மாநில அரசுகளால் செயல்படுத்தப்படும் ஒரு CSS ஆகும். நிதி இருப்பு மற்றும் பொது நிதி விதிகளுக்கு மாநிலம் இணங்குவதன் பேரில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட தவணைகளில் மாநிலங்களுக்கு மத்திய உதவி வழங்கப்படும்.

#### 5.5.1 திட்டத்தில் மாணவர்களை சேர்த்தல் மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள்

2017-22 ஆண்டுகளில் வழங்கப்பட்ட உதவித்தொகைகளின் எண்ணிக்கை மற்றும் மேற்கொள்ளப்பட்ட செலவினம் **விளக்கப்படம் 5.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**விளக்கப்படம் 5..2: 2017-22ல் வழங்கப்பட்ட உதவித்தொகை மற்றும் செலவினம்**




(ஆதாரம்: 2021-25 ஆண்டுகளுக்கான வருடாந்திர செயல் திட்டம்)

### 5.5.2 2017-23 ஆண்டுகளின் வரவினம் மற்றும் செலவினம்

PMS-ST உதவித்தொகையின், 2017-23 ஆண்டுகளுக்கான நிதி இருப்பு மற்றும் வழங்கல் **அட்டவணை 5.3ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 5.3: 2017-23 ஆண்டுகளுக்கான வரவினம் மற்றும் செலவினம்**

**(₹ கோடியில்)**

| ஆண்டு | மொத்த செலவினம் | மத்திய/மாநில பங்கு | | வெளி-யிடப்பட்ட CA | CAன் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|
| | | மாநிலம் (25 விழுக்காடு) | மத்திய (75 விழுக்காடு) | | |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |
| 2017-18 | 38.70 | 9.68 | 29.03 | 24.40 | 16.12 |
| 2018-19 | 46.44 | 11.61 | 34.83 | 39.34 | 11.62 |
| 2019-20 | 54.52 | 13.63 | 40.89 | 50.25 | 2.26 |
| 2020-21 | 44.65 | 11.16 | 33.49 | 33.29 | 2.46 |
| 2021-22 | 33.41 | 8.35 | 25.06 | 22.83 | 2.23 |
| 2022-23 | 35.08 | 8.77 | 26.31 | 28.54 | 0 |

(ஆதாரம்: 2021-25 ஆண்டுகளுக்கான AAPகளில் இருந்து தொகுக்கப்பட்டது)

ஒவ்வொரு நிதியாண்டின் முடிவிலும் நிலுவையில் இருந்த CAன் ஒட்டுமொத்தப் பற்றாக்குறை, 2017-22 ஆண்டுகளில், ₹2.23 கோடி முதல் ₹16.12 கோடி வரை இருந்தது **அட்டவணை 5.3** லிருந்து தெரிய வருகிறது.

வருடாந்திர தேவைக் கோரிக்கை சரியான நேரத்தில் சமர்ப்பிக்கப்பட்டாலும், 2016-21 ஆண்டுகளுக்கான CA உரிய நேரத்தில் வழங்கப்படவில்லை என்று அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மாணவர்களுக்கு உரிய நேரத்தில் உதவித்தொகை வழங்கப்பட வேண்டிய நிலையில், மாநில அரசின் நிதியிலிருந்து உதவித்தொகை வழங்கப்பட்டது. மேலும் மாநில அரசால்

மேற்கொள்ளப்பட்ட இச்செலவினம், மத்திய அரசின் நிதி வழங்கப்பட்ட பின் அதில் சரிசெய்யப்பட்டது என்றும், 2022-23 முதல், மத்திய அரசின் நிதி வழங்கப்படுவதில் எவ்வித தாமதமோ அல்லது தடையோ இருக்கவில்லை எனவும் கூறப்பட்டது.

## 5.6 உதவித்தொகைக்கான விண்ணப்பம் மற்றும் சரிபார்ப்பு

திட்ட வழிகாட்டுதல்களின்படி, மாணவர்கள் விண்ணப்பப் படிவத்துடன் தேவையான ஆவணங்களை[8] இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும். ST சான்றிதழ், குடும்ப வருமானச் சான்றிதழ் மற்றும் மாற்றுத்திறனாளி சான்றிதழ் வழங்குவதற்கான நடைமுறை மற்றும் அத்தகைய சான்றிதழை வழங்குவதற்குத் தகுதியான அதிகாரியை அரசு குறிப்பிட வேண்டும்.

### 5.6.1 விண்ணப்பங்களைப் பல்வேறு நிலைகளில் செயலாக்கம் செய்ய கால வரம்பு இல்லாதது

இணையதளம், 2017-23 ஆண்டுகளில், தாமதமாகத் தொடங்கப்பட்டது. அதாவது, தொடர்புடைய AYன் டிசம்பர் மாதம் மற்றும் அதனைத் தொடர்ந்து வரும் ஜனவரி மாதங்களுக்கு இடையே இது தொடங்கப்பட்டது. இத்தாமதத்தால் **பத்தி 5.7.1ல்** குறிப்பிடப்பட்டுள்ளபடி, TWன் இயக்ககத்திலிருந்து உதவித்தொகைக்கான அனுமதி கிடைப்பதிலும், அதனைத் தொடர்ந்து மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படுவதிலும் தாமதம் ஏற்பட்டது.

பல்வேறு கல்வி மற்றும் பாடப் பிரிவுகளுக்கு வெவ்வேறு கல்வி காலெண்டர்கள்கள் பின்பற்றப்படுவதால், விண்ணப்பங்களைப் பெறவும் அவற்றைச் செயலாக்கவும் உறுதியான ஒரு காலக்கெடுவைப் பராமரிப்பதில் துறைக்கு சிரமம் ஏற்படுவதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). தகுதியுடைய அனைத்து விண்ணப்பங்களும், அதனதன் கல்வியாண்டிற்குள் செயலாக்கப்பட்டு வழங்கப்படுவதை துறை உறுதி செய்கிறது. மேலும், AD&TW உதவித்தொகை இணையதளம், 2022-23 முதல், ஒருங்கிணைந்த மாநில உதவித்தொகை இணையதளத்திற்கு மாறியுள்ளதாலும் உதவித்தொகை, DBT மூலம் வழங்கப்படும் பகிர்வு முறையின் கீழ் வந்துள்ளதாலும், காலக்கெடுக்கள் மத்திய அரசின் தேசிய உதவித்தொகை இணையதளத்தில் பொதுவாக அமைக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்பட்டது.

---

[8] (அ) ஆதார் எண், (ஆ) இருப்பிடச் சான்றிதழ், (இ) தேர்ச்சி பெற்ற அனைத்துத் தேர்வுகளுக்கும் சான்றிதழ்கள், டிப்ளமோ, பட்டம் போன்றவற்றின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல், (ஈ) கடைசியாகப் பெற்ற தகுதி மதிப்பெண்கள் (விழுக்காடு/CGPA/OGPA எனில், சமமான விழுக்காடு), (உ) மாநிலத்தின் உரிய அதிகாரியால் வழங்கப்பட்ட ST சான்றிதழ், (ஊ) குடும்ப வருமானச் சான்றிதழ், (எ) மாற்றுத்திறனாளி சான்றிதழ் மற்றும் (ஏ) பாஸ்போர்ட் அளவு புகைப்படத்தின் ஸ்கேன் செய்யப்பட்ட நகல்.

### 5.6.2 விண்ணப்பங்களின் போதிய ஆய்வு மற்றும் செயலாக்கம் இல்லாமை

உதவித்தொகை விண்ணப்பங்கள் TWன் இயக்ககத்தால் அனுமதிக்கப்படும் முன்னதாக, நிறுவன அளவில், மாவட்ட அளவில் (DADTWO) மற்றும் துறைகளின் நிர்வாக தலைவர்களால்[9] ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இருப்பினும், உதவித்தொகை விண்ணப்பங்களின் மீதான நேரடி ஆய்வு மற்றும் உதவித்தொகை தரவுகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தின:

- தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்/பள்ளிகளில் மேற்கொள்ளப்பட்ட 1,103 விண்ணப்பங்களின் மீதான ஆய்வு, 333 விண்ணப்பங்களில்[10] (30 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை என்பதை வெளிப்படுத்தியது.
- துறையால் பராமரிக்கப்பட்ட பயனாளிகளின் தரவுத்தளத்தை மற்ற பல்வேறு தரவுத்தளங்களுடன்[11] ஒப்பீடு செய்ததில், 401 ST மாணவர்களின் பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்தது, இதன் விளைவாக, 2017-23ல் அனுமதியற்ற தொகையாக ₹62.18 இலட்சம் செலுத்தப்பட்டது **(இணைப்பு 2.4).** தெரிவு செய்யப்பட்ட மூன்று[12] மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று கல்வி நிறுவனங்களில், பெற்றோரின் வருமானம் ₹2.50 இலட்சத்திற்கும் அதிகமாக இருந்த ஏழு மாணவர்களுக்கு, 2017-23 காலகட்டத்தில், ₹3.30 இலட்சம் வழங்கப்பட்டது.

திட்ட வழிகாட்டுதல்களில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, உரிய அதிகாரி/துறைகளால் வழங்கப்படும் தரவு/சான்றிதழ்களையே துறை சார்ந்திருக்க வேண்டியுள்ளதாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). 2022-23ஆம் ஆண்டிலிருந்து, ஆன்லைன் சாதி/வருமானச் சான்றிதழ்கள் கட்டாயமாக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் வருவாய்த் துறை இணையதளத்தில் இருந்து தரவைப் பெறுவதன் மூலம் உதவித்தொகை இணையதளத்தில் அவை தானாகவே சரிபார்க்கப்படுவதாகவும் கூறியது.

---

9 கல்லூரிக் கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் போன்றோர்.

10 வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் முறையே 317 மற்றும் 295 விண்ணப்பங்களில் இணைக்கப்படவில்லை. விண்ணப்பங்களின் நகல்களை சரிசெய்த பிறகு தகுதியற்ற விண்ணப்பங்களின் மொத்த எண்ணிக்கை அடையப்பட்டது.

11 பயனாளிகளின் பெற்றோரின் வருமான வரி அறிக்கை, தமிழ்நாடு PAG (A&E)யிடமிருந்து பெறப்பட்ட ஓய்வூதிய தரவுகள், TNeGAயிலிருந்து பெறப்பட்ட வருமானச் சான்றிதழ் தரவு. மற்றும் பள்ளிக் கல்வித் துறையின் EMIS தரவுத்தளம் போன்றவை.

12 சென்னை, ஈரோடு மற்றும் திருநெல்வேலி.

**பரிந்துரை 5:**

**தகுதியுள்ள SC/ST மாணவர்களுக்கு மட்டுமே கல்வி உதவித்தொகை வழங்கப்படுவதை உறுதிசெய்ய அதற்கான விண்ணப்பங்களை அரசு ஆராய வேண்டும். மேலும், இம்மாணவர்களுக்கான தகுதிச் சான்றிதழ்கள், தணிக்கை நோக்கங்களுக்காக குறிப்பிட்ட காலம் வரை வைத்திருக்க வேண்டும்.**

## 5.7 உதவித்தொகையின் வழங்குகை

திட்ட வழிகாட்டுதல்களின்படி, உதவித்தொகையானது ஏப்ரல் 01 அல்லது கல்வி நிறுவனத்தில் சேரும் மாதம், இவற்றுள் எது பிந்தையதோ, அது முதல் அந்த கல்வியாண்டில் தேர்வுகள் முடிந்த மாதம் வரை, செலுத்தப்படலாம், கல்வி தொடரப்படும் போது, முந்தைய ஆண்டில் வழங்கப்பட்ட உதவித்தொகை புதுப்பிக்கப்பட்டால், முந்தைய ஆண்டில் உதவித்தொகை வழங்கப்பட்ட இறுதி மாதத்தைத் தொடர்ந்து வரும் மாதத்திலிருந்து இது செலுத்தப்படும்.

### 5.7.1 உதவித்தொகை வழங்கப்படுதலில் தாமதம்

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், **இணைப்பு 4.1ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, தேர்ந்தெடுக்கப்பட்ட 36 கல்வி நிறுவனங்களின் 633 நேர்வுகளில், ₹3.67 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்பட்டதில் தாமதம் காணப்பட்டது. மாநில அளவில், PMS-ST உதவித்தொகை தரவுத்தளத்தின் மீதான தணிக்கை பகுப்பாய்வு, 2017-22 ஆண்டுகளில், 56,854 நேர்வுகளில், ₹118.67 கோடி உதவித்தொகை தாமதமாகச் செலுத்தப்பட்டதை வெளிப்படுத்தியது **(இணைப்பு 4.1).**

திட்டத்தை இணைக்கவும் மத்திய மற்றும் மாநிலப் பங்குகளுக்கான கணக்குத் தலைப்பை உருவாக்கவும் எடுத்துக் கொள்ளப்பட்ட காலம் காரணமாக உதவித்தொகை செலுத்துவதில் தாமதம் ஏற்பட்டது என அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும், தற்போதைய நிலவரப்படி, உதவித்தொகை வழங்கப்படுவதில் தாமதம் ஏதும் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

### 5.7.2 பயனாளிகளின் தவறான வங்கிக் கணக்கு விவரங்கள் காரணமாக வழங்கப்படாத உதவித்தொகை

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில், **இணைப்பு 2.6ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 2017-23 ஆண்டுகளில், 32 கல்வி நிறுவனங்களில் இருந்த 308 மாணவர்களின் வங்கிக் கணக்குகளில், ₹26.72 இலட்சம் செலுத்தப்படவில்லை எனத் தணிக்கை கண்டது. இவற்றுள், 2017-19 ஆண்டுகளில், ஒரு கல்வி நிறுவனத்தைச் சார்ந்த ஐந்து மாணவர்கள் தொடர்பான ₹26,202 அரசு கணக்கிற்கு திருப்பி செலுத்தப்பட்டது.

2020-23[13] ஆண்டுகளில், மொத்தம் 789 திருப்பி அனுப்பப்பட்ட நேர்வுகள் மற்றும் ₹32.03 இலட்சம் வழங்கப்படாத உதவித்தொகையும் இருந்ததாக அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும், 2020-21ல் உதவித்தொகையின் வழங்கல் IFHRMS மூலம் மேற்கொள்ளப்பட்டதால், அந்த ஆண்டின் மீத இருப்புத்தொகை தன்னியக்கமாகவே அரசிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் கூறப்பட்டது.

### 5.7.3 அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தவறான தரவுகளால் தகுதியான மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படவில்லை

SC/ST/SCC மாணவர்களின் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைக்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் செயல்முறை **பத்தி 3.7.3ல்** தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

PMS-ST உதவித்தொகை தரவுத்தளத்தின் மீதான ஆய்வு, 2017-22 ஆண்டுகளில், CoEயின் தரவுகளில் பெயர் இல்லாத காரணத்தைச் சுட்டிக்காட்டி, DoTE, 162 ST மாணவர்களின் உதவித்தொகை கோரிக்கைகளை நிராகரித்ததை வெளிப்படுத்தியது. இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் இதுபோன்ற நேர்வுகளின் சோதனைச் சரிபார்ப்பில், CoE பதிவேட்டில் காணப்படாத மாணவர்களின் பெயர்கள் தேர்வு எழுதிய மாணவர்களின் பெயர்களைக் கொண்டிருக்கும் நிறுவன பதிவேட்டில் இருந்தது தெரியவந்தது. இதன் விளைவாக CoEன் தவறான தரவுத்தளம், அதனைத் தொடர்ந்து DoTEன் நிராகரிப்பு ஆகியவற்றால் 162 மாணவர்களுக்கு ₹1.12 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவில்லை.

தெரிவு செய்யப்பட்ட மூன்று மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று கல்வி நிறுவனங்களைச் சார்ந்த நான்கு மாணவர்களுக்கு உதவித்தொகை ₹3.10 இலட்சம் உரிய நேரத்தில் அனுமதிக்கப்படவில்லை.

அந்தந்த துறைத் தலைவரின் உரிய சரிபார்ப்பிற்குப் பிறகு, துறை மாணவர்களுக்கு உரிய உதவித்தொகையை வழங்குகிறது என்று அரசு பதிலளித்தது (ஜூன் 2024). எனவே, தேர்வுக் கட்டுப்பாட்டாளார் தரவுத்தளத்தின் அடிப்படையில், தொழில்நுட்பக் கல்வியின் இயக்குநரகத்தால் முதலில் நிராகரிக்கப்பட்ட உதவித்தொகை கோரிக்கைகள் தொடர்பான ஆவணங்களை கல்வி நிறுவனம் மீண்டும் சமர்ப்பிக்கிறது. அவற்றின் சரிபார்ப்பிற்குப் பிறகு, DoTE மறு ஒப்புதல் வழங்கி, மாணவர்களுக்கு உதவித்தொகை நேரடியாக வழங்கப்பட துறைக்குப் பரிந்துரைத்துள்ளார்.

இருப்பினும், DoTEஆல் உதவித்தொகைக்கான மறு அனுமதி வழங்கப்பட்ட பிறகு, உதவித்தொகை வழங்கப்பட்டதற்கான கால தாமதத்தை (அதே AYல்

[13] 2020-21: 738 நேர்வுகள்/₹28.12 இலட்சம்; 2021-22: 18 நேர்வுகள்/₹1.90 இலட்சம் மற்றும் 2022-23: 33 நேர்வுகள் /₹2.01 இலட்சம்.

அல்லது தொடர்ந்து வரும் AYல் வழங்கப்பட்டதா) என்பதை தணிக்கையால் சரிபார்க்க இயலவில்லை.

**பரிந்துரை 6:**

**அந்தந்த கல்வியாண்டிலேயே பயனாளிகளுக்கு உதவித்தொகை உரிய நேரத்தில் இயக்குநரகங்களால் வழங்கப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும். மேலும், இவை வழங்கப்படுவதற்கான முழு செயல்முறையும் விரைவில் ஆதார் அடிப்படை முறையில் மாற்றப்படுவதை அரசு உறுதி செய்ய வேண்டும்.**

## 5.8 தகுதியற்ற/அதிகப்படியான உதவித்தொகை செலுத்தம்

### 5.8.1 ST மாணவர்களுக்கு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை இருமுறை செலுத்தப்படுதல்

AD&TW துறையின் உதவித்தொகை தரவானது, 2021-22 வரை தேசிய தகவல் மையத்தால் (NIC) பராமரிக்கப்பட்டது மற்றும் 2022-23ஆம் ஆண்டு முதல் TNeGA ஆல் பராமரிக்கப்படுகிறது. TNeGAஆல் பராமரிக்கப்பட்ட 2022-23ஆம் ஆண்டின் தரவுகளின் மீதான ஆய்வில், கல்விக் கட்டணம் இருமுறை செலுத்தப்பட்டிருந்ததை தணிக்கை கவனித்தது. 253 மாணவர்களுக்கான இக்கல்விக் கட்டணம் செலுத்தப்பட, 99 கல்வி நிறுவனங்களுக்கு 01 ஆகஸ்ட் 2023 அன்று அனுமதி வழங்கப்பட்டிருந்தது. இதன் விளைவாக இரட்டைக் கல்விக் கட்டணமாக ₹99,99,750 வழங்கப்பட நேரிட்டது.

தொழில்நுட்பப் பிழை காரணமாக இருமுறை கட்டண செலுத்தம் செய்யப்பட்டதாகவும் மற்றும் கட்டண செலுத்த அறிக்கை தயாரிக்கப்பட்டு, 01 ஆகஸ்ட் 2023 அன்று பணம் செலுத்தப்பட்டது என்றும் அரசு பதிலளித்தது (ஜூன் 2024). இப்பிழையானது 04 ஆகஸ்ட் 2023 அன்று கண்டறியப்பட்டு, அது சரிசெய்யப்படும் பொருட்டு மாநில PFMSக்கு அஞ்சல் அனுப்பப்பட்டுள்ளதாகவும் கூறப்பட்டது. மேலும், 95 கல்வி நிறுவனங்கள் இந்தத் தொகையை SNA கணக்கில் செலுத்தியுள்ளதாகவும், மீதமுள்ள நான்கு நிறுவனங்கள் விரைவில் செலுத்தும் எனவும் கூறப்பட்டது.

## 5.9 ஒன்றுக்கு மேற்பட்ட உதவித்தொகை பெற்ற மாணவர்கள்

PMS-SC வழிகாட்டுதல்களின்படி[14], உதவித்தொகை பெறும் ஒரு மாணவர் வேறு எந்தவொரு கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகையை பெறுதல் கூடாது. வேறு ஏதேனும் கல்வி உதவித்தொகை/பயிற்சி உதவித்தொகையைப் பெற்றிருந்தால் மாணவர் அவ்விரண்டு உதவித்தொகைகளில் எது பயன்மிக்கதோ அதனைப் பெற்று, அதனை கல்வி நிறுவனத் தலைவர் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.

[14] PMS-ST வழிகாட்டுதல்கள், 2010ன் பத்தி III (xii).

### 5.9.1 PMS-ST மற்றும் முதல் பட்டதாரி கட்டணச் சலுகையைப் பெறுதல்

DADWOகளில் உதவித்தொகை பதிவுகள் மற்றும் தொடர்புடைய பிற கோப்புகளின் மீது ஆய்வு மேற்கொள்ளப்பட்டது, இது, இரண்டு[15] கல்வி நிறுவனங்களில் இருந்த 35 ST மாணவர்கள், ₹7.11 இலட்சம் மதிப்புள்ள முதல் தலைமுறை பட்டதாரி கல்விக் கட்டணச் சலுகை[16] (FGG சலுகை) மற்றும் ₹5.47 இலட்சம் மதிப்புள்ள PMS- ST உதவித்தொகை ஆகிய இரண்டு சலுகைகளைப் பெற்றிருந்ததை வெளிப்படுத்தியது.

முதல் பட்டதாரி கட்டணச் சலுகைத் திட்டம் உயர்கல்வித் துறையால் செயல்படுத்தப்பட்டு சரிபார்க்கப்படுகிறது என்று அரசு பதிலளித்தது (ஜுன் 2024). பல்வேறு துறைகளால் செயல்படுத்தப்படும் அனைத்து உதவித்தொகை திட்டங்களையும் ஒரே இணையதளத்தில் செயலாக்கவும், மாணவர்கள் பல உதவித்தொகைகளைப் பெறுவதை தவிர்க்கும் பொருட்டும், தமிழ்நாடு மாநில உதவித்தொகை இணையதளம் தற்போது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. மாணவர்கள் பல உதவித்தொகைகளைப் பெறும்பட்சத்தில், ஏதேனும் ஒரு உதவித்தொகை மாணவரிடமிருந்து ரத்துசெய்யப்பட நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

### 5.9.2 PMS-ST மற்றும் Ph.D. ஊக்கத்தொகை பெறுதல்

SC/ST/SCCயைச் சேர்ந்த முழுநேர Ph.D. ஆய்வாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான திட்டத்தின் நோக்கங்கள் ஏற்கனவே **பத்தி 3.9.3**ல் கூறப்பட்டுள்ளன.

Ph.D. வல்லுநர்களுக்கு, 2017-21 ஆண்டுகளில் வழங்கப்பட்ட ஊக்கத்தொகையளிப்பு குறித்த பதிவுகளின் மீதாக ADWன் இயக்ககத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு, எட்டு மாணவர்கள் Ph.D.க்கான ஊக்கத்தொகை மற்றும் PMS - ST ஆகிய இரண்டையும் பெற்றிருந்ததை வெளிப்படுத்தியது **(இணைப்பு 3.2)**.

இரட்டை வழங்குதல்கள் (duplication) கவனிக்கப்பட்டு மீட்பு உத்தரவுகள் வழங்கப்பட்டன என்றும் அதனைத் தொடர்ந்து முழுப் பட்டியலில் இருந்தும் நகல்கள் நீக்கப்பட்டதாகவும் அரசு பதிலளித்தது (ஜுன் 2024). திட்டம் மறுபரிசீலனை செய்யப்படும் என்று நிறைவுக் கூட்டத்தின் போது உறுதியளிக்கப்பட்டது.

---

15 (i) PSG தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (ii) தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை.

16 மாநிலத்தில் உள்ள பொறியியல் கல்லூரிகளில் ஒற்றைச் சாளர கலந்தாய்வின் மூலம் சேர்க்கப்படும் 'முதல் தலைமுறை பட்டதாரி' மாணவர்களுக்காக, 2010-11ஆம் ஆண்டு முதல் உயர்கல்வித் துறையால் செயல்படுத்தப்படும் ஒரு மாநில நிதியுதவித் திட்டம்,

**பரிந்துரை 7:**

**உரிய உதவித்தொகை வழங்குவதற்கான செயல்முறையை ஒவ்வொரு கட்டத்திலும் சரிபார்க்கும் பொருட்டு, இவ்வமைப்பிலுள்ள இடைவெளிகளை அரசு சரிசெய்ய வேண்டும். கூடுதலாக செலுத்தப்பட்ட தொகையும் மாணவர்களிடம் இருந்து விரைவில் வசூலிக்கப்பட வேண்டும்.**

# பிரிவு - இ

# மாநில நிதியுதவி பெறும் கல்வி உதவித்தொகை திட்டங்கள்

# அத்தியாயம் VI

# மாநில நிதியுதவி திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களின் அமலாக்கம்

# அத்தியாயம் VI

## மாநில நிதியுதவி திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகை திட்டங்களின் அமலாக்கம்

**மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் கல்வி உதவித்தொகை திட்டம்:** தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில், 261 விண்ணப்பங்களில் (17 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை. பெற்றோரின் வருமானம் ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கும் மேற்பட்ட 731 கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் (Adi Dravidar converted to Christianity - SCC) மாணவர்களுக்கு அனுமதியற்ற தொகையாக ₹1.67 கோடி வழங்கப்பட்டது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், தேர்ந்தெடுக்கப்பட்ட 32 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 355 மாணவர்களின் வங்கிக் கணக்கு விவரங்கள் தவறாக இருந்ததன் காரணமாக, ₹14.32 இலட்சம் செலுத்தப்படவில்லை. CoEஆல் வழங்கப்பட்ட தவறான தரவுகள் காரணமாக, 2017-22 ஆண்டுகளில், 609 மாணவர்களுக்கு உதவித்தொகையாக ₹3.80 கோடி வழங்கப்படவில்லை. மத்திய நிதியுதவிக்குத் தகுதியற்ற 2,576 SCC மாணவர்களுக்கு, 2021-23 ஆண்டுகளில். மத்திய அரசின் பங்கான 60 விழுக்காடு உதவித்தொகை வழங்கப்பட்டது, இதன் விளைவாக ₹3.64 கோடி தவறாக செலுத்தப்பட நேரிட்டது. 2019-20 ஆம் ஆண்டில் சிறுபான்மையினர் உதவித்தொகை மற்றும் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை ஆகிய இரண்டையும் 62 மாணவர்கள் பெற்றிருந்தனர்.

தெரிவு செய்யப்பட்ட அரசு உதவி பெறும் மூன்று கல்லூரிகள்/கல்வி நிறுவனங்களில், சுயநிதி பிரிவுகளில் பயின்று வந்த 232 விடுதி மாணவர்களுக்கு உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை அனுமதிக்கப்பட்டது. இதன் விளைவாக ₹18.56 இலட்சம் முறையற்று செலுத்தப்பட்டிருந்தது.

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில், 2017-23 காலகட்டத்தில், 67 சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளைச் சார்ந்த 513 மாணவர்களிடமிருந்து அதிக கல்வி கட்டணமாக ₹1.97 கோடி கோரப்பட்டிருந்தது.

பதினொன்று Ph.D. அறிஞர்கள் முனைவர் பட்டத்திற்கான ஊக்கத்தொகை மற்றும் PMS-SCC ஆகிய இரண்டையும் பெற்றிருந்தனர். இதன் விளைவாக ₹2.06 இலட்சம் அதிகமாக வழங்கப்பட நேரிட்டது.

அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வகுப்பு III முதல் VIII வரை படிக்கும் SC/ST பிரிவைச் சேர்ந்த 22 விழுக்காடு மாணவியர்கள், 2018-23 ஆண்டுகளில், சிறப்பு ஊக்கத்தொகையைப் பெறவில்லை.

## 6.1 முன்னுரை

ஆதி திராவிடர் (SC)/ பழங்குடியினர்கள் (ST)/ கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் (SCC) மாணவர்களின் கல்வியறிவு விகிதம் மற்றும் கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக, AD&TW துறை மத்திய நிதியுதவித் திட்டங்களோடு பல்வேறு உதவித்தொகை திட்டங்களையும் செயல்படுத்துகிறது.

தெரிவு செய்யப்பட்ட சில மாநில கல்வி உதவித்தொகை திட்டங்கள் மற்றும் ஊக்கத்தொகையளிப்பின் மீதான தணிக்கை முடிவுகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. இத்திட்டங்களில், 2017-23 காலக்கட்டத்தில் காணப்பட்ட வளர்ச்சி மற்றும் நிதி விவரங்கள் **அட்டவணை 6.1லும்**, ஆண்டு வாரியான விவரங்கள் **இணைப்பு 6.1லும்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.1: 2017-23 காலகட்டத்தில் மாநில நிதியுதவி பெறும் உதவித்தொகை திட்டங்களின் வளர்ச்சி மற்றும் நிதி விவரங்கள்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பயனாளிகளின் எண்ணிக்கை | செலவினம் (₹ கோடியில்) |
|---|---|---|---|
| 1 | மாநில அரசின் சிறப்பு PMS திட்டம் | 1,70,883 | 507.11 |
| 2 | உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம் | 97,061 | 74.10 |
| 3 | சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளில் VI மற்றும் XIஆம் வகுப்புகளில் மாணவர்களின் சேர்க்கை | 12,091 | 60.20 |
| 4 | முழுநேர Ph.D வல்லுநர்களுக்கான ஊக்கத்தொகை | 7,598 | 52.91 |
| 5 | மாணவிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை திட்டம் | 27,18,574 | 257.55 |

(ஆதாரம்: AD & TW துறையின் செயலாக்க வரவு செலவு திட்டங்கள் 2022-23, 2023-24 மற்றும் 2024-25)

## 6.2 மாநில அரசின் சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்

மத்திய நிதியுதவித் திட்டமான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டங்களின் பலனை பெறத் தகுதியற்ற SC/ST/SCC மாணவர்கள் பயன்பெறும் வகையில், அரசு உதவி பெறும் மற்றும் சுயநிதி கல்வி நிறுவனங்களில் (சிறுபான்மையினர் நிறுவனங்கள் உட்பட) கல்வி கற்கும் அம்மாணவர்களுக்கு அரசு ‘சிறப்பு போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டத்தை’ (PMS-SCC திட்டம்) அறிமுகப்படுத்தியது[1]. இதனை செயல்படுத்தும்படி அரசு, செப்டம்பர் 2012ல் விரிவான வழிகாட்டுதல்களை[2] வெளியிட்டது. SPMS திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

---

1 9 ஜனவரி 2012 மற்றும் 25 ஜூன் 2012 தேதியிடப்பட்ட AD & TW துறையின் G.O. (Ms). எண்கள் முறையே 6 & 63.

2 11 செப்டம்பர் 2012 தேதியிடப்பட்ட AD & TW துறையின் G.O. (Ms). எண். 92

**அட்டவணை 6.2: சிறப்பு PMSன் முக்கிய அம்சங்கள்**

| | |
|---|---|
| பயனாளிகள் | • மத்திய PMS உதவித்தொகை பெறுவதற்கான விதிமுறைகளை பூர்த்தி செய்யத் தவறிய SC/ST/SCC மாணவர்கள். |
| மாணவரின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் | • ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்[3].<br>• மாநில அரசு ஊழியர்களுக்கு, அகவிலைப்படியைத் தவிர்த்து ஆண்டு வருமானம் கணக்கிடப்படுகிறது. |
| உதவித்தொகைப் பணம் | • அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளின் இலவச மற்றும் கட்டண இடங்களுக்கு எதிராக அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனங்களால் விதிக்கப்படும் அனைத்து தவிர்க்கவியலாத மற்றும் திரும்பப்பெற முடியாத கட்டணங்களும்[4] உரிய அதிகாரியால் அங்கீகரிக்கப்பட்ட கட்டணக் கட்டமைப்பின்படி முழுமையாக திருப்பிச் செலுத்தப்படும். |
| இரட்டை உதவித்தொகை | • பயனாளி வேறு எந்த உதவித்தொகை/பயிற்சிக்கால உதவித்தொகையையும்[5] பெறுதல் கூடாது. |

### 6.2.1 உதவித்தொகை விண்ணப்பங்களின் போதிய ஆய்வின்மை

உதவித்தொகை விண்ணப்பங்கள், ADWன் இயக்ககத்தால் அனுமதிக்கப்படுமுன், நிறுவன மற்றும் மாவட்ட அளவிலும் (DADTWO), துறைகளின் நிர்வாகத் தலைவர்களால்[6] ஆய்வுக்கு உட்படுத்தப்படும். இருப்பினும், உதவித்தொகை விண்ணப்பங்களின் மீதான நேரடி ஆய்வு மற்றும் உதவித்தொகை தரவுகளின் பகுப்பாய்வு பின்வருவனவற்றை வெளிப்படுத்தியது:

- தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்கள்/பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட 1,541 விண்ணப்பங்களை ஆய்வு செய்ததில், 261 விண்ணப்பங்களில்[7] (17 விழுக்காடு) வருமானம்/சாதிச் சான்றிதழ்கள் இணைக்கப்படவில்லை என்பது தெரியவந்தது.
- PMS-SCC உதவித்தொகை பெறும் பயனாளிகள் குறித்த துறையின் தரவுத்தளத்தை பல்வேறு தரவுத்தளங்களுடன்[8] ஒப்பிடுகையில், 731 SCC மாணவர்களின் பெற்றோரது வருமானம் ஆண்டுக்கு ₹2.50 இலட்சத்திற்கும் மேலாக இருந்தது காணப்பட்டது. இதன் விளைவாக, 2017-22 ஆண்டுகளில் அனுமதியற்ற தொகையாக ₹1.67 கோடி செலுத்தப்பட்டது **(இணைப்பு 2.4)**.

[3] 2018-19 வரை: ₹2 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.
[4] சேர்த்தல்/பதிவு, கல்வி, விளையாட்டுகள், சங்கம், நூலகம், பத்திரிகை, மருத்துவ பரிசோதனை மற்றும் கல்வி நிறுவனம் அல்லது பல்கலைக்கழகம்/வாரியத்திற்கு மாணவரால் கட்டாயமாகச் செலுத்தப்பட வேண்டிய பிற கட்டணம்.
[5] ஒரு மாணவருக்கு வேறு ஏதேனும் உதவித்தொகை/பயிற்சிக்கால உதவித்தொகை வழங்கப்பட்டால், மாணவர், அதிக நன்மை பயக்கும் ஏதேனும் ஒன்றைத் தெரிவு செய்து, அதனை கல்வி நிறுவனத் தலைவர் மூலம் உதவித்தொகை வழங்கும் அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும்.
[6] கல்லூரிக் கல்வி இயக்குநர், தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், மருத்துவக் கல்வி இயக்குநர் போன்றவர்கள்.
[7] வருமானம் மற்றும் சாதிச் சான்றிதழ்கள் முறையே 244 மற்றும் 228 விண்ணப்பங்களில் இணைக்கப்படவில்லை. மேற்கவிவு விண்ணப்பங்களை (overlapping applications) தவிர்த்த பிறகு 261 தகுதியற்ற விண்ணப்பங்கள் இருந்தது கணக்கிடப்பட்டது.
[8] தமிழ்நாடு PAG (A&E) அலுவலகத்திலிருந்து ஓய்வூதியத் தரவு மற்றும் TNeGAயிலிருந்து வருமானச் சான்றிதழ் தரவு பெறப்பட்டது.

தகுதியற்ற மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்பட்டுள்ளதா என்பதைச் சரிபார்க்க, தணிக்கை மூலம் வழங்கப்பட்ட தரவை ஆய்வு செய்து, அவ்வாறு வழங்கப்பட்ட தொகையை அரசு கணக்கிற்கு திரும்பப் பெற, தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என அரசு பதிலளித்தது (ஜூலை 2024).

### 6.2.2 பயனாளிகளின் தவறான வங்கிக் கணக்கு விவரங்கள் காரணமாக வழங்கப்படாத உதவித்தொகை

தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 32 கல்வி நிறுவனங்களில், பல்வேறு காரணங்களால்[9] 355 மாணவர்களின் வங்கிக் கணக்கில் உதவித்தொகையாக ₹14.32 இலட்சம் செலுத்தப்படவில்லை. இதில், தெரிவு செய்யப்பட்ட 11 கல்வி நிறுவனங்களின் 36 மாணவர்களின், 2017-20 ஆண்டுகள் தொடர்பான ₹0.89 இலட்சம் அரசுக்கு திருப்பி அனுப்பப்பட்டது.

ஜூன் 2024 நிலவரப்படி, ₹4.01 கோடி மதிப்பிலான 9,920 திருப்பி அனுப்பப்பட்ட நேர்வுகள், மீண்டும் செயலாக்கப்படாமல் நிலுவையில் இருந்தன. Pre MS-SC, PMS-SC மற்றும் PMS-SCC திட்டங்களில் திருப்பி அனுப்பப்பட்ட நேர்வுகள் தொடர்பான தமிழ்நாடு அரசின் விரிவான பதில் (ஜூலை 2024) **பத்தி 2.6.2ல்** கொடுக்கப்பட்டுள்ளது.

நிறைவுக் கூட்டத்தின் போது, உதவித்தொகை செலுத்தம் முழுவதுமாக ஆதார் அடிப்படையிலாகும் போது, மேற்கூறப்பட்ட சிக்கல்கள் சரிசெய்யப்படும் என்று DADW கூறினார்.

### 6.2.3 அண்ணா பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டாளரின் தவறான தரவுகளால் தகுதியான மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படவில்லை

SC/ST/SCC மாணவர்களின் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகைக்கான விண்ணப்பங்களை அனுமதிக்கும் செயல்முறை **பத்தி 3.7.3ல்** விளக்கப்பட்டுள்ளது. துறையின் PMS-SCC உதவித்தொகை தரவுத்தளத்தின் மீதான ஆய்வு, 2017-22 ஆண்டுகளில் 609 SCC மாணவர்களின் பெயர்கள் CoEன் தரவுகளில் காணப்படவில்லை என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி அவர்களின் உதவித்தொகைக்கான கோரிக்கைகளை DoTE நிராகரித்ததை வெளிப்படுத்தியது. இருப்பினும், தெரிவு செய்யப்பட்ட கல்வி நிறுவனங்களில் மேற்கொள்ளப்பட்ட சோதனை ஆய்வில், COE பதிவேட்டில் காணப்படாத மாணவர்களின் பெயர்கள், தேர்வு எழுதிய மாணவர்களின் பெயர்களைக் கொண்ட நிறுவன பதிவேட்டில் இருந்தது வெளியானது. இதன் விளைவாக, CoEன் தவறான தரவுத்தளம் மற்றும் அதன் காரணமாக DoTEன் நிராகரிப்பு ஆகியவற்றால், 609 மாணவர்களுக்கு ₹3.80 கோடி மதிப்பிலான உதவித்தொகை வழங்கப்படவில்லை. இவற்றுள், தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில்

---

[9] முடக்கப்பட்ட அல்லது தடையிடப்பட்ட கணக்கு, முடிக்கப்பட்ட அல்லது மாற்றப்பட்ட கணக்கு, வழக்கின் கீழிருந்த கணக்கு, செல்லாத கணக்கு, பயன்பாடற்ற கணக்கு, இதர வகை, இது போன்ற கணக்கு இல்லை போன்றவை.

தேர்ந்தெடுக்கப்பட்ட 20 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 53 மாணவர்களுக்கு ₹34.96 இலட்சம் வழங்கப்படவில்லை.

DoTEஆல், 2017-20 ஆண்டுகளில் உதவித்தொகை வழங்குமாறு மறு அனுமதி அளிக்கப்பட்ட மாணவர்களுக்கு, துறை உதவித்தொகை வழங்கியிருப்பதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2024). நிராகரிக்கப்பட்ட மாணவர்கள் குறித்த விவரங்களை சரிபார்க்கவும், 2018-21 ஆண்டுகளுக்கான கல்வி உதவித்தொகையை தகுதியுள்ள மாணவர்களுக்கு மீண்டும் அனுமதிக்கவும் DoTEயிடம் கேட்டுக் கொள்ளப்பட்டதாக (நவம்பர் 2021) மேலும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இருப்பினும், உதவித்தொகை வழங்குவதற்கான மறு அனுமதி DoTEஆல் அளிக்கப்பட்டபின், உதவித்தொகை வழங்கப்பட்டதில் இருந்த கால தாமதத்தை (அதே ஆண்டு அல்லது அடுத்த AYல் வழங்கப்பட்டதா) தணிக்கையால் சரிபார்க்க இயலவில்லை.

### 6.2.4 PMS-SCC மாணவர்களுக்கு PMS-SCன் மத்திய பங்கு வழங்கப்படல்

PMS-SCC ஒரு மாநிலத் திட்டமாக இருப்பதால், முழு உதவித்தொகையும் மாநில நிதியிலிருந்து செலுத்தப்பட வேண்டும். இருப்பினும், துறையின் 2021-23 ஆண்டுகளுக்கான PMS-SCC தரவுகளை ஆய்வு செய்ததில், மத்திய நிதியைப் பெறத் தகுதியில்லாத 2,576 SCC மாணவர்களுக்கு, PMS-SC திட்டத்தின் மத்திய பங்கான 60 விழுக்காடு உதவித்தொகை வழங்கப்பட்டிருந்தது தெரிய வந்தது. இது, ₹3.64 கோடி[10] தவறான முறையில் செலுத்தப்பட வழிவகுத்தது. இதில், தெரிவு செய்யப்பட்ட 25 கல்வி நிறுவனங்களின் 106 SCC மாணவர்கள் மத்தியப் பங்கான ₹25.74 இலட்சத்தை அதிகமாகப் பெற்றிருந்தனர்.

அரசு, உதவித்தொகை முழுவதையும் SCC மாணவர்களுக்கு செலுத்துவதற்கு பதிலாக, 40 விழுக்காடு மட்டுமே செலுத்தி, மீதமுள்ள 60 விழுக்காட்டினை செலுத்த பயனாளிகளின் பட்டியலை PMS-SC/ST பயனாளிகளின் பட்டியல் அனுப்புவதைப் போல் மத்திய அரசுக்கு அனுப்பியிருந்ததை தணிக்கை கவனித்தது.

தவறான செலுத்தம் ஏதேனும் மேற்கொள்ளப்பட்டிருந்தால், அத்தொகையை மத்திய அரசின் கணக்கில் செலுத்த தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு பதிலளித்தது (ஜூன் 2024).

இருப்பினும், PMS-SCC வழிகாட்டுதல்களின் குறைபாடு மற்றும் மீறலுக்கு பொறுப்பான அதிகாரிகள் மீது பொறுப்பு நிர்ணயிக்கப்பட வேண்டும் எனவும், 2021-23 ஆம் ஆண்டில், PMS-SC/ST பயனாளிகளுக்கு உதவித்தொகை வழங்கியதில் மேற்கூறப்பட்டவற்றின் தாக்கம் ஏதேனும் இருந்தால், அவை ஆய்வு செய்யப்படவும் தணிக்கை கருத்துரைக்கிறது.

[10] தவறாக செலுத்தப்பட்ட மத்திய பங்கு : 2021-22: 43 மாணவர்களுக்கு ₹10.23 இலட்சம்; 2022-23: 2,533 மாணவர்களுக்கு ₹354.16 இலட்சம்.

### 6.2.5 அரசு உத்தரவுக்கு இணங்காததால் அரசிற்கு ஏற்பட்ட அனுமதியற்ற தொடர் செலவினம்

அங்கீகரிக்கப்பட்ட சுயநிதி கல்வி நிறுவனங்களால் SC/ST/SCC மாணவர்கள் மீது விதிக்கப்படும் அனைத்து தவிர்க்கவியலாத மற்றும் திரும்பப்பெற இயலாத கட்டண செலுத்தங்களின் செயல்முறைக்கான அரசின் உத்தரவுகள் **பத்தி 3.8.4ல்** விளக்கப்பட்டுள்ளன.

துறையின் 2021-23 ஆண்டுகளுக்கான PMS-SCC தரவுகளை ஆய்வு செய்ததில், 195 சுயநிதி கல்வி நிறுவனங்கள், நிர்வாக ஒதுக்கீட்டின் கீழ் 485 மாணவர்களுக்கு அனுமதி வழங்கி, ஒவ்வொரு மாணவருக்கும் கல்விக் கட்டணமாக ₹55,000க்கும் அதிகமாகப் பெற்றிருந்தது. இதனால், ₹1.65 கோடி தவறான கல்வி கட்டணமாக வழங்கப்பட நேரிட்டது. 485 பயனாளிகளுள் தெரிவு செய்யப்பட்ட 12 கல்வி நிறுவனங்களைச் சார்ந்த 57 மாணவர்களுக்கு ₹52.70 இலட்சம் வழங்கப்பட்டிருந்தது.

நிறைவுக் கூட்டத்தின் போது, அரசு இடங்கள் நிரப்பப்பட்ட பின்னரே நிர்வாக ஒதுக்கீட்டு இடங்கள் நிரப்பப்படுகின்றனவா என்பதைக் கண்டறிவதில் சவால்கள் இருப்பதாக செயலாளர் கூறினார். இருப்பினும், தரவுத்தளத்தை சரிபார்த்த பிறகு பதில் அளிக்கப்படும் என்றும், தேவைப்பட்டால் தொகை மீட்டெடுப்பும் தொடங்கப்படும் என்றும் DADW கூறினார். இது தொடர்பாக துறையால் எடுக்கப்பட்ட நடவடிக்கை குறித்த விவரங்கள் எதிர்நோக்கப்படுகின்றன (ஜூன் 2024).

### 6.2.6 இரட்டை உதவித்தொகைகளைப் பெறுதல் (PMS-SCC மற்றும் சிறுபான்மையினர் உதவித்தொகை)

PMS-SCC தரவை ஆய்வு செய்ததில், 2019-20ஆம் ஆண்டில் 62 SCC மாணவர்கள் PMS-SCC மற்றும் PMS-சிறுபான்மையினர் உதவித்தொகை இரண்டையும் பெற்றிருந்தனர். இதன் விளைவாக, தவறான அனுமதி வழங்கப்பட்டு மத்திய அரசின் PMS-சிறுபான்மையினர் திட்டத்தில் இருந்து ₹4.74 இலட்சம் வழங்கப்பட்டது.

உதவித்தொகை திட்டங்கள் இரண்டும், இரண்டு வெவ்வேறு அமைப்புகள் மூலம் இரண்டு வெவ்வேறு காலக்கட்டங்களில் செயல்படுத்தப்படுகின்றன என அரசு பதிலளித்தது (ஜூன் 2024). மேலும், தற்போதைய நிலையில், தேசிய உதவித்தொகை இணையதளம் மற்றும் தமிழ்நாடு மாநில உதவித்தொகை இணையதளம் ஆகியவற்றுக்கு இடையே எவ்வித ஒருங்கிணைப்பும் இல்லை. எனவே, இரண்டு அமைப்புகளையும் ஒருங்கிணைத்த பின்னரே ஒரே பயனாளியின் பெயர் இரண்டு இணையதளங்களிலும் இடம் பெற்றிருப்பதைக் குறித்த (overlapping) சரிபார்ப்பு சாத்தியமாகும். மேலும், ஒரே பயனாளிக்கு பல உதவித்தொகைகள் வழங்கபடுவதைத் தடுக்கும் பொருட்டு, தணிக்கை குறிப்பின் அடிப்படையில் பயனாளிகளின் விவரங்களைப் பகிர்ந்து கொள்ளும்படி மத்திய அரசுக்கு தெரிவிக்கப்படும் என்றும் விவரங்கள் உறுதிபடுத்தப்பட்டபின் மீட்பு நடவடிக்கை தொடங்கப்படும் என்றும் கூறப்பட்டது.

## 6.3 மாநில அரசின் உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை திட்டம்

அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உயர்கல்வி பயிலும் SC/SCC மாணவர்கள் மற்றும் அரசு விடுதிகள் அல்லாமல் கட்டண விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவர்களின் நலனுக்காக உயர்கல்வி சிறப்பு உதவித்தொகை (Higher Education Special Scholarship - HESS) தமிழ்நாடு அரசால் செயல்படுத்தப்படுகிறது. HESS திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 6.3ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.3: HESS திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| | |
|---|---|
| பயனாளிகள் | • SC/ST/SCC மாணவர்கள் |
| மாணவரின் பெற்றோர்/பாதுகாவலரின் ஆண்டு வருமானம் | • ₹2.50 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். |
| ஓராண்டுக்கான உதவித்தொகை | • கலை மற்றும் அறிவியல் மற்றும் பாலிடெக்னிக்கில் UG படிப்புகள் - ₹7,500<br>• கலை மற்றும் அறிவியலில் தொழில்முறை படிப்புகள் மற்றும் முதுகலை படிப்புகள் - ₹8,000 |

மத்திய நிதியுதவி பெறும் 'போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை திட்டம்' மற்றும் HESS ஆகிய இரண்டும் ஒரே மாதிரியான பலன்களை வழங்கியதால் இரட்டிப்பான பலன்கள் கிடைப்பதுடன், அதிக செலவினத்தையும் ஏற்படுத்தியது. இதனால், HESS தொடரப்படுவதன் அவசியத்தை மறுபரிசீலனை செய்ய தமிழ்நாடு அரசு முடிவு செய்தது (மார்ச் 2017). மதிப்பாய்வின் அடிப்படையில், 2017-18ஆம் கல்வியாண்டில் HESSன் தொடர்ச்சிக்கான ஆணைகளை வெளியிடும் போது (மார்ச் 2018), தமிழ்நாடு அரசு, புதிய HESSஐ அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்களுக்கும், அவற்றின் விடுதிகளில் அல்லது அவற்றால் அங்கீகரிக்கப்பட்ட விடுதிகளில் தங்கும் மாணவர்களுக்கு மட்டுமே வழங்கியது. இது தொடர்பான தணிக்கை குறிப்புகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

### 6.3.1 சுயநிதி பிரிவில்/சுய ஆதரவளிப்பு பிரிவில் படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட HESS உதவித்தொகையின் தவறான அனுமதி

தெரிவு செய்யப்பட்ட அரசு உதவி பெறும் கல்லூரிகள்/கல்வி நிறுவனங்களின் பதிவேடுகள் மீதான ஆய்வு, மூன்று நிறுவனங்களில் சுயநிதிப் பிரிவுகளில் படிக்கும் 232 விடுதி மாணவர்கள், HESS உதவித்தொகைக்கு விண்ணப்பித்து இருந்ததையும் மற்றும் அவை அனுமதிக்கப்பட்டிருந்ததையும் வெளிப்படுத்தியது. இதன் விளைவாக, **அட்டவணை 6.4ல்** கொடுக்கப்பட்டுள்ளபடி, 2017-22 ஆண்டுகளில் தவறாக ₹18.56 இலட்சம் செலுத்தப்பட்டிருந்தது.

**அட்டவணை 6.4: HESSன் தவறான செலுத்தம்**

| வ. எண் | கல்வி ஆண்டு | கல்வி நிறுவனங்களில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை[11] | | | மொத்த மாணவர்களின் எண்ணிக்கை | செலுத்தப்–பட்ட HESS[12] (₹ல்) |
|---|---|---|---|---|---|---|
| | | CIT, CBE | PSG CT, CBE | TCE, MDU. | | |
| 1 | 2017-18 | 18 | 32 | 3 | 53 | 4,24,000 |
| 2 | 2018-19 | 20 | 45 | 19 | 84 | 6,72,000 |
| 3 | 2019-20 | 20 | 57 | 17 | 94 | 7,52,000 |
| 4 | 2021-22 | - | 1 | - | 1 | 8,000 |
| | **மொத்தம்** | **58** | **135** | **39** | **232** | **18,56,000** |

(ஆதாரம்: அந்தந்த கல்லூரிகள் வழங்கிய விவரங்கள்)

நிறைவுக் கூட்டத்தின் போது, அரசு மற்றும் அரசு உதவி பெறும் கல்லூரிகளில் தங்கி படிக்கும் விடுதி மாணவர்கள் மட்டுமே HESSக்கு தகுதியுடையவர்கள் என்று குறிப்பிட்டுள்ள G.O.ல் அரசு உதவி பெறும் கல்லூரிகளின் சுயநிதி பிரிவில் படிக்கும் மாணவர்கள் HESSக்கு தகுதியானவர்களா என்பது குறிப்பிடப்படவில்லை. எனவே, இத்திட்டத்தின் நோக்கை கருத்தில் கொண்டு, மேற்கூறப்பட்ட சுயநிதி பிரிவு மாணவர்களுக்கும் HESSஐ தடையின்றி வழங்க துறை அனுமதித்தது.

மார்ச் 2020 உடன் முடிவடைந்த ஆண்டிற்கான CAGன் அறிக்கையில் இதேபோன்ற தணிக்கைப் பத்தி[13] சேர்க்கப்பட்டுள்ளது, இது, சுயநிதிக் கல்லூரிகளின் மாணவர்களுக்கான தகுதியற்ற செலுத்தங்களை திரும்பப் பெறவும், அரசு உதவி பெறும் கல்லூரிகளின் சுய ஆதரவளிப்பு பிரிவுகளிலுள்ள மாணவர்களின் தகுதிக்கான கொள்கையில் தெளிவு பெறவும் பரிந்துரைத்துள்ளது. இருப்பினும், இவை குறித்து, எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

## 6.4 சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளில் VI மற்றும் XI வகுப்புகளில் மாணவர்களின் சேர்க்கை

அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளின் திறமை மிக்க மாணவர்களை சிறப்புப்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் வகுப்பு XIல் சேர்ப்பதற்கான திட்டத்தை தமிழ்நாடு அரசு 2007ல் அறிமுகப்படுத்தியது. 2008ஆம் ஆண்டில், தமிழ்நாடு அரசு இதேபோன்ற ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருந்தது. இதில் 385 வட்டாரங்களில் இருந்து, ஒவ்வொரு வட்டாரத்திற்கும் ஒரு மாணவர் என்ற விகிதத்தில், வகுப்பு Vல் தேர்ச்சி பெற்ற 385 திறமை மிக்க மாணவர்கள் SC/ST/SCC பிரிவினரிடையே தேர்ந்தெடுக்கப்பட்டு, விடுதியுடன் கூடிய சிறப்புப்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியரின் உரிய பரிந்துரையுடன்

---

[11] (i) CIT, CBE: கோயம்புத்தூர் தொழில்நுட்ப நிறுவனம், கோயம்புத்தூர்; (ii) PSG CT, CBE: PSG தொழில்நுட்பக் கல்லூரி, கோயம்புத்தூர் மற்றும் (iii) TCE, MDU: தியாகராஜர் பொறியியல் கல்லூரி, மதுரை.

[12] ஒரு மாணவருக்கு ஆண்டுக்கு ₹8,000 செலுத்தப்பட்டது.

[13] CAGன் இணைக்கத் தணிக்கை அறிக்கையின் **பத்தி 3.4.1** (2021ஆம் ஆண்டின் தமிழ்நாடு அரசு - அறிக்கை எண் 3).

வகுப்பு VIல் அனுமதிக்கப்பட்டனர். இத்திட்டத்தின் கீழ், மாணவர்கள் வகுப்பு XIIஐ முடிக்கும் வரையிலான செலவை அரசே ஏற்கிறது.

இந்த இரண்டு திட்டங்களின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 6.5ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.5: சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளில் மாணவர்களை சேர்ப்பதற்கான திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| விவரங்கள் | சிறப்புப்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் SC/ST/SCC மாணவர்களின் சேர்க்கைக்கான திட்டங்கள் | |
|---|---|---|
| சேர்க்கப்படும் வகுப்பு | XI | VI |
| ஒவ்வொரு ஆண்டிற்குமான பயனாளிகளின் எண்ணிக்கை | ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் X வகுப்பில் சிறந்து விளங்கும் 10 மாணவர்கள். | V வகுப்பில் தேர்ச்சி பெற்ற, 385 வட்டாரங்களைச் சேர்ந்த 385 மாணவர்கள் |
| தேர்ந்தெடுக்கப்படும் முறை | X வகுப்பு முடிவுகளின் அடிப்படையில்[14]. | ஒவ்வொரு வட்டாரத்திலும் திட்ட அலுவலரால் (SSA) நடத்தப்படும் சிறப்புத் தேர்வு. |
| வருமான வரம்பு | ஆண்டுக்கு ₹2.50 இலட்சம் | ஆண்டுக்கு ₹2.50 இலட்சம் |
| உதவித்தொகை | அதிகபட்ச தகுதி வரம்பு – ₹28,000 | விடுதிக் கட்டணம் ₹15,000 மற்றும் பராமரிப்பு உதவித் தொகை ₹5,000 உடன் கட்டண நிர்ணயக் குழுவால் நிர்ணயிக்கப்பட்ட கல்விக் கட்டணம். |

### 6.4.1 சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளுக்கு வழங்கப்பட்ட அதிகப்படியான ஊக்கத்தொகை

அரசால் அறிவிக்கப்பட்ட திருத்தப்பட்ட திட்ட வழிகாட்டுதல்களில் (அக்டோபர் 2015), அரசால் அமைக்கப்பட்ட 'தனியார் பள்ளிகளின் கட்டண நிர்ணயக் குழுவால்' (Private Schools Fee Determination Committee - PSFDC) நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தின்படி, நிதி உதவி அனுமதிக்கப்பட்டது. மேலும், இதனுடன், ஒரு ஆண்டுக்கு தங்கும் விடுதி கட்டணமாக ₹15,000 மற்றும் பராமரிப்பு கட்டணமாக ₹5,000 வழங்கப்பட வேண்டும். இந்த மாணவர்கள் அனுமதிக்கப்படும் தனியார் பள்ளிகளின் அதிகாரிகள், அந்தந்த DADTWOகள் மூலம் உதவித்தொகைக்கான கோரிக்கையை பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு ஆண்டும், மேற்கூறப்பட்ட கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும், அரசின் அனுமதியைப் பெறும் பொருட்டும், DADTWOகள் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் பட்டியலையும், தனியார் பள்ளிகளுக்குச் செலுத்த வேண்டிய கட்டணத்தையும் தொகுத்து இயக்குநரகத்திற்கு அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட எட்டு மாவட்டங்களில் இத்திட்டத்தை செயல்படுத்துவது தொடர்பான பதிவேடுகளை ஆய்வு செய்ததில், 2017-23 ஆண்டுகளில் 68 சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகள், 509 மாணவர்களுக்கு, அதிகப்படியான கட்டணமாக ₹1.97 கோடி கோரியிருந்தது **(அட்டவணை 6.6)** தெரிய வந்தது. 2018-19 ஆம் ஆண்டில், வழிகாட்டுதல்களை கண்டிப்பாக கடைபிடிக்குமாறும் வழிகாட்டுதல்களில்

14 X வகுப்பு முடிவுகள் வெளியிடப்படும் போது, DADTWOகள், இணையதளம் அல்லது முதன்மைக் கல்வி அதிகாரியிடமிருந்து 10 சிறந்த மாணவர்களின் பட்டியலைப் பெற்று, அவர்களை அதே அல்லது அருகிலுள்ள மாவட்டங்களில் உள்ள சிறப்புப்பெயர் பெற்ற தனியார் பள்ளிகளில் சேர்க்கிறார்கள்.

வழங்கப்பட்டுள்ள அளவிற்கு பள்ளிகளுக்கான கட்டணத்தை கட்டுப்படுத்துமாறும் துறைக்கு அரசு அறிவுறுத்தியிருந்த போதும், கட்டணங்களைக் கட்டுப்படுத்தாமல் அந்தந்த பள்ளிகளால் கோரப்பட்ட முழு கட்டணத்தையும் துறை தொடர்ந்து அனுமதித்து வந்தது.

**அட்டவணை 6.6: 2017-23 ஆண்டுகளில் சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகளால் கோரப்பட்ட அதிகப்படியான கட்டணம்**

| வ. எண் | மாவட்டங்கள் | எண்ணிக்கை | | கோரப்பட்ட அதிகப்படியான கட்டணம் (₹ இலட்சத்தில்) | | | மொத்தம் (₹ இலட்சத்தில்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | கல்வி நிறுவனங்கள் | மாணவர்கள் | கல்வி கட்டணம் | விடுதி கட்டணம் | பராமரிப்புக் கட்டணம் | |
| 1 | சென்னை | 1 | 20 | 1.76 | 0 | 0 | 1.76 |
| 2 | கோயம்புத்தூர் | 10 | 67 | 12.47 | 52.57 | 26.17 | 91.22 |
| 3 | ஈரோடு | 4 | 42 | 2.42 | 4.56 | 0 | 6.98 |
| 4 | கன்னியாகுமரி | 11 | 84 | 17.25 | 0 | 5.35 | 22.61 |
| 5 | பெரம்பலூர் | 5 | 21 | 2.37 | 0.10 | 3.55 | 6.02 |
| 6 | தூத்துக்குடி | 15 | 98 | 17.18 | 3.80 | 0.32 | 21.30 |
| 7 | திருச்சிராப்பள்ளி | 6 | 23 | 0.63 | 4.15 | 1.90 | 6.68 |
| 8 | திருநெல்வேலி | 16 | 154 | 13.07 | 19.25 | 8.00 | 40.32 |
| மொத்தம் | | 68 | 509 | 67.15 | 84.43 | 45.29 | 196.89 |

(ஆதாரம்: தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உள்ள கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட விவரங்கள்)

இதேபோன்ற தணிக்கை பத்தி[15] 2020 மார்ச் உடன் முடிவடைந்த ஆண்டிற்கான CAGன் அறிக்கையில் சேர்க்கப்பட்டிருந்தது, இதில், தனியார் பள்ளிகளால் திரும்பக் கோரப்படும் கட்டணமானது, PSFDCஆல் நிர்ணயிக்கப்பட்ட உச்சவரம்பிற்கு கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான அரசின் உத்தரவுகள் கடைபிடிக்கப்படுவதை DADW உறுதிசெய்ய வேண்டும் என்று பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

மாணவர்களின் நலனுக்காக அதிகப்படியான செலவினம் மேற்கொள்ளப்பட்டதாக அரசு பதிலளித்தது (ஜூலை 2024).

திட்ட வழிகாட்டுதல்களின்படி, PSFDCயால் நிர்ணயிக்கப்பட்ட தொகை மட்டுமே கோரப்பட்டுள்ளதாக கல்வி நிறுவனத் தலைவரிடமிருந்து ஒரு அறிவிப்பைப் பெற்ற பின்னரே, கோரப்பட்ட தொகையை அரசு அளிக்க வேண்டும். இருப்பினும், PSFDCயால் நிர்ணயிக்கப்பட்ட வரம்பிற்கு மேல் கட்டணங்களைச் செலுத்தி அதனை அதிகாரப்பூர்வமாக உறுதிப்படுத்துவது கல்வி நிறுவனங்களுக்கு பயனளித்ததோடு, திட்ட வழிகாட்டுதல்களை மீறுவதற்கு வழிவகுத்தது தணிக்கையால் கவனிக்கப்பட்டது.

**பரிந்துரை 8:**

**PSFDCஆல் நிர்ணயிக்கப்பட்டதை விட அதிக கட்டணம் வசூலிப்பது நடைமுறையில் இருக்கும் வழிகாட்டுதல்களை மீறுவதோடு, தவிர்த்திருக்கக்கூடிய செலவினங்களுக்கு வழிவகுக்கும். இவ்வாறு தவறிழைக்கும் சிறப்புப்பெயர் பெற்ற பள்ளிகள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

15 CAGன் இணக்க தணிக்கை அறிக்கையின் (தமிழ்நாடு அரசு - 2021ஆம் ஆண்டின்அறிக்கை எண் 3) பத்தி **3.4.2**.

## 6.5 முழுநேர Ph.D வல்லுநர்களுக்கான ஊக்கத்தொகை

SC/ST/SCCயைச் சேர்ந்த முழுநேர Ph.D. வல்லுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தை 2013-14 ஆம் ஆண்டில் அரசு அறிமுகப்படுத்தியது. இது, இம்மாணவர்கள் அறிவியல், மனிதநேயம், சமூக அறிவியல், வணிகவியல் மற்றும் சட்டப் பிரிவுகளில் உயர் படிப்புகள் மற்றும் ஆராய்ச்சியினை தமிழ்நாட்டிலுள்ள மாநிலப் பல்கலைக்கழகங்கள்/அரசு/ அரசு உதவிபெறும் கல்லூரிகளில் மேற்கொள்வதற்கான வாய்ப்பினை அளிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. குடும்ப வருமானம் ஆண்டுக்கு ₹8 இலட்சத்துக்கு[16] குறைவாக இருப்பதே இதற்கான வருமான வரம்பு ஆகும். வழங்கப்பட்ட ஊக்கத்தொகை ஆண்டுக்கு ₹1 இலட்சம்[17] ஆகும்.

### 6.5.1 SC/ST/SCCயைச் சேர்ந்த Ph.D வல்லுநர்களுக்கு இரட்டை பலன்கள் அளித்தல் - Ph.D. ஊக்கத்தொகை மற்றும் போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகை

SC/ST/SCCயைச் சேர்ந்த முழுநேர Ph.D வல்லுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்கான திட்டத்தின் நோக்கங்கள் குறித்து ஏற்கனவே **பத்தி 3.9.3ல்** கருத்துரைக்கப்பட்டுள்ளது.

Ph.D. வல்லுநர்களுக்கு வழங்கப்பட்ட ஊக்கத்தொகை தொடர்பான பதிவுகள் மீது ADWன் இயக்ககத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், 11 வல்லுநர்கள் Ph.D. ஊக்கத்தொகை மற்றும் PMS-SCC ஆகிய இரண்டையும் பெற்றிருந்தது வெளிப்படுத்தப்பட்டது (**இணைப்பு 3.2**).

ஊக்கத்தொகை/உதவித்தொகை கோரல்களின் நகலாக்கம் கவனிக்கப்பட்டு, கூடுதலாக வழங்கப்பட்ட தொகையின் மீட்புக்கான உத்தரவுகள் வழங்கப்பட்டன என்றும், முழுப் பட்டியலும் நகல் நீக்கம் செய்யப்பட்டது என்றும் அரசு பதிலளித்தது (ஜூலை 2024). திட்டம் மறு ஆய்வு செய்யப்படும் என்று நிறைவுக் கூட்டத்தின் போது உறுதியளிக்கப்பட்டது.

**பரிந்துரை 9:**

**SC/ST/SCC மாணவர்களுக்கான போஸ்ட் மெட்ரிக் உதவித்தொகையின் பயனாளிகளாக இருந்தாலும், தகுதியான Ph.D. வல்லுநர்களுக்கு ஊக்கத்தொகை வழங்க திட்ட வழிகாட்டுதல்களை அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும்.**

## 6.6 மாணவிகளுக்கான சிறப்பு ஊக்கத்தொகை திட்டம்

மாணவிகள் படிப்பை இடைநிறுத்தம் செய்யாமல் தொடர்வதை ஊக்குவிக்கவும், அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் SC/ST மாணவிகளின் 100 விழுக்காடு சேர்க்கையை உறுதி செய்யவும், அவர்களுக்கான சிறப்பு ஊக்கத் திட்டத்தை அரசு செயல்படுத்தி வருகிறது. இத்திட்டம், 1994-95 ஆம் ஆண்டு முதல் வகுப்பு III முதல் VI வரை படிக்கும் SC/ST மாணவிகளுக்காக செயல்பாட்டில் இருந்து வருகிறது. இத்திட்டம்

[16] 2020-21 வரை: ₹2.50 இலட்சம்.
[17] 2020-21 வரை: ஆண்டுக்கு ₹50,000.

செப்டம்பர் 2013ல் வகுப்பு VIII வரை நீட்டிக்கப்பட்டது. திட்டத்தின் முக்கிய அம்சங்கள் **அட்டவணை 6.7ல்** கொடுக்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 6.7: SC/ST மாணவிகளுக்கான சிறப்பு ஊக்கத் திட்டத்தின் முக்கிய அம்சங்கள்**

| | |
|---|---|
| பயனாளிகள் | • அரசு/அரசு உதவி பெறும் பள்ளிகளில் படிக்கும் SC/ST மாணவிகள் |
| பெற்றோரின் வருமான வரம்பு | • வருமான வரம்பு இல்லை |
| ஊக்கத்தொகை | • வகுப்பு 3 முதல் 5 வரை : ஆண்டுக்கு ₹500<br>• வகுப்பு 6 : ஆண்டுக்கு ₹1,000<br>• வகுப்பு 7 மற்றும் 8 : ஆண்டுக்கு ₹1,500 |

## 6.6.1 திட்டப் பலன்கள் SC/ST மாணவிகளால் பெறப்படாதது

*சமக்ர சிக்ஷா அபியானின்* (SPD, SSA) மாநிலத் திட்ட இயக்குநரிடமிருந்து பெறப்பட்ட தரவுகள் மற்றும் ADWன் இயக்ககத்தின் தரவுகளின் மீதான ஆய்வு, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் வகுப்பு III முதல் VIII வரை கல்வி கற்ற SC/ST வகுப்பைச் சேர்ந்த 22 விழுக்காடு மாணவிகள், 2018-23 காலகட்டத்தில், சிறப்புச் ஊக்கத்தொகைகளைப் பெறவில்லை என்பதை வெளிப்படுத்தியது (**அட்டவணை 6.8**).

**அட்டவணை 6.8: 2018-23 காலகட்டத்தில் சிறப்பு ஊக்கத்தொகை வழங்கப்படாத SC/ST மாணவிகளின் விழுக்காடு**

| வகை | SC/ST மாணவிகளின் எண்ணிக்கை | | | |
|---|---|---|---|---|
| | SPD, SSA தரவுகளின்படி | வழங்கப்பட்ட ஊக்கத்தொகை | ஊக்கத்தொகை வழங்கப்படாதவர்கள் | |
| | | | மாணவிகளின் எண்ணிக்கை | விழுக்காடு |
| SC | 27,05,812 | 21,70,581 | 5,35,231 | *20* |
| ST | 3,31,341 | 2,12,783 | 1,18,558 | *36* |
| **மொத்தம்** | **30,37,153** | **23,83,364** | **6,53,789** | ***22*** |

(ஆதாரம்: SPD, சென்னை மற்றும் ADW ஆணையரகத்தால் வழங்கப்பட்ட விவரங்கள்)

இத்திட்டம், தகுதிக்கான வருடாந்திர வருமான வரம்பினைக் கொண்டிராவிடினும், விண்ணப்பப் படிவத்தில் ‘வருடாந்திர குடும்ப வருமானம்’ என்ற வரிசை இருந்தது. அது மாணவர்களால் நிரப்பப்பட்டு வருவாய் அதிகாரிகளால் சான்றளிக்கப்பட வேண்டும். இது மாணவர்கள்/பெற்றோர்கள் மற்றும் கல்வி நிறுவனங்களை தவறாக வழிநடத்தி, திட்டத்திற்கு விண்ணப்பம் செய்வதில் இருந்து அவர்களைத் தடுத்துள்ளதை தணிக்கை கவனித்தது. இது பள்ளிகளின் மீதான சோதனை சரிபாரிப்பின் போது உறுதி செய்யப்பட்டது.

கோயம்புத் மாவட்டத்தில், 2017-23 ஆண்டுகளில் தெரிவு செய்யப்பட்ட ஏழு பள்ளிகளின்[18] மீதான சோதனைச் சரிபார்ப்பில், 1,385 SC/ST மாணவிகளுள், 1,129 மாணவிகள் (82 விழுக்காடு) ஊக்கத்தொகைக்காக விண்ணப்பித்திருந்தது தெரியவந்தது. மீதமிருந்த 256 மாணவிகள் (18 விழுக்காடு), தங்களின் சாதிச் சான்றிதழ்கள் மற்றும் வங்கி

[18] (அ) மாநகராட்சி HSS, ரத்தினபுரி; (ஆ) GGHS, வால்பாறை; (இ) GHS, கினத்துக்கடவு; (ஈ) GHSS, நாயக்கன்பாளையம்; (உ) GHSS, சுண்டக்காமுத்தூர்; (ஊ) GTR HSS,ஆனைகட்டி மற்றும் (எ) GTR HS, மாவுத்தம்பதி.

விவரங்களைச் சமர்ப்பிக்காததால், அவர்களால் விண்ணப்பிக்க இயலவில்லை என்று இப்பள்ளிகளின் முதன்மை ஆசிரியர்கள் தெரிவித்தனர் (டிசம்பர் 2023).

சமூக அளவில், விழிப்புணர்வு நடவடிக்கை மற்றும் ஊக்குவிப்புத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்படாததால், குறைந்த எண்ணிக்கையிலான மாணவர்களே இத்திட்டத்தில் பயனடைய முடிந்ததேயன்றி திட்டத்தின் நோக்கம் அடையப்படவில்லை.

